7.வது அத்தியாயம்

ஆலம்-மிதால் சூட்சுமலோகம்

முதற் குறிப்பு அருபத்தில் 'தாத்து'. 'சிபாத்து' அஃயான் ஆகியவற்றைப் பொதிந்து கொண்டிருக்கிறது. அதாவது இதில் 'தாத்து' ஆகிய தத் சொரூபம் இன்ன தென்று தெளிவுபடுத்தப்படாமலும். அறிவிலேயுள்ள கோலங்களும் ஒன்றைவிட்டு ஒன்றைவிடாமலும். அந்த 'அஃயான்' ஆகிய அறிவு கோலங்கள் வெளிப்படாமலும் இருக்கும் தொகையான நிலையாகும் இந்த நிலையைத்தான் 'வஹ்தத்து' ஆகிய ஹகீகத்து முஹம்மதி என்றழைக்கிறோம்.

இரண்டாங் குறிப்போவெனில் அவற்றை 'ஹக்கு' வகை வகையாகவும். ஒன்றைவிட்டு ஒன்றை வகுத்தும் அறிந்த வகையான நிலையாகும். இவைகள் அறிவில் வகுக்கப் பட்டு தெளிவாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையைத்தான் 'ருபூபியத்து' என்றும் இரட்சகத்தன்மை என்றும். 'ஹகீகத்து இன்ஸானி' என்னும் மானிடனின் அகமியம் என்றும் ஆலம்-மிதால் ஆகிய சூட்சுமலோகம் என்றும் பல வாறுயழைக்கப்படுகின்றது இந்த நிலையில் 'அஃயான்' அறிவு கோலங்கள் தங்களைத்தானே ஒன்றைவிட்டு ஒன்றை பிரித்து தெளிவுடன் அறிகின்றன இதை ஒருவாறு ஓர் வித்தின் வித்துடைய உபமானத்தால் விளக்கலாம். ஓர் வித்தின் அறிவு தன்னை அறிதலே முதற் குறிப்பை ஒத்திருக்கிறது தனது அறிவிலே அந்த வித்து தன் தத்துவங்களான வேர், அடிமரம், கிளைகள். இலைகள். பூக்கள், பழங்கள் ஆகிய வற்றைக் காண்பது இரண்டாம் குறிப்புக்கு ஒப்பாகும். இவைகள் உள்ளமையிலன்றி அறிவில் மட்டுமே இவ்வேற்று மைகளைப் பெற்றிருக்கின்றன. இவைகள்தான் 'சூபிய்யாக் களால் அஃயான் ஆகிய அறிவு கோலங்கள் அல்லது வஸ்துக் களின் அகமியங்கள் என்றும், தத்துவஞானிகளால்

ஆலம்—மிதால்...சூட்சுமலோகம்

'மாஹியத்து' என்னும் தத்துவாதிகள் என்றும் அழைக்கப் படுகின்றன இவைகளுடைய வெளிப்படையாகத் தோற்ற மளித்தலின் வகை விபரங்களை ஆலம்-அர்வாஹு (ஆன்ம லோகம்), ஆலம் மிதால் (சூ ட் சு ம லோகம்), ஆ ல ம் ஷஹாதத்து (சடலோகம்), இன்ஸான் (மானிடன்) என்பதாகப் பிரிக்கிறது.

முதலில் அஹதியத்தில் 'தாத்து' என்னும் தத்சொரூபம் 'சிபாத்து' (பண்புகள்), 'இஃதிபாரத்து' (ஹேரஸ்யம்) ஆகியவற்றினையும், பூர்ணத் தன்மையையும், உ ள் ள மை மையயுங்கூட கருதப்படுவதில்லை. அது மு ந் தி ய தின்றிய முந்திய தாயும், பிந்திய தின்றிய பிந்தியதாயுமிருக்கிறது.

சம்பூர்ணம் 'ஹக்கு'க்கு உரியது. அவனுடைய சம்பூர்ண தோற்றமே இப்பிரபஞ்சம் நம்முடைய தோற்றமும் பண்புகளும் அவனுடைய பண்புகளின் ஒரு சாய்கையிருக் கிறது. அதனாலேயே அவை பரிபூர்ணமின்றியதாயிருக்கிறது.

தன்னுடைய 'கத்ரா'வான எண்ணங்கள் பல திக்கிலும் செல்வதாக ஒரு 'முரீது' தன்னுடைய 'பீர்' இடம் ஒரு தடவை குறையிருந்து கூறினார். எங்கெங்கு அந்த 'கத்ரா' செல் கிறதோ அங்கு இறைவன் இருக்கிறான் என்று பீர் பதிலி றுத்தார். 'பஜனமா துவல்லூ பதம்ம வஜ்ஹுல்லா(ஹ்)'. நீங்கள் எங்கெங்கு திரும்பினும் அங்கு இறைவனது வதன மிருக்கிறது (குர்ஆன்) ஹாஹுத்'திலிருந்து 'லாஹுத் துக்கும், 'லாஹுக்'திலிருந்து 'மலகூத்'துக்கும் 'மலகூத்' திலிருந்து 'நாசூத்'துக்கும் சதா 'கத்ரா' இறங்கி கொ ண் டிருக்கும் 'கத்ரா புறப்படுவதற்கு முன் 'ஹாஹுத்தாயிருக் கிறது. புறப்பட்டதும் அது 'லாஹுத்'தாகின்றது. அறிவில் அது ஒரு கோலங் கொண்டதும் அது ஒரு 'மலகூத்'தாகிறது. வெளியில் அது சடத்தைப் பெற்றதும் அது 'நாசூத்'தாகிறது.

கண்டிப்புகள் எண்ணற்றது, ஆனால் விளங்கிக் கொள்வதற்கு ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) வஹ்தத்து இது முதல் தைபு என்னும் மர்மப்பொருள்.

(2) வாஹிதிய்யத்து - இது இரண்டாவது 'தைபு' என்றும் மர்மப் பொருள். முதற் குறிப்பில் 'அஃயான்' கூட இல்லாமையாயிருக்கிறது. 'கானல்லாஹு வலம் யகுன் மஅஹு ஷைஉன்' (ஹதீது) ''அல்லா(ஹ்) உண்டாயிருந் தான். அவனுடன் யாதொன்றுமில்லை''. இங்கு வஸ்துக்கள் 'அஃயான்' ஆகக்கூட அறிவில் தரிபட்டிருக்கவில்லை. இரண்டாங் குறிப்பில் 'அஃயான்' (அறிவு கோலங்கள்) 'ஹக்கு'டைய அறிவில் தரிபட்டிருக்கின்றன. ஆனால், தங்களுடைய இருப்பையே தாங்கள் அறியாத நிலைமையில் தான் தரிபட்டிருந்தன; மேலும் அவைகள் ஒன்றோ டொன்று பேதப்பட்டு நின்றன, அதாவது தங்களுக்கு மறைந்தும் ஹக்கு ஒருவனால் மட்டும் அறியப்பட்டும் விளங்கின.

(3) 'அர்வாஹு' என்னும் ஆன்மாக்கள் இதில் 'அஃயான்' தங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று பாகுபாடுடைய தாயிருக்கும் நிலை.

(4) 'அம்தால்' என்னும் சூட்சுமம். இதில் வஸ்து களுடைய சூட்சும அணுக்குள் வெளிப்படையாகத் தோன்றலாகும்.

ஆலம் மிதால் சூட்சமலோகம்

(5) அஜ்சாம் என்னும் சடம்:- இதில் அந்த அணுக்கள் திரட்சிப் பெற்று ஜடப் பொருளாய்த் தோற்றுதலாம்.

(6) இன்ஸான் காமில்:- இதுதான மேற் சொல்லிய சகல நிலைகளையும் தன்னுள் அடக்கிச் சேகரித்துக் கொண்ட பூர்ணப் பதவியாகும். அல்லா(ஹ்)வென்னும் 'இல்மு' சம்பூர்ணமான பண்புகளைப் பெற்றுள்ள சகல 'இல்மு'களையும் பொதிந்து கொண்ட சேகரமான 'இல்மு' ஆக இருப்பது போல் 'வஹ்தத்து' முதல் 'இன்ஸான்காமில் வரையுள்ள எல் நிலைகளையும் ஒரே 'அஹது.வாக' இருந்து தன்னுள்ளாடிக் கொண்ட சேகரமான பதவியே 'இன்ஸான் காமிலாகும்.

8-வது அத்தியாயம்

ஆலம் .. அஜ்ஸாம் ... சடலோகம்

இருகச் சாத்தப்பட்ட கதவுகளுக்குள்ளே அந்த சக்ராதிபதி இருந்தான் திடீரென 'ஆதமு'டைய ஆடையை அணிந்தவனாக அவன் வெளியில் புறப்பட்டான். இதுவோ, 'சிபாத்து' (பண்புகள்) அஸ்மா (திருநாமங்கள்) ஆகிய போர்வையைப் போர்த்திக் கொண்டு அவன் தன்னைத் தான் தோற்றுவித்தான்,

ஒரு ஹதீதுபடி, நான் அவ்வியக்த புதையலாயிருந்தேன்; என்னை அறியப்பட நான் ஆசித்தேன். அவ்வாறு அறியப்பட இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தேன். அதாவது முதற் குறிப்பு தொடுத்து மண்மண்டலம் வரை தோற்றலானதேயாகும்.

ஒரு கவிஞர் கூறுவதாவது:- அந்த அகண்ட பரிபூர்ண 'தாத்து' ஆகிய 'சுத்சொரூபம்' தனது சொந்த வணக்கத்தின் திருவிளையாடலைப் பார்க்க ஆதமுடைய கோலத்தை எடுத்துக் கொண்டு வேட்டைக்கு வெளியில் வந்தது 'கலகல் இன்ஸான அலா சூரதிற் றஹ்மான்) (குர்ஆன்) அவன் மானிடனை 'ரஹ்மான்' என்ற கோலத்தில் சிருஷ்டித்தான் அல்லது சிர்ருள்லிஅபீஹி தனையனே தந்தையுடைய மர்மமாகும் தனக்கு மட்டும் ஹக்கு தோன்றும் போது பிரபஞ்சம் அகமியப் பொருளான சத்தாக மறைந்திருக்க, ''ஹக்கு'' அதன் கோலமாக விளங்கினான்; பிரகாசம் கோலமாக தோன்றும் வேளை 'ஹக்கு' அகமிய பொருளாகிய சத்தாயிருக்கிறான். பிறந்து வெளிவராத குழந்தையாக தனயன் மறைந்திருக்கும் வேளை தந்தை வெளியீடாயிருக்கிறான். பிறந்த உடன் அது வெளீடானதும், அக்குழந்தையின் அகமியமாக தந்தை ஆகிவிடுகிறான் தந்தையின் கோலம் தனயனின் கோலத்தின் அகமியமாயிருக்கிறது. இவ்வாறு

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

இவ்விரண்டும் ஒரே கோலமும், ஒரே சத்துமாகிய அகமியமா யிருக்கிறது. எனவே, அதேகம் என்பது 'இஃதிபார்' ஆகிய கற்பனையில்தான் இருக்கிறது. தந்தையிலே தனயன் இருக்கும்பொழுது தந்தையுடைய அகமியமே தனயனும். அது வெளித் தோன்றியதும் அந்த தந்தையின் கிளையாகத் தோற்றமளிக்கிறது. மரத்தில் விதை மறைந்திருக்கிறது. விதையில் மரம் மறைந்திருக்கிறது.

''இல்மெ ஹக்தர் இல்மெ சூபிரும் வ்வது''(மத்னவீ) சூபியின் அறிவில் 'ஹக்கு'டைய அறிவு மறைந்திருக்கிறது. எனவே 'ஹக்கை'ப் பார்ப்பவன் தன்னைப் பார்ப்பதில்லை. ஆகையால் ('ஹக்கு'டைய சமூகத்தில் வேறாக) நீ என்பது இருக்கும்பொழுதுதான் 'பனா'வென்றும் இன்மையாக்கல் தேவையாகிறது 'வேறு' என்பது இன்மையானதாகும். 'அனா அஹ்மது ன்பிலாமீன்' — நான் மீம்மின்றிய 'அஹமது' வாயிருக்கிறேன். அதாவது 'நான்' 'அஹது'வாக இருக்கிறேன் என்று நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதாகக் கூறப்படுகிறது.

முதல் தோற்றத்தில் 'ஹக்கு' பிரபஞ்சத்தின் கண்ணாடியாயிருக்கிறான். இரண்டாந் தோற்றத்தில் பிரபஞ்சம் 'ஹக்கு'டைய கண்ணாடியாயிருக்கிறது. அஃயான் ஆகிய வஸ்துக்களின் கோலங்கள் கண்ணாடிகளாகவும், 'ஹக்கு' அவற்றில் தோன்றியுமிருக்கிறான். அல்லது ஹக்குடைய 'நூர்' ஆகிய ஜோதி கண்ணாடியாயும், 'அஃயான்' கோலங்களாயும் இருக்கின்றன இந்த வொவ்வொரு கண்ணாடியிலும் 'ஹக்'கைத் தவிர ஒன்றுமில்லை.

('ஹக்கு' அளவில்) அழைப்பதற்கு ஒரு சம்பூர்ண மனிதன் தேவைப்படுகிறது. 'ஸுலூக்' ஆகிய முழுமுட்சுத் துவத்தின் சகலநிலைகளையும் தன்னுள்ளடக்கிக் கொண்ட பக்தியாளரான ஞானியாகிய 'ஆஷிக்' என்னும் பேரின்ப காதலர் தன்னைப் பின்பற்றும் மானிட கோடிகளை தனது வழியில் நடத்தாட்டுபவராய் நற்குண, நற்செய்கை

களையுடையவராய்த் தேவைப்படுகிறார். எனவே, ஷாபிஸ் அவர்கள் கீழ்வரும் கருத்துக் கொண்டு பாடியிருக்கிறார்கள்:- 'முமுட்சு' ஆகிய ஒருவன் யாரெனில், தனது முடிவான எல்லையின் நடுவேயிருக்கும் நிலைமைகளின் ஆசாரங்களையும் சடங்குகளையும் தானே அறியாதவனாய் யிருக்கும்.

நமது இருப்பு அவனது இருப்பின் பிரதிபிம்பமாகும். நம்முடைய பார்வை அவனுடைய பார்வையின் பிரதிபிம்பமாகும் நான் எனது 'நப்ஸை' என்னுந் தன்மையைப் பார்க்கையில் 'ஹக்கு' தனது 'தாத்து' என்னும் தத்சொரூபத்தைப் பார்க்கிறான் இவ்வாறே 'ஹக்கு' தனது 'தாத்து' என்னும் தத்சொரூபத்தைப் பார்க்கையில் நான் எனது நப்ஸை என்னும் தன்மையைப் பார்க்கிறேன் 'எனவே, 'மன் அரப நப்ஸஹு பகத் அரப றப்பஹு' தன்னையறிந்த ஒருவன் தன்றப்பினையே அறிந்தவனாம் ஒருவன் தனது 'இருப்புத் தன்மை'யை அறிதலே 'ஹக்கை' அறிவதாகும் அதாவது குறித்த ஓர் தோற்றத்தில் 'தாத்து'டைய அறிவு தோற்றத்தின் அறிவு எவ்வளவோ அவ்வளவாகயிருக்கிறது 'தாத்'தும் 'நப்ஸு'ம்' ஒரே அகமியத்தின் நாமங்களாகும். 'நான் எனது 'றப்'பை என் 'றப்'பைக் கொண்டே அறியலானேன். 'அரப்து றப்பி பிறப்பி' என்று ஒரு ஹதீது இருக்கிறது 'கைர்' என்ற வேற்றுமையின் குறுக்கீடு இன்றியே 'ஹக்கு' தன்னாலேயே தனக்குத்தானே அறியப்படுகிறான். அன்னஹு அலாகுல்லி ஷையின் ஷஹீது''. ஒவ்வொரு வஸ்தையும் 'ஹக்கு' சாட்சியாக நின்று அறிகிறான். ஞானமும், நேயமும் ஒன்றே ஒன்று 'ஹக்க'ும் 'ஹக்கை' அறிபவனும்' ஹக்கே' 'ஹக்க' 'மா அரப்நாக ஹக்க மஃரிபதிக' யாங்கள் உன்னை உனது அறிவோரும் அறிவுக்கு அறிந்திடவில்லை' என்று ஒரு ஹதீது கூறுகிறது அவனுடைய 'இருப்பு' அல்லது 'தன்மை' சம்பந்தப்பட்ட ஞானம் அந்த 'தன்மை'யை மட்டும் தழுவி நிற்கின்றது. மூஸா (அலை) அவர்கள்

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

இறைவனைக் காண்பதற்கு ஆசித்து அவனை இறைஞ்சினார்கள். அவ்வாறான 'கண்டித்த பார்வை' 'கைர்' என்னும் பிற பொருளை விட்டும் துண்டிக்கப்பட்டு விட்டபடியால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பதிலோ 'லன் தரானி' — நீர் என்னைப் பார்க்க மாட்டீர் என்பதாகும். ''லாய றல்லாஹு கைருல்லா(ஹ்) — அல்லா(ஹ்)வின் வேறு (அல்லாஹ்)வைப் பார்க்க முடியாது. 'வேறு' என்பதற்கு ஓர் தனி உள்ளமை அல்லது இருப்பு' இல்லாதபடியால் அதற்கு ஒரு பார்வையுங் கிடையாது ஹக்கு மட்டும் பார்ப்பவனாக ஆயிருக்க 'வேறு' என்னும் பிற வஸ்து குருடாயிருக்கிறது.

எனவே அறிந்து கொள்வாயாக! சகல கண்டப் பொருள்களும் (சித்தாயினுஞ் சரி. சடமாயினுஞ் சரி) உனது உறைகள் அல்லது ஆடைகளாகும். 'குன்துகன்ஸன்மக்பிய்யன் ப அஹ்பப்து அன் உஃரிப பகலகல் கல்க' நான் அவ்வியக்தபுதையலாயிருந்தேன், என்னை அறியப்பட நான் ஆசித்தேன். 'கல்கு' ஆகிய (பிரபஞ்ச) சிருஷ்டிகளைக் கற்பித்தேன். இந்த காதல் அல்லது ஆசை அங்கு இருந்திராவிடில் 'அவ்வியக்த' புதையல் (ஒருகாலும்) 'வியக்த. மாகியிராது, பேரின்ப காதல் மறைந்த புதையலின் கண்ணாடிகளிலே தன்னைத் தோற்றுவித்து. தனது பல திறப்பட்ட பண்புகளைக் கண்டு தன்னைத் தானே புகழ் கூறிக் கொண்டது.

வஸ்துகளுள் மிகவும் வெளியீடாயிருப்பது 'ஹக்கு டைய உள்ளமையாயிருக்கிறது. 'நூருன் அலாநூரின் யஹ்தியல்லாஹு பிநூரிஹி மன்யஷாஉ' ஜோதியின்மீது ஜோதி, தான் நாடியவர்களைத் தனது ஜோதியைக் கொண்டே 'ஹக்கு' நேர்வழியிலாக்குகிறான். ''அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல் அர் ளி'' 'ஹக்கு' வானங்களினுடையவும், பூமியினுடையவுமான ஜோதியாயிருக்கிறான். பிரபஞ்சத்தின் (தனியான) கற்பனை உள்ளமை 'ஹக்கு'டைய யதார்த்த உள்ளமையின் இன்மையாக்கப்பட்டிருக்கின்றது.

'ஹக்கு'டைய உள்ளமை மற்ற வஸ்துக்களின் உள்ளமையைக் காட்டிலும் அதிக வெளியீடானது. அதுவே

பார்க்கிறதும், பார்க்கப்படுவதுமாயிருக்கின்றது. ஒளியின்றியே ஒளிவானது பார்க்க முடியாது அது எதனைப் பார்க்கின்றதோ அதுவும் ஒளிவாகிய ஜோதியே. வஸ்துக்கள் தாங்களாக இருளாயிருக்கின்றன. பார்ப்போன் சூரிய வெளிச்சத்தினால் பார்க்கிறான். பார்க்கப்படும் வஸ்தும் அதே வெளிச்சத்தினாலேயே பார்க்கப்படுகிறது. எனவே (வஸ்துக்களின்) உள்ளமைகள் யாவும் இருள்களே அவற்றின் உள்ளமைகள் அவனது உள்ளமைகளினின்றும் கடன் வாங்கப்பட்டது போன்றதே. அவை அவனிடமிருந்தளிக்கப்பட்ட அமானிதப் பொருள், அவன் தான் பார்ப்போனும், பார்க்கப்படுவோனும், அறிபவனும், அறியப்படுவோனுமாகும் நீயோ ஒரு 'அதம்' ஆகிய இன்மைப் பொருள் 'குல்லுஷைஇன் ஹாலிகுன் இல்ல வஜ் ஹஹு' அவனது வதனம் (உள்ளமை) தவிர ஒவ்வொரு வஸ்தும் இன்மையானதே ஒருவன் உப்புக்குழியிலிறங்கி உப்புமாயமாக மாறுகிறான். எதற்கு உள்ளமையுண்டோ அதற்கு தோற்றமுண்டு. 'சாலிக்' ஆகிய முமுட்சுடைய 'நான்' என்னுந் தன்மை 'ஹக்கு'டைய அவன் என்ற படர்க்கை ஒருமையாயிருக்கிறது எனவே நீ 'நான் பிர்மம் (ஹக்கு) ஆகயிருக்கிறேன்' என்றாலும் அல்லது 'அவன் பிர்மம் (ஹக்கு) ஆகயிருக்கிறான்'' என்றாலும் இரண்டும் சமமானதே.

இருப்பது ஒரே அகமியப் பொருள்தான். அவனே 'சாலிக்' என்னும் முமுட்சுவாகும் அவன் தன்னில் தானே யாத்திரையாகி ஏறுவதும், இறங்குவதுமாக இருக்கிறான். அடிவேரிலிருந்து கிளைகளுக்கு மேலேறிச் செல்வதில் அவனே காதலாகிறான் கிளைகளிலிருந்து அடிவேருக்கு கீழிறங்கி வருவதில் அவனே காதலிக்கப்பட்டு காதலியாகிறான் அவன் தனது 'தன்மை'யைத் தனது தன்மையின் மீதே தொழுகச் செய்கிறான். அவன் சகல கிளைகளிலும் தன்னுடைய அந்த 'தன்மை'யைக் காண்கிறான் முடிவில் பழத்தின்பால் மீளுகிறான் சகலவற்றிலும் ஒன்றே ஒன்றான அகமியத்தைத்தான் பார்க்கிறான்.

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

'கைரியத்து' (வேற்றுமை) என்பது 'தாத்'துடைய 'வஹ்தத்து' என்னும் ஏகத் தன்மையின் தொழில்படும் பண் பாகும். சகல தொழில்படும் பண்புகளும் இந்த வேற்றுமைப் பொருளை வெளிப்படுத்துகின்றன. 'வேற்றுமை'யும் அனேக தன்மையுமின்றி வெளிப்பாடு என்னும் தோற்றம் உண்டாக முடியாது. எனவே, ஏகத்தன்மையாகிய 'வஹ்தத்து உண்மை யானது அனேகத் தன்மையாகிய 'கத்ரத்து' மெய்யானதும் கற்பனையானதுமாகும்.

'தாத்து' ஆகிய தத்சொருப நிலையில் தத்துவாதிகளும், வஸ்துக்களின் யோக்கியதைகளும் 'தகுதி'களும் 'தாத்து' தானுகவே இருக்கின்றன அங்கு அவற்றின் அநேகத் தன்மை கிடையாது 'தாத்து' 'தாத்து'தானுகவேயிருக்கிறது. அறிவு உதித்த காலே இந்த தத்துவாதிகளும், தகுதிகளும் அறியப்பட்டவையாயிருந்தன. (அவர்களுக்கிடையில் வேற்றுமை ஏற்பட்டு) வெளிப்படைத் தோற்றமுண்டானதும் அவை 'அஃயான்' என்னும் சிருஷ்டிப் பொருளின் அசுமியங் களாக ஆகி முடிவில் படைப்பொருள்கள் என்ற பெயரையும் அடைந்தன. இந்த நிலையில் அறிவில் தோன்றிய 'அநேகத் தன்மை' யதார்த்த அநேகத் தன்மையாக வெளித் தோன்றி யது. ஏனெனில் 'தாத்து' ஆகிய 'தத்சொருபம்' 'தஜல்லி' யாத்துடைய கணக்கற்ற ஆடைகளில் தன்னைத் தோற்றுவித்து தாத்தை யொத்த கணக்கற்ற தோற்றங்களான 'தாத்துக்' களான 'அஃயான்'கள் ஒரே யதார்த்த 'தாத்'திலிருந்து தோன்றியவையாகும். இவை நித்தியகால பரியந்தம் இவ்வாறேதானிருக்கும். எனவே, சுவனபதியிலிருப்போர் நித்திய வாழ்வையடைவர். அவர்களுடைய அநுமதிச்சீட்டு இவ்வார்த்தைகளால் குறிக்கப்பட்டிருக்கும். ''மினல் ஹையில்லதீ லாயமூத்து இலல் ஹையில்லதீ லாFபூத்து'' ''மரணமற்ற ஜீவிப்புடையவனிடமிருந்து நாசமற்ற ஜீவிப் புடைவோன் அளவில்''. ஆகவே 'தாத்து' முதலில் ஒன்ரு மிருந்து அநேக 'தாத்து'களாக ஆகினது சொந்த தன்மை யினின்றும் நழுவி விட்டது என்று (ஒருகாலும்) நீ நினையா திருப்பாயாக இந்த தோற்றத்தின் மாத்திரமான 'அநேகம்'

அஸ்பாவே அனல்ஹக்

பூர்வ காலமுதல் நித்திய காலம்வரை யதார்த்தமான அநேகம் போல் தோன்றிக் கொண்டிருக்கிறது. 'கஷ்பு' ஆகிய உண்மையான ஆத்மீகப் பார்வையில் அது 'கற்பனை'. அநேகமாயிருக்கின்றது. ஒரு வஸ்து பல்வேறு தன்மைகளைப் பெற்றிருப்பதால் அது அநேக வஸ்துகளாய் ஆகவில்லை. தனது அலையாதிகளால் ஒரு சமுத்திரத்தின் தண்ணீர் பலதாக ஆகிறதில்லை. எல்லையற்ற நற்பண்புகளைக் கொண்ட அவனது 'தன்வீற்' (துலக்கம்) பக்தியின் ஆட்சிக்குள் அடங்கிவிடுவதில்லை 'கோற்றமை' வஸ்துக்களின் குறைகள் பூர்ணமற்ற தன்மைகள் ஆகியவற்றை விட்டும் அவன் பரிசுத்தமாயிருக்கும் தூயநிலையே அகண்டமாகியதும், அகண்டது மானதுமான 'தன்வீற்' எனப்படும். மிக நெருங்கிய வானவர்களும் அவனுடைய 'தன்வீறை' பற்றி அறியாதவர்களாயிருக்கிறார்கள் இந்த நிலையில் தன்னுடைய 'காத்து'டன் 'ஹக்கு' கூட யாதொரு அறிவின் தொடர்பும் வைத்துக் கொண்டிருப்பதில்லை. தன்னை மறந்தும் ஒளியாக்கியும் இந்த நிலையை 'ஆரிபு' ஆகிய ஞானி அடைகிறார். முதல் குறிப்பு கொடுத்து மண்டலம் வரை அவர் சுற்றி திரிகிறார் இந்த சுற்றுதலாகிய திரிதலிலே அவருடைய மறதி நீங்கி விடுகிறது.

'நாம் கோலங்களாகவும்; 'ஹக்கு' அகமியமாகவும் இருக்கிறான்:

பிரபஞ்சத்தின் உயிராக 'ஹக்கு' இருக்கிறான் பிரபஞ்சம் அந்த உயிரின் உடலாயிருக்கிறது. ஒன்று 'தௌஹீ'தாகிய ஏகத்துவமும், மற்றொன்று வின்வார்த்தைகளுமாகும் அகண்டமின்றி கண்டம் யாதொரு கோலமுங் கொள்ள முடியாது. கண்டமின்றியே அகண்டம் எந்த கோலமுங் கொள்ள இயலும். இவ்வகையில் கண்டமாகிறது ஒரு வடிவங் கொண்டதாயும் அதன் அகமியம் அகண்டமாயுமிருக்கிறது இதன் அர்த்தம் வெற்று விவாதங்களால் மனதில் அமைவதன்று ஒருவன் இதனை அறிய 'ஹால்' என்

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

றும் நிலையை அடைய வேண்டும், இந்த நிலையில் கண்டிப்புகள் மறைந்து விடுகின்றன, அப்பொழுது கண்டிப்பின் அகமியம் பரிபூர்ணமாயிருக்கிறதென்பதை உணர்கிறான். அகண்ட பரிபூர்ணத்தின் இடம்பட்டிருக்கும் திரை கண்டிப்புகளின்றி யாதொன்றுமல்ல] குமிழியினுடைய கண்டிப்புகள் நீங்கியதும் அது தன்னை ஓர் சமுத்திரமாய் உணர்கிறது. நீ இந்த 'ஹால்' ஆகிய நிலையை பெறாவிடினும் இந்த உண்மையை திடமாக அங்கீகரித்து வந்தாயாகில் 'நீதி தீர்ப்பு' நாளில் 'ஹால்' உடையவர்களின் கூட்டத்தில் நீயும் சேர்க்கப்பட்டு, கணக்கிடப்படுவாய் தன்னுடைய பிரசங்கமொன்றில் ஹஜரத்து ஜுனைதுல் பக்தாதீ (ரலி) அவர்கள் குழுமியிருந்த ஜனங்களைப் பார்த்து 'நீங்கள் இங்கு வந்து எனது போதனைகளுக்கு செவிசாய்க்கின்றீர்கள் ஆனால் அதனை நீங்கள் விளங்கிக் கொள்வதில்லை. நீங்கள் தலையை மட்டும் அசைக்கின்றீர்கள் நியாய தீர்ப்பு நாளில் உங்களைப் பற்றி நீங்கள் யாரெனக் கேட்கப்படும்பொழுது நாங்கள் ஜுனைதுடைய உபதேசங்களைக் கேட்டு தலையை அசைத்துக் கொண்டவர்கள்' என்று நீங்கள் சொல்வீர்கள் ஹக்குதஆலா உங்களை விடுவித்துவிடுவான் என்று மொழிந்தார்கள்.

ஷெய்கு எஹ்யா முனீரி அவர்கள் சொல்லுவதாவது: தன்னை 'கைர்' ஆகிய வேறு பொருள் என்பதாய்க் காட்டுவதிலேயும், 'ஜலியத்து' ஆகிய அகமியத்திலிருந்து 'கைரியத்து' ஆகிய அன்னியப் பொருள்வரை தன்னை திருப்புவதிலேயும் அல்லா(ஹ்)வின் கோபம் அடங்கியுள்ளது. இவ்வாறே அல்லா(ஹ்) தனது பேரில் குற்றத்தைச் சாட்டிக் கொள்ளாது தப்பிக் கொள்கிறான். அவன் ரோஜாமலரை முள்ளைப் போன்று செரியச் செய்கிறான். 'கைர்' என்னும் வேற்றுமையைப் பார்க்கிறவர்கள் திரையிடப்பட்ட 'மஹ்ஜூபீன்'களாயிருக்கிறார்கள். இந்த திரை காதலியின் கன்னத்தின் பேரில் விழுந்து கிடக்கும் கூந்தல் மயிர்களுக்கு ஒப்பாகும் 'மஹ்ஜூபீன்'கள் இதில் சாதாகாலமும் சிக்கிக் கொண்டிருப்பார்கள். 'குப்ரு' (உண்மையை மறைத்தல்) காதலியினுடைய கூந்தலின் கருப்பு மயிருடனும் 'ஈமான்' (விசு

வாசம்) காதலியின் அழகு பொருந்திய கன்னங்களுடனும் சம்பத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாருக, இரண்டு கூடாரங்கள் தயார் செய்யப்படிருக்கின்றன அவையாவன:— ஒன்று ஹக்' குடைய படையைக் கொண்டது, மற்றொன்று 'இப்லீசு'டைய படையைப் பெற்றது இவர்கள் முறையே, நேர்மையாக நடத்தப்பட்டவர்களும், வழி கேட்டிலாக்கப்பட்டவர்களுமாகும். மன்யஹ்தியல்லாஹு பலாமுளிலில்லஹு வமன்யுளில் ஹுபலஹாதியலஹு' — (நபியே!) அல்லாஹ் எவனுக்கு நேர்வழி காட்டுகிருனே அவனை நீர் வழி செறுக்கச் செய்யமுடியாது; எவனை வழி கேட்டிலாக்குகிருனே அவனை நீர் நேர்வழியாக்க முடியாது

நேர்வழி நடத்துவதையும். வழிகேட்டிலாக்குவதையும் முறையே முஹம்மது (ஸல்) அவர்களுடனும். 'இப்லீசுடனும் ருபகரிக்கப்படுகின்றன ஆனல் இவ்விரண்டும் 'ஹக்'குடைய பண்புகள் தான் ஒன்று கன்னங்களுக்கும், மற்றொன்று கூந்தல் மயிர்களுக்கும் ஒப்பிடப்படுகின்றன உண்மையில் ஒரு பண்பினது பெயர் முஹம்மது (ஸல்) மற்றொன்றின் பெயர் 'இப்லீஸ்'. 'ஹக்கு' தன்னில் தான் நோட்டமிட்டு தன்னைக் கண்டு தன் பேரில் புகழ் கூறினவுடன் 'முஹம்மது' என்று ஆனுன்.

அக அதூன ப ஆலன் வதஜ் அருன அக்ஸனல் காலிகீன் என்ன நீங்கள் பஆல் என்பதைக் கூவியழைத்து சிருஷ்டி கர்த்தாக்களுக்குள் தலைசிறந்தோனை மறந்து விடுகிறீர்களா?'' தனக்கே கன்னை திரையிட்டுக் கொள்வதால் அவன் கன் சொந்த கைர் ஆகிய வேற்றுப்பொருளாக ஆகி தன்னையே தான் நிந்தித்துகொண்ட வண்ணம் தன்னை விட்டும் விரண்டோடி இப்லீஸ் ஆக ஆகி ஷைத்தான் என்னும் பட்டப்பெயரைச் சூட்டிக் கொள்கிருன். ஒரு குறித்த தூரக்கிலிருந்து ஒரு தன்மை அருள்மாரியையும் மற்றொரு தன்மை கோபாக்கினியையும் அடையப்பெறுகின்றன. இதுவோ நித்திய கால பூர்வ நிலையாகும் இதனுலேயே

நபி (ஸல்) அவர்கள் அருளே உருவாய்த் திரண்டவர்களென அழைக்கப்பட்டு கன்னங்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள். மாஅர் சல்நாக இல்லாறஹ்மதுன்லில்ஆலமீன் (ஒமுஹம்மதே!) உலகத்தாருக்கு உம்மை ஒரு அருட்கொடையாகவேயன்றி நாம் றசூல் என்னும் தூதராக அனுப்பவில்லை. கோபம் அல்லது மகிமை கூந்தல் மயிர்களின் நாமங்களாகும். அது இப்லீஸ் ஆக ஆயிற்று. அந்த இப்லீஸை நோக்கியே, ''இன்ன அலைக்க லஃனதீஇலா யெ.ாமித்தீன்'' நியாய தீர்ப்பு நாள் பரியந்தம் எனது சாபம் உன் மீது இருப்பதாக என்று கூறப்பட்டது.

வஸ்துக்கள் 'அஃயான்' 'காரிஜா'வாகும் வெளியீட்டிற்கு முன்னர் அவற்றின் அகமியங்கள் 'ஹக்கு'டைய அறிவில் தரிபட்டிருந்தன 'ஹக்கு'டைய அறிவு எவ்வாறு 'கதீம்' என்ற பூர்வீகமாக இருக்கிறதோ அவ்வாறே அவைகள் ஹக்குடைய அறிவில் தரிபட்ட கதீம் ஆகிய பூர்வீகப் பொருள்களே. அவை தோற்றமானபொழுது (மறையக் கூடிய) அநித்தியமான புதுமையாகிய ஹாகிதுவாக ஆகிறது. அவை முதல் நிலையில் 'தாத்து' என்னும் 'தத்' சொருபமாக இருக்கிறது. அவற்றின் தோற்றம் அநித்திய மான புதுமைப் பொருள்களே,

உள்ளமையுடன் ஹக்குக்கு பிரேத்தியேக சம்பந்தமுண்டாயிருக்கிறது அவனுடைய ஒவ்வொரு தோற்றமும் மற்ற தோற்றங்களில்லாத ஒரு புதிய தன்மையைப் பெற்றிருக்கிறது. ஒரு தோற்றப் பொருள் அறிவில் புகுந்த வேளை அது ஒரு ஐன் ஆகிய அறிவின் கோலமாக ஆகிறது வெளியீடானதும் அது 'ஐன்-காரிஜா' அல்லது ஹக்குடைய வார்த்தை அல்லது வஸ்துவாக ஆகின்றது கூஜா, குவளை அல்லது தட்டு ஆகியவை மண்ணினுடைய ஏகத்தன்மையைக் குலைக்காதது போன்று அஃயான் ஆகிய வஸ்துக்களின் பெருக்கம் தாத்துடைய ஏகத்துவத்தைச் சிதைப்பதில்லை. இவ்வாறே குயவனுக்கு ஒவ்வொரு பாத்திரத்துடனும் பிரத்தியேக சம்பந்தமுண்டாயிருக்கிறது. இச்சம்பந்தம் மட்டும் நீங்கிப்போவதில்லை,

அஸ்ராரே அனல்ஹக்

ஹக்குடைய வெளியீடு மற்ற எவ்வஸ்துவினுடைய வெளியீட்டைக் காட்டிலும் அதிக பிரத்தியட்சமாயிருக்கிறது. 'ஹுவல்லாஹிர்' அவனே அவன் தனக்கு மேல் யாதொன்றுமில்லாத வெளிப்பாட்டைப் பெற்றிருக்கிறன். மறைவான எந்த வஸ்தைக் காட்டினும் அவன் அதிமறை வானவனுயிருக்கிறன். அனனே 'ஹுவல்பாதின்; அவன் தனக்குக் கீழ் யாதொன்றுமின்றிய உள்ளீடாயிருக்கிறன். எனவே, அவனுடைய வெளியீடு அவனுடைய உள்ளீட்டுடன் போரிடுவதில்லை. ஏனெனில் அவனே 'ஹுவல்லாஹிர்; அவனே 'ஹுவல்பாதின்' அவனுடைய உள்ளீடு அவனுடைய வெளியீட்டைப்போன்றே அவ்வளவு பிரத்தியட்சமாயிருக்கிறது அவனது உள்ளமை' மற்ற உள்ளமைகளை விட மிகுந்த வெளியீட்டைப் பெற்றிருக்கிறது. 'அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்ளி — அவன், வானங்கள் பூமி ஆகியவற்றின் ஜோதியாயிருக்கிறன். அவனது உள்ளமையில் 'அநேகம்' என்பது நுழைவதில்லை, அவனது உள்ளமை தன்னில்தானே குறித்துக் காட்டுவதாயிருக்கிறது. அந்த குறிக்கோள் அதன் ஒருபாகமாக ஆவதில்லை. ஏனெனில் தோற்றங்கள் (கற்பனைகள்) உள்ளமையினது பண்புகளாக தானிருக்கின்றன ஒவ்வொரு வஸ்தும் தனது சொந்த உள்ளமையை அறிந்திருக்கிறது.

குறிப்பான ஒன்று பொதுவான ஒன்றைவிட அதி பிரத்தியட்சமாயிருக்கிறது ''வபீ அன்புஸிகும் அபலாதுப்ஸிருன்'' அவன் உங்கள் இதயங்களிலிருக்கிறன். எனினும் நீங்கள் நோட்டமிடுவதில்லை'. எனவே, அவனுடைய உள்ளமையை அறிதல் நப்ஸு ஆகிய தனது உள்ளமையை அறிவதற்கு முந்தியதாயிருக்கிறது.

ஹக்கிடமிருந்து உண்டாகும் 'ஹிஜாபு' என்னும் திரை இருவகைப்படும், தன்னைச் சார்ந்த 'தாத்தீ' ஒன்றும் பிறரைச் சார்ந்த 'சிபாத்தீ' ஒன்றுமாகும் தனது சொந்த 'தாத்'தே தனக்கு திரையாக இருக்கும், 'அப்து' என்னும் 'தாத்தீ' அடிமையாக நீஇருக்கும்வரை தன்னைச் சார்ந்த

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

யான திரை ஒருக்காலும் மறைந்து விடுவதில்லை. அதனை நீக்குவதற்கு எடுக்கப்படும் பிரயத்தனமும் முயற்சியும் பிரகாசிக்கச் செய்தற்காக வேண்டி ஒரு கல்லைத் தீட்டுவதற்கு ஒப்பாகும். அந்தக் கல்லோ ஒருகாலும் பிரகாசியாது.

உன்னுடைய 'தாத்'தையும் 'சிபாத்'தையும் நீ மாற்றி அவனுடைய தாத்தாகவும் சிபாத்தாகவும் நீ உணரும் போது பண்புகளான சிபாத்தின் திரை மறைந்து விடுகிறது. இது ஒரு கண்ணாடியில் படிந்தது பாசியைத் துடைப்பது போலாம்,

என்னுடைய தாத்தும் சிபாத்தும் அவனுடைய தாத்தும், சிபாத்துமே. அப்துக்கும், றப்புக்குமிடையே சம்பந்தம் இதுவே.

வஹ்தத்து தொடுத்து அஜ்ஸாம் (ஷாஹ் கமால்) இறுதியாக தோற்றங்களின் சகல நிலைகளிலும் நாயகம் (ஸல்) அவர்கள் சம்பூர்ண தோற்றமானவர்கள். இதனாலேயே 'பூர்த்தியாளர் எனற அர்த்தங் கொண்ட 'காதம்' என்றும் 'முத்திராங்கச' என்ற பொருள் கொண்ட 'காதிம்' என்றும் நபி (ஸல்) அவர்கள் அழைக்கப்படுகின்றனர் 'லைஸ்பஃதி நபிய்யுன்' எனக்குப் பின்னர் நபி கிடையாது என்று ஒரு ஹதீது கூறுகின்றது.

ஹம்தான் — கஸ்ஸார் (என்னும் வண்ணான்) கூறுவதாவது:- என்னுடைய 'நப்ஸை' பிர்ஔனுடையதைவிட மேம்பாடுடையதாய் நான் கருதுகிறதில்லை, நான் என்னை தரிபடுத்துவதில் 'நப்ஸு' இணைவைக்கத் தொடங்குகிறது. 'நப்ஸு' என்பது ஒன்றே எனவே மூஸா (அலை) பிர்ஔன் முதலானோரின் 'நப்ஸுகள்' இயற்கையில் ஒன்றேயாம். 'ஹக்கு'டைய பார்வையில் வெறுக்கப்பட்டவற்றை செய்தலை விட்டும் நப்ஸு நீங்கி இருப்பதில்லை. ஏமாற்றுவதில் ஈடுபட்டிருக்கும்பொழுது 'ஆரிபு'டைய ,நப்ஸு' 'ஆரிபா'கவே இருக்கிறது.

தானாகவே தேர்ந்தெடுக்கப்படுவதின்றி 'ஹக்கு' தானே 'சூபி'யை நியமனஞ் செய்திருக்கிறான். அவரோ 'ஹக்'கினால் காதலிக்கப்பட்டிருக்கிறார். 'ஹக்கு'டைய காதலுக்காக வேண்டி தன்னை தெரிந்தெடுத்துக் கொள்பவரே 'பகீர்' ஆகும் அவர்தான் 'ஹக்'கைக் காதலிப்பவராகும் அல்லது 'ஹக்'குடைய காதலை தேடுபவராகும். சகல இயமநியமாதிகளிலிருந்தும் அவர் ஓடிவிடுபவாராகும். ஒன்றில் 'சூபி'யாகிறவர் தேடப்பட்டவரும், ஹக்கு தேடுகிறவனும் மற்றொன்றில், 'பகீர்' தேடுபவரும், ஹக்கு தேடப்பட்டவனுமாகும்.

துவிதம் அத்துவிதத்தின் எதிர்பதம் எவனொருவன் துவிதத்தால் திரையிடப்பட்டிருக்கின்றானோ அவன் அத்துவிதத்தை விட்டும் தடுக்கப்பட்டிருக்கிறான். ஒரு 'முவஹ்ஹிது' ஆகிய அத்வைதி துவிதத்தை விட்டும் வெளிவந்து. தனது தன்மையின் ஏகத்தில் தன்னை அவ்வளவாக மூழ்கச் செய்து பனா-பில்-பனாவாகிய அந்த அத்துவிதமான ஏகத்துவத்தையும் போக்கிக் கொள்பவராகும். 'அத்தௌஹீது நிஸ்யானுத்தௌஹிது' — தௌஹீது என்பது தௌஹீதை மறந்து விடுதலாம், மன் அறபல்லாஹலா யஃரிபலலா(ஹ்) அல்லாவை அறிந்த ஒருவன் அல்லா(ஹ்)வை அறியாதிருத்தலேயாம். அறிவின் 'கஷ்பு' ஆகிய திரை நீக்கலை நாடி இறைஞ்சும் தேட்டமுடையோன் அறிவை விட்டும் திரையிடப்பட்டிருக்கிறான்.

ஒரு 'ஜாஹிது' நன்மையை 'ஹக்'கின் புறமும் தீமையை தனது பக்கலும் சேர்க்கிறார். 'ஹக்கு'டைய உணர்ச்சியின் வாயிலாய் 'ஜாஹிது' நன்மை செய்பவனாயிருக்கிறான், (ஸைர் Fபில்லா(ஹ்)வின் முதல் நிலையிலிருக்கும்) 'முதல்லிக்' சிலவேளை தன்பாலும் சிலவேளை 'ஹக்'கின்பாலும், நன்மை தீமையைச் சேர்ப்பவனாகும். ஸைர் Fபில்லா(ஹ்)வின் கடைசி நிலையிலிருக்கும் 'முஹக்கிகு' மூன்றாவது

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

தன்மையடைந்தவராதலால் தானே செயல்கர்த்தாவாகிறார். (முதல் 'நான்' என்னுந் தன்மை அஸ்மாவிலிருக்கிறது. இரண்டாவது தன்மை வாஹிதிய்யத்திலிருக்கிறது. மூன்றாவது தன்மை வஹ்தத்திலிருக்கிறது) அவர் சகல சடம், சித்து ஆகிய தோற்றங்களியாவற்றிலும் தன்னைக் காண்கிறார். மேலும், சகல 'அஸ்மாயெகௌனி'யிலும் தன்னைக் காண்கிறார். அவரே செயல்கர்த்தாவும் தனது சொந்த 'கலீபா'வுமாகிறார். தன் ஸ்தூல சரீரத்தையும் தனது கலீபாக்களுள் ஒன்றாகக் கருதுகிறார்.

'கஷ்பு' என்பது திரையை விட்டும் வெளிப்படுதலாகும் திரையில் மிக இருண்டது 'சாலிக்கு' (முமுட்சு)டைய 'நான்' எனும் தன்மையே 'நீயே உன் சொந்த திரையாயிருக்கிறாய்' ஓ ஹாபிஸ் இடையிலிருப்பதைவிட்டும் வெளிப்படுவாயாக' உனது 'இருப்பு' உண்டென்று நீ கற்பித்துக் கொள்வதைத் தவிர யாதொரு திரையுமில்லை.

'அநேகம்' வெளிப்பட்டதும், 'ஹக்கு' 'கல்கு' ஆகிய சிருஷ்டிப் பொருளாயும். அது மறைந்ததும் 'கல்கு' 'ஹக்கு' ஆகவுமிருக்கிறான். ராபிய்யத்துல் பஸரிய்யா (ரலி) அவர்கள் கூறுவதாவது:- 'ஹக்கு' முதலில் வெளியீடாயிருக்கையில் 'கல்கு' (பிரபஞ்சம்) மறைந்திருக்கிறது இப்பொழுது பிரபஞ்சம் வெளியீடாயும், 'ஹக்கு' மறைந்துமிருக்கிறது. முன் இருந்தது போன்று 'ஹக்கு' வெளியீடாகி பிரபஞ்சம் மறைந்து உள்ளீடாவது போன்று ஜீவிப்பாயாக.

'கானல்லாஹு வலம் யகுன் மாஅஹுஷைஉன்', அல்லாஹுத்தஆலா உண்டாயிருந்தான். அவனுடன் யாதொன்றுமில்லை. 'வல்லாஹு அல்ஆன கமாகான' — முன்பிருந்தவாரே அல்லாஹு இப்பொழுதுமிருக்கிறான். கீழ் நோக்கிய 'நுஸூல்) ஆகிய 'பர்கு' (வியட்டி)யுடைய வட்டத்தின் பேரில் யாத்திரை செய்தலையும் பின்னர் மேல் நோக்கிய 'உரூஜ்' ஆகிய 'ஜம்உ'(சமட்டி)யுடைய வட்டத்தின்மீது

யாத்திரை செய்தலையும் இது சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது. கீழ் நோக்கிய பிரயாணம் முடிவடைந்ததும் மேல் நோக்கிய பிரயாணம் மிஃராஜ் ஆரம்பமாகின்றது. அநேகத்தன்மை யாகிற 'கத்ரத்து'க்குப் பின்னரே ஏகத்தன்மையாகிய 'வஹ்தத்து' அடையப்படுகிறது! 'மகாமுன் மஹ்மூது' என்னும் மகா மகத்துவமிக்க புகழப்பட்ட நிலை என்றும், ஓர் வில்லினது இரு வளைவுகளும் சந்தித்தற்குரிய இடமெனும் 'காப கௌஸைனி' என்றும் அழைக்கப்படும். 'ஜம்உல் ஜம்உ' ஆகிய நிலையாகும் 'கௌது', 'குத்பு' ஆகியோரின் ஸ்தானம் இதுவேயாகும் 'பர்து' ஆகிய தனித்தோரின் நிலை 'ஜம்உ' ஆகும். 'கௌது'ம் 'குத்பு'ம் பிரபஞ்சத்தை தங்களின் தோள் புயங்களின்மீது சுமப்பவர்களாகும்.

'வஹமல்னாஹும் Fபில்பர்ரி வல்பஹ்ரி' — அவர்களை நாம் தரைமீதும், கடல்மீதும் சுமந்தோம்.

கருகிகள், பண்புகள் ஆகிய ஆடையில் 'தாத்து' ஆகிய சுக்சொரூபம் தன்னைத் தோற்றுவித்தது தான் 'ஆலம்' ஆகிய பிரபஞ்சமாகும் இதுவே காதலின் கொந்தளிப்பாகும்; கடலானது அலைகளாலான ஆடையில் தோற்றமளிக்கின்றது. 'முஹம்மது மக்ரிபீ' கூறுவதாவது:- கடலிலிருந்து பலநிறப் பட்ட அலைகள் தோன்றின. 'நிறமின்மையினின்றும் பல்வேறு நிறங்களைப் பெற்றன' ஆதலின், 'ஹக்'கின் அகமியமே 'கல்கி'ன் அகமியமென்றும், கருதிக்கொள்வாயாக. சடம் ஆலம் நாசூத்து போன்றும் தண்ணீர் மிதால் போன்றும், காற்று ஆத்மா போன்றும், நெருப்பு 'சிபாத்து' போன்றும், பார்வை 'தாத்து' போன்றும் இருக்கிறது.

தன்னுடைய இச்சைகளுக்கு வழிபடுவதல்லாமல் அடிமை (அப்து) தனது ஆண்டவனுக்கும் வழிபட வேண்டி

ஆலம் அஜ்ஸாம் சடலோகம்

யிருக்கிறது. எதுபோலெனில் ஒரு குழந்தை விளையாட்டில் ஈடுபட்டிருக்கையிலேயே தன் தாயினால் ஏவப்பட்ட சில கடமைகளையும் முடித்துக் கொள்கிறது.

வஸ்துக்கள் 'ஹக்கு'டைய வார்த்தைகளாகும். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அர்த்தமுண்டு. சரிவர நோட்டமிடுபவன்தான் ஒவ்வொரு வஸ்துவின் கோலத்திலிருந்து அதன் அர்த்தத்தை உணர்பவனாயிருக்கிறான். ஒவ்வொரு வஸ்தும் அவனுடைய 'ஜமால்' என்னும் பேரழகின் கண்ணாடி 'சநுரீஹிம் ஆயாதினா பில்ஆபாகி வபீ அன்புஸிஹிம் ஹத்தா எதபையன லஹும் அன்னஹுல்ஹக்' நமது திருஷ்டாந்தங்களை பிரபஞ்சத்திலும், அவர்கள் உள்ளங்களிலும் 'நாம் அவர்களுக்கு அது போதிய பிரத்தியட்சமாகி, அதுவே 'ஹக்கு' (மெய்ப்பொருள்) எனக்காணும்வரை காட்டுவோம்'' இங்கு பிரபஞ்ச வஸ்துக்களும், உள்ளங்களும் கண்ணாடிகளாகும் ஒவ்வொரு செயலும் ஒரு எண்ணத்தின் கோலம். அல் அஃமாலு பின் நிய்யதி; எண்ணம் நேர்மையாயிருப்பின் செயலைப் பற்றிக் கவலையில்லை 'நிய்யத்துல் முஃமினி கைருன்மின் அஃமாலிஹி' ஒரு நன்நம்பிக்கையாளனின் எண்ணம் அவனுடைய செயலைவிட சிறந்தது. ஒவ்வொரு வஸ்துக்கும் ஒரு கோலமும், அர்த்தமும் உண்டு. அர்த்தமாகிறது 'ஹக்கு'தான் ஆதலின் கோலத்தைவிட்டும் நீ அர்த்தமாகிய மூலத்தளவில் ஒடிவிடவேண்டும். உன்னுடைய வெளியரங்க செயல்கள் சில 'பராயிலு' என்னும் கடமைகளுக்கு மேல் அதிகமாயிருக்க வேண்டாம். (அதுவோ ஒவ்வொரு 'முஃமின்' பேரிலுள்ள கடமை) நீ பாவத்தினின்றும் விரண்டோடுவதைப் போன்று வெளிவேஷமான போலி வணக்கத்தை விட்டும் ஒடிவிட வேண்டும்.

9-வது அத்தியாயம்

சலாத்து — தொழுகை

சலாத்து (தொழுகை) 'வஸ்லத்து' ஐக்கியமடைதல், நெருங்குதல் என்பதிலிருந்து அடையப்பெற்றது வெளியரங்கக்காரர்கள் (ளாஹிரீன்) இதனை 'தொழுகையில் சில குறித்த சடங்குகளையும், சட்ட ஒழுங்குகளையும், கடைப்பிடித்து தொழுகுதல்' என்ற அர்த்தங் கொள்கின்றனர். ஞானிகளோவெனில் இதற்கு 'காதலன் காதலியுடன் ஐக்கியமாதல்' என்ற கருத்துக் கொள்கின்றனர். 'ஒளு (தொழுகைக்கு முன்னர் சுத்தி செய்து கொள்ளல்) என்பது பிரிதல்' என்றும் 'சலாத்து' என்னும் தொழுகை சேர்தல் அல்லது ஐக்கியமடைதல் என்றும் ஷிப்லி (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். 'மன்லம்யன் பஸல்லம்யத்தஸல்' — பிரியாதவர்கள் சேராதவர்களே. இதுவே நித்திய நிரந்தரமான தொழுகை. 'அல்லதீன ஹும் அலாஸலாத்திஹிம் தாஇமூன்!' அவர்கள் நிரந்தரமான தொழுகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். காதலியுடைய காதலிலே காதலன் சதா மூழ்கிக் கிடக்கிறான். மற்றொருவகை தொழுகையோ தினசரி ஐங்கால தொழுகையாகிய சாதாரண தொழுகையாகும். ஐங்கால தொழுகை 'கிப்லா'வை முன்னோக்கியது. நிரந்தரத் தொழுகை 'ஹக்கு'டைய சமுகத்தை முன்னோக்கியது. 'பஐனமாதுபவலஹு பதம்ம வஜ்ஹுல்லா(ஹ்)' எத்திசையில் உன் முகத்தை திருப்பினும் அங்கு அல்லா(ஹ்)வின் முகமுருக்கிறது.

சில குறிப்பிட்ட சட்ட ஒழுங்குகளைக் கொண்டு வரையறுக்கப்பட்டது சாதாரண தொழுகை மற்றொரு வகை 'சலாத்து' மிகவும் விசாலமுடையது ஒன்றின் 'கிப்லா' குறிப்பிட்டஸ்தானத்துள்ளடங்கியது, மற்றொன்றினுடையதோ சர்வ வியாபகமானது. ஒரு தொழுகையிலிருந்து மற்றொரு தொழுகை அளவில் திரும்பியபொழுது ஷெய்கு அபூபக்கர்

சலாத்து தொழுகை

அவர்கள் கட்டிய முந்திய 'தக்பீர்' என்னவெனில்,
'காபிர்ஷு"தம்துன்னூர் பூஸ்தம் அல்லாஹு"அக்பர்' — "நான்
'காபிர்' (திரையிடுபவனாய்) ஆய்விட்டேன். பூநூலையும்
அணிந்து கொண்டேன் அல்லாஹு" அக்பர்" என்பதாகும்.
சம்பூர்ண 'கிப்லா'வை முன்னோக்கியுள்ள அவர்களுக்கு குறிப்
பிட்டதோர் 'கிப்லா'வின்பால் திரும்புவது குப்ரைவிட குறைந்த
தன்று. கிப்லாவென்றும் முன்னோக்கும் ஸ்தலம் நான்கு
ஆகும். அவையாவன:- (1) மக்காவின் கிப்லா (2) ஒரு
வனது பீர் அல்லது ஷெய்கு (3) ஒருவனது கல்பு என்னும்
இதயம் (4) ஹக்குதலா. ஒருவன் முந்திய கிப்லாவிலிருந்து
இரண்டாவது அளவிலும், இரண்டாவது கிப்லாவிலிருந்து
மூன்றாவதின்பாலும் மூன்றாவது கிப்லாவிலிருந்து நான்காவ
திலும் முறையாக திரும்ப வேண்டும் குறிப்பிட்ட ஐங்காலத்
தொழுகையில் இந்த நிலைகளை அடையப்படுமேயாயின் மிகவும்
நன்று நீ முஹம்மது (ஸல்) அவர்களுடைய பாத்திரத்
தினின்றும் குடித்தவனாய் இல்லாவிடில் அதனை அடையப்படு
தற்கு சாத்தியமான எவ்வகையிலாயினும் அடைய வேண்டும்.
உனது (திரேகம் நான் என்ற) தன்மையை விட்டும் நீங்கிவிட
வேண்டும், அவ்வேளை நீஹக்குடன் ஐக்கியமடைந்தவன் ஆவாய்
இதனாலேயே 'ஒளு' என்பது பிரிதல் என்றும் சலாத்து
என்பது சேர்தல் என்றும் சொல்லப்பட்டது பேரின்பக் காத
லர்களின் தொழுகை (ஜீவத்தன்மையை) விட்டுவிடுதலாகும்.
பக்திவான்களின் தொழுகையோ உட்காருவதும், குனிதலுமே
யாகும். தொழுகை என்பது 'முஃமீன்' (விசுவாசி) உடைய
மிஃராஜ் (ஏற்றம்) ஆகும் இந்த விசுவாசி தனது (திரேகாதி
யான) கண்டிப்பான தன்மையைக் காலி செய்துவிட்டு தனது
காதலியை அடைவதாகும் — இதுவே 'மகாமுன் மஹ்மூது
இந்த நிலையில் ஒருவன் தன்னைத்தானே தொழுது கொள்
கிறான்.

தொழுகை இரு தன்மையானதாகும், ஒன்று 'ஜிஸ்மி'
யாகிய சரீர சம்பந்தமுடையதும், மற்றொன்று 'ரூஹி'யாகிய
ஆன்மா சம்பந்தமுடையதுமாகும்; சடத்தன்மை சட்டரீதியான
ஆசாரங்களுடன் சம்பந்தப்பட்டது, ஆத்மீகத் தன்மை ஆத்மா

வுடன் சம்பந்தப்பட்டது. சரீர சம்பந்தப்பட்டதை அனுஷ்
டித்துவிட்டு ‘ஹக்’கின் பார்வையாகிய ஆத்மாவையடை
யாது (திரேகாதியான) தன்மையை மறந்து விடாது போனல்
ஆத்மா இன்றிய ஒரு சடமான தொழுகை ஆகிவிடுகின்றது.
சரீர அனுஷ்டானங்களின்றி அந்த பார்வை கிடைத்துவிடுமே
யாகில் அப்பொழுது சரீரமின்றிய ஆத்மாவாயிருக்கிறது. இந்த
இருவகையிலும் பூர்ண தன்மை கிடையாது. சடங்காசாரங்
களைக் கடைபிடித்தொழுவது இரும்பைத் தீட்டிப் பிரகாசிக்கச்
செய்தற்கொப்பாகுமென்று சிலர் கருதுகின்றனர் இரும்பானது
துலக்கப்பட்டால் பிரகாசம அந்த இரும்பிலிருந்தே வெளிப்படு
கிறது. நெருப்பக்கோளறையில் சம்பூர்ணமாக்கப்படும் சரீரத்
துக்கு ஆத்மா அதனிடமிருந்தே அதற்கு வருகிறது விளக்கு
தயாரிக்கப்பட்டு கிரியை செம்மைப்படுத்தப்பட்டதும்
அத்திரி தானகவே நெருப்பைப் பற்றிக் கொள்ளும்
தன்மையைப் பெறுகிறது. ‘நபக்துபீஹி மின் ரூஹி’ — ‘நான்
எனது ரூஹில் நின்றும் அதில் ஊதினேன்’ என்று இறைவன்
அருளியிருக்கிருன் பார்வை’ என்பதோ எதிர்பாராத விருந்
தாளி, எந்த எதிர்பாராத நேரத்திலும் அது மீளலாம் போது
மான பக்குவத்துடன் ஒருவன் தன்னை வைத்துக் கொண்டு
இந்த விருந்தாளியை வரவேற்கத் தயாராக இருக்க
வேண்டும்

‘சஜ்தா’ (சாஷ்டாங்கமாகிறது) பக்திக்கும். மரியா
தைக்கும் ஏற்படுத்தப்பட்டது ஆதமுக்கு மலக்குகளான வான
வர்கள் சாஷ்டாங்கஞ் செய்தனர். அந்த சாஷ்டாங்கம்
யதார்த்தத்தில் ‘ஹக்கு’க்கு உண்டானது. ஒரு குறித்த
திசையிலே ஹக்குக்கு செய்யப்படும் சாஷ்டாங்கம் என்ப
தின்றி, கிப்லா’ நோக்கிய ஒருவன் சாஷ்டாங்கஞ் செய்தால்
அது ‘ஷிர்க்கு’ ஆகிய இணைவைத்தலேயாம். ஒருவன் படைப்
பினங்கள் யாவற்றையும் தனது ‘கிப்லா’வாகக் கொள்ளலாம்
‘பஐனமாதுவல்லூ பதம்ம ‘வஜ்ஹுல்லா(ஹ்)’ — நீங்கள்
எத்திசை திரும்பினும் அங்கு அல்லா(ஹ்)வின் முகமிருக்கிறது’.
ஒரு ‘மஜ்தூபு’ ஆகிய பரவச நிலையில் சொக்கிய கறக்கமுடை

யோர் தான் கண்ட வஸ்துக்கள் ஒவ்வொன்றின் முன்னிலே மிலும் சாஷ்டாங்கஞ் செய்து சொன்னதாவது 'அல்லஹூம்ம அஊதிபிக மின்அன் உஷ்ரிக பிகுல்லிஷைஇன்' 'ஏ இறைவா! ஒவ்வொரு வஸ்துவிலுமுள்ள ஷிர்க்கு ஆகிய இணைவைத்தலை விட்டும் நான் உன்னிடத்தில் காவல் தேடுகிறேன்' என்ப தாகும். மஸ்ஊளதுபேக் என்பார் இதனைக் கண்டு அன் ஞரின் மகனைப் பார்த்து, 'உம்முடைய தந்தை ஷிர்க்கு ஆகிய இணைவைத்தலிலேயே ஆண்டவனின் காவல்பாட்டைத் தேடு கிருரே!' என்றதற்கு அவருடைய மகன் பின்வரும் பதிலுரைத் தாரம்:- 'அன்ஞர் வஸ்துத் தன்மையை நீக்கிய வஸ்துக்களைப் பார்ப்பதால் அவர்களை 'முஷிரிக்கு' என்று அழைக்காதீர்கள்'' என்பதாம், இதனாலேயே ஒரு முஃமின் தனது நோட்டத்தை 'கிப்லா'வை விட்டும் ஹக்கு' (மெய்ப்பொருள்) அளவில் திருப்புகிருர். தொழுகையின் 'தக்பீர் தஹ்ரிமா'வில் இந்த நிய்யத்து வைக்கப்படுகிறது ஹக்கு அளவில் நோட்டம் வைத்தலே நிரந்தரத் தொழுகையான 'சலாத்துன் தாஇமுன்' ஆகும். வானவர்கள் ஆதமுக்கு 'சஜ்தா' செய்ததை ஆதமில் பிரகாசிக்கும் 'நூரு - முஹம்மதீ'யான முஹம்மாதுடைய ஜோதியை நோக்கியே என்று இமாம்கள் ஒத்தோர்மித்து கூறுகின்றனர். ஒரு கண்ணுடியில் பிரதிபலிக்கும் ஜோதியை ஒருவன் வணங்கினுல் அவ்வணக்கம் ஜோதிக்கேயன்றி கண் ணுடிக்கு அன்று. 'பசீரத்து' என்னும் அகப்பார்வையுள்ள மனிதன் சகல வஸ்துக்களையும் அல்லாஹுத்தஆலாவுடைய ஜோதி பிரதிபலிக்கும் கண்ணுடியாகவே கருதுகின்றுன்.

'அஸ்ஸாபிஹூ ம அல்லாஹ்'. ''நீங்கள் அல்லாஹுத் தஆலாவுடன் கலந்துறவாடுங்கள்''. இந்த தொழுகையோ ஒத்திப்போடுவதற்கு முடியாததொன்று. ஆனுல் சாதாரண ஐங்கால தொழுகையை ஒத்திப்போட்டு பிற்படுத்தித் தொழ லாம். ''வல்லதீனஹூம்அலா சலாத்திஹிம்யுஹாபிஜுன்'' — தங்கள் தொழுகையின் மீது கண்காணிப்புடையவர்கள். இந்த தொழுகைதான் அகண்ட பரிபூர்ண உண்மையை தனது 'கிப்லா'வென்னும் முன்நோக்குதற்குரிய ஸ்தானமாகக்

கொண்டது; சாதாரணத் தொழுகை கஃபாவைத் தனது கிப்லாவாகப் பெற்றிருக்கிறது 'பவைலுன்னில்முஸல்லதீன ஹூம்அன் சலாத்திஹிம்சாஹூன். ''பொடுபோக்கான மறதி யாளர்களாய்த் தொழுகிற வணக்கவாளிகளுக்கு கைசேதம்'' என்ற குர்ஆன் வாக்கியம் பரிபூர்ண உள்ளமையை மறந் திருப்போரை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாகும் ஒருவரது 'ஒளு' (சுத்திகரித்தல்) சரீரத்துடையதும், மனிதனது அசுத்தங் களைப் போக்கி சுத்தி செய்தலாகும். மற்றொருவன் ஒளு' (சரீரம் நான் என்னும்) தன்மையை விட்டும் பிரிதலாம். 'அல் ஒளு இன்பிஸால். வஸ்ஸலாத்து இத்திஸால்' — 'ஒளு' வாகிறது பிரிதலும், தொழுகையானது சேர்தலுமாகும் உனது 'ஜூஸ்இ'ய்யான ஜீவ அகங்காரம் உன்னில் உறைந் திருக்கையில் நீ இந்த தொழுகைக்கு உன்னை தயாரித்துக் கொண்டவனன்று.

ஒருவர் ஒரு எழுத்தாளனை எழுதுகோல் காகிதம், சாயம் இவைகளின்றி 'அல்லாஹ்' பெயரை எழுது மாறு சொன்னதற்கு. அவர் எழுந்து நின்று தொழுகையின் குனிதல், நிமிர்தல், சாஷ்டாங்களுஞ் செய்தலாகிய அனுஷ்டா னங்களை செய்து முடித்தார். நிற்பது 'அலிபு' ஆகவும், குனிதல் 'லாம்' ஆகவும், சாஷ்டாங்களைச் செய்தல் 'ஹே'யாகவு மிருக்கிறது.

ஓ சோதரா! நீ சித்திரத்தை சித்தரிப்பவனாகக் கருதிக் கொள்வாயாக.

10-வது அத்தியாயம்

பீர் — ஞானுபதேசிகர்

நேர்மையில் வழிநடத்தப்படுவதற்கு அறிவும் உணர்ச்சியுமே பெரிதும் தேடப்படுகிறது; இல்லாவிடில், தங்கு தடையின்றி லோக விவகாரங்கள் சென்று கொண்டிருக்கும் 'புலனுதிகளான உழைப்பாளிகளும், காரியஸ்தர்களும் பூர்ணத்தை யடைவதற்காக தாங்கள் தங்கள் கருமத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் வேளாண்மைகாரர்களிடமிருந்து கண்டு முதலான தானியங்களை சேகரித்து அரச களஞ்சியத்துக்கு அனுப்பிவிட்ட போதிலும் அரசனுக்கு மட்டும் இதனைப் பற்றி தெரிவிப்பதில்லை. கருணை கூர்ந்து தாங்கள் இதனை தெரிவிப்பீர்களென்று நம்புகிறேன்' என்று சிஷ்யன் தனது ஞானுபதேசிகருக்கு எழுதியிருந்தார் தாத்து என்னும் தத்சொரூபம் தனது சிபாத்து என்னும் பண்புகளைப் பெற்று பண்புகளின் வாயிலாய் அவற்றின் இன்ப சுகங்களை அடைய பெறுகின்றது. ஆனால் சாலிக்கு ஆகிய முமுட்சுக்கு இதனைப் பற்றிய அறிவிப்பு ஏதுமின்றி அறியாமையிலிருக்கின்றான் 'அறிவுடைய 'தஜல்லி'யாகிய தோற்றம் உதிக்கும்வரை எந்த முமுட்சும் 'ஆரிபு' என்னும் ஞானியாக இருப்பதில்லை அறிவு உதித்தபொழுதுதான் தன்னைப் பற்றி அவன் அறிந்தவனாகிறான் 'சிபாத்து'க்கள் இருந்தபோதிலும் அறிவு உதிக்கும் முன்னர் 'தாத்து' அவற்றை அறியாதிருந்தது தன்னில் தான் மூழ்கிக் கிடந்தது

'சாலிக்கு' ஆகிய முமுட்சு. உள்ளமை, நாட்டம், சக்தி. கேள்வி ஆகியவற்றைப் பெற்றிருக்கிறான், அந்த 'சாலிக்கு' இவற்றை உணராதிருக்கும் நிலையில் அவனுக்கு இவை இல்லாதிருப்பது போன்றே இருக்கிறது.

'சாலிக்கு' கேட்கிறான் பார்க்கிறான் எனினும் 'ஹக்கு'தான் கேட்கிறான், பார்க்கிறான் என்பதை உணர்வ

தில்லை, இந்த வகையில், ஹக்கு கேட்கிறான் பார்க்கிறான்: 'சாலிக்கு' ஹக்குடைய 'சிபாத்து'களை உணர்வதில்லை. அந்த உணர்ச்சி அவனுக்கு வந்துவிடும் பொழுது அவன் தனது சொந்த ஆரிபு' என்னும் ஞானியாக ஆகிறான். உணர்ச்சி பார்வையைக் கொண்டு வருகிறது பார்வை உள்ளமையை வில் சேர்த்து வைக்கிறது. 'ஹிஜாபு. என்னும் திரை தன்னாலே தன் மீதே போடப்படுகிறது அவன் தன்னைக் கொண்டு தானே 'ஆரிபு' ஆக ஆகிறான். தன்னைக் கொண்டு தானே ஜாஹில் ஆக ஆகிறான். 'கைர்' என்னும் பிற வஸ்து இங்கு கிடையவே கிடையாது மன்யஹ்தியல்லாஹு பலமுதில் லாஹு வமன்யுதில்ஹு பலஹாதியலஹு' (ஹதீது குத்ஸி;

'யாரை ஹக்கு நேர்வழியில் நடத்துகிறானோ அவரை யாரும் வழிகெடுக்க முடியாது எவனை அவன் வழிகேட்டிலாக்கு கிறானோ, அவனை யாரும் நேர்வழியிலாக்க முடியாது

பீர் ஆகிய ஞானதேசிகரினது 'ஜமால்' என்னும் பேரழகை முரீது என்னும் சிஷ்யன் தெரிசிக்க வேண்டும். பீருடைய ஜமால் முரீதுடைய இதயத்தில் பிரதிபலிக்கப்பட வேண்டும் பீர் என்னும் ஞானதேசிகரின் 'ஜமால்' என்னும் கண்ணாடியில்தான் முரீது என்னும் சிஷ்யன 'ஹக்கு'டைய ஜமாலைத் தெரிசிக்கிறான். முரீதுடைய இதயம் பீருடைய ஜமாலைத் தெரிசிக்கும் கண்ணாடியாக இருக்கிறது ''மன்ரஆனி பகத்ராஉல்ஹக்'' - எவனொருவன் என்னைக் கண்டானோ அவன் 'ஹக்'கைக் கண்டவனாகும்'. என்று நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீது ஒன்று கூறுகின்றது ?'என்னை தெரிசித்தலில்தான் 'ஈமான்' (நம்பிக்கை விசுவாசம்) உடைய அஸமியமிருக்கிறது'' என்று பிறிதொரு ஹதீது பகரு கின்றது ''அல்ஈமானு அன்துஃமின 3பிருஃயதீ''

'சுலூக்' என்னும் பாதை நடப்பவர்கள் தங்கள் பார்வையிலிருந்து வஸ்துக்களினது வஸ்துத் தன்மையை மறைந்து விடுகின்ற மாபெரும் நிலையை அடைகின்றார்கள். அவர்களின் கண்காட்சியான பார்வையில் அல்லா(ஹ்)வின்

வேற்றுமைப் பொருள் என்பது கிடையாது. இந்த நிலையில் அவர்கள் 'இன்பிஸால்' என்னும் பிரிதலுடைய எதிர்பதமான 'இத்திஸால்' (ஐக்கியம் —முக்தி' என்று அழைக்கப்படுகின்றனர்.

சில தர்வேஷுகள் தங்களை விட்டும் சாதாரண ஜனங்கள் நீங்கி இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தங்களை கம்பளி ஆடைகளால் போர்த்திக் கொண்டு நல்ல உயரிய உணவுகளை அருந்துகின்றவர்களாய் இருந்தார்கள் ''தனது சொந்த பீருடைய காலத்திலேயே அன்னாரின் உறவை வெட்டிக் கொண்டு, மற்றொரு பீரைத் தேடுகிறவன் அல்லா(ஹ்)விடம் 'பைஅத்து'வுடைய நேரத்தில் தான் அளித்த வாக்குறுதியை தறித்துக் கொள்வது போன்றது என்று ஷெய்குல் அக்பர்(றலி) அவர்கள் அருளி இருக்கிறார்கள் ஒரு நபியைப் பின்பற்றிய ஒருவர் முந்திய நபியின் வாழ்நாளிலேயே மற்றொரு நபியைப் பின்பற்ற முடியாது.

'அல்லா(ஹ்)வினும் வேறு என்ற (மாய்மையான) சங்கற்பவிகற்பமாகிய எண்ணத்தை மனமானது தன்னுள் அடக்கிக் கொள்ளாதிருக்கும் நோக்கத்துக்காகவே 'ஷுக்லு' என்னும் அப்பியாஸ முறையையும், 'திக்று' என்னும் 'ஹக்கு'டைய திருநாமங்களை ஜெபிபத்தலாகிய தியானத்தையும், 'முராக்கபா' என்ற மனதின் பல்வேறு எண்ணங்களைப் பரிசோதித்தலையும் ஏற்படுத்தப்பட்டன

ஆரம்பக்காரனுக்கு அவனுடைய குற்றங்களை எடுத்துக் கூறினால் அவன் உன்னை விட்டும் தூரப்பட்டு விடுவான் ஹிருதய சுத்தம் ஏற்பட்ட பிறகு சகல குற்றங் குறைகளும் தாங்களாகவே மறைந்து விடும்.

நேர்வழி காட்டும் ஷெய்கு மேற்குத்திசையிலும் முரீது (சிஷ்யன்) கீழ்த்திசையிலும் இருக்கக்கூடும் எனினும் பீர் உடைய மிகக் குறைந்த தகுதியாதெனில் அவர் 'கஷ்புல் குலூபு' (என்னும் முரீதுடைய உள்ளங்களிலுள்ளவற்றை

அறிதல்)ஐயும். 'கஷ்புல்குபூறு' (என்னும் மரித்தோரின் நிலைமைகளை உணர்தல்)ஐயும் பெற்றிருப்பதாம் அவருக்கு இந்த தகுதி இல்லாவிடில் 'முரீது' கொடுப்பது அவர் பேரில் 'ஹறாம்' (விலக்கப்பட்டது) ஆகி இருக்கிறது உலகத்தின் கடந்த விஷயங்களையும், நிகழப் போகும் விஷயங்களையும் அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் தான் பூமியில் அல்லா(ஹ்)வின் பிரதிநிதியாக இருக்கக் கூடியவர் ',இன்னீ ஜாஇலுன் பில் அர்ளி கலீபா'' நாம் அவரை பூமியில் (நமது) பிரதிநிதியாக்கிறோம்.

பீர் ஆகிய ஞானகுருவாகிறவர் நீ இறைவனை அடுத்தற்குரிய 'பர்ஜக்' என்னும் நடுநிலையாயிருக்கிறார்.

பிரகாச மிக்க சூரியனை நீ பார்ப்பதற்கு உனக்கு புகையினால் மூடப்பட்ட கண்ணாடியொன்று தேவைப்படுகின்றது. 'முரீதின்' பேரிலுள்ள பீருடைய செல்வாக்கு முரீது தனது சரீர சம்பந்தத்தை நீக்கிக் கொண்ட பிறகும் தங்கி நிற்கின்றது மன்சூருல் அல்லாஜ் (ரஹ) அவர்களுக்கு பரீதுத்தீன் அத்தார் (ரஹ) அவர்கள் 150 வருட காலம் பிந்தியவர்களாயிருந்தும் ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் அத்தார் (ரஹ்) அவர்களுடைய குறைகுணங்களை சீர்படுத்தினார்கள். முதல் 'பீர்' காலமான பிறகு ஒருவன் மற்றொரு பீரிடம் 'பைஅத்து' பெற்றுக்கொள்ளக் கூடும். ஒன்றன்பின் ஒன்றாக அபூ—யஸீது பிஸ்தாமீ (றலி) அவர்கள் 12 பீர்களைப் பெற்றிருந்தார்கள் முடிவில் எல்லா பீர்களும், 'அல்ஹாதி' (நேர்வழி காட்டுவோன்) என்ற இஸ்மின் தோற்றமாகும் முரீது தனது 'பீருக்கு' பெருங் கண்ணியத்தையும். மரியாதையையும் அளிக்கிறார்.

'முரீது'கள் சாதாரணம் என்றும், விசேஷம் என்றும் இரு வகையினராவர். அவர்களின் தகுதிகளுக்கும், தன்மைகளுக்கும் தக்கவாறு பீர்' அவர்களுக்கு உபதேசிக்கிறார். ஒருவன் சாதாரண போதனைகளைப் பெறுகிறான்; மற்றவர் சாதாரண முரீதுகளுக்கு அறிவிக்கப்படாத

பீர் ஞானோபதேசிகர்

(விசேஷ)போதனைகளையும் பெறுகிறார். ''எனது வார்த்தைகளே 'ஷரீஅத்து' ஆகும்; எனது செயல்கள் 'தரீகத்து' ஆகும்; எனது சொந்த நிலைமையே 'ஹகீகத்து' ஆகும்''; என்ற பொருள் கொண்ட 'அஷ்ஷரீஅத்து அக்வாலீ வத்தகரீத்து அப்ஆலி வல்ஹகீத்து அஹ்வாலீ'' என்ற ஹதீதை நாயகம் (ஸல்) அவர்கள் அருட் செய்திருக்கிறார்கள்'

சுயநலம் என்பது 'முரீது'டைய தன்மைக்கு ஒரு கொடிய விஷம் போன்றது; தனது சமுகத்தில் செய்யப்படும் எத்தகைய செயல்களைப் பற்றியும் தன்னை யாதொரு கேள்வியும் கேட்கக்கூடாதென, கிலுறு' (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களை முரீதாக எடுத்துக் கொள்வதற்கு முன்னர் நிபந்தனையிட்டிருந்தார்கள் கப்பலை (துவாரமிட்டு) மூழ்கடித்ததைப் பற்றியும், வாலிபனை கொலை செய்ததைப் பற்றியும் கேட்ட கேள்விகளை 'கிலுறு' (அலை) அவர்கள் மன்னித்து விட்டார்கள் ஆனால் சுவரைப் பழுது பார்த்ததற்கு பணம் வாங்காத விஷயத்தைப் பற்றிக் கேட்கப்பட்டதும். மூஸா (அலை) அவர்களை (ஒன்றும் பேசாது) அனுப்பி வைத்து விட்டார்கள் முதல் இரு கேள்விகளும் 'ஷரீஅத்து'க்காக வேண்டியே கடைசி கேள்வி தன் சுயநலத்தைக் கருதியே. அபூயஸீது பிஸ்தாமீ (றலி) அவர்களும். உதுமான்—கைபரி அவர்களும் சேர்ந்து தொழுது கொண்டிருந்தார்கள். உதுமான் கைபரி அவர்கள் 'ஏ இறைவா! நான் விரும்பும் சகலவற்றையும் எனக்கு அளிப்பாயாக' என்று கூறி தனது தொழுகையை முடித்தார்கள் அபூயஸீதில் பிஸ்தாமீ அவர்களோ. 'ஏ இறைவா! நான் விரும்பும் சகலவற்றையும் தரித்து விடுவாயாக' என்று முடித்தார்கள் 'உதுமான் அவர்கள். 'இது எப்படி சரியாகும்? என்' றார்கள் அதற்கு அபூயஸீது (றலி) அவர்கள் கூறிய பதிலாவது;— ''ஹக்கைத் தேடும் ஒருவனுக்கு தனது நப்ஸுடைய இச்சைகளுடன் என்ன வேலையிருக்கிறது அவ்வாறானவன் மாஸிவல்லா(ஹ்)வென்னும் 'ஹக்'கின் வேறான பொருளை உதறித்தள்ளிவிட்டு தனது (கண்டிப்பான) இருப்பையே மறந்து விடுகிறான்;

'ஷரீஅத்து' என்பது உலமாவினாலும், 'தரீகத்து', 'ஹகீகத்து' என்பது 'மஷாஇகு'களாலும் போதிக்கப்படுகின்றன. உலகத்தில் தீங்கு பரவாதிருத்தலைப் பார்த்துக் கொள்வதே 'உலமாவின் வேலை. அவர்கள் நரகத்தின் பயத்தைப் பற்றி எச்சரித்தும், சுவர்க்கத்தின் ஆசி கூறியும் வந்தார்கள். மேலும், சீன தேசத்தின் மாபெரும் மதிற்சுவர் இல்லாமல் 'யஃஜூஜ்', 'மஃஜூஜ்' கூட்டத்தார்களை உலக சமாதானத்தைக் கலைக்காது செய்தற்கு முடியாது (என்றும் அவர்கள் கூறுகின்றனர்) ஆனால் அல்லா(ஹ)வின் அளவிலே யாத்திரை செய்யும் ஒருவனை இங்கு தடைசெய்து நிறுத்துவது அவனுக்கு முன்னர் ஒரு முள்வேலியைப் போடுவதற்கு ஒப்பாகும். உயரிய நாட்டங்களையும் நற்குண நற்செய்கைகளையும் உடையோரின் எதிரிலுள்ள அந்த முள்வேலியை ஒளலியாக்கள் நகர்த்தி விடுகிறார்கள். படிப்படியாக அவர்கள் அத்திரையை உயர்த்தி விடுகிறார்கள். மேலும் இப்பிரபஞ்சம் பூராவும் 'ஹக்'கின் ஜோதியைக் கொண்டு நிரப்பப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பதை அவர்கள் கண் முன்னர் பிரத்தியட்சமாகக் காட்டப்படும் வரை அவர்களின் திரை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் செய்வது 'கஷ்பு' (ஆலம் மிதாலின் காட்சிகளை நோட்டமிடுதல்) கொண்டேயொழிய கற்பனையும் வெற்று எண்ணங்களையும் கொண்டதன்று. 'ஹக்'கைத் தவிர சக்தியும், பூராயமுடையது யாதொன்றுமில்லை என்பதை முரீது உலகிலேயே பார்த்திருக்கிறார். 'ஹக்'கைத் தவிர பார்ப்பவனும் கேட்பவனும் பேசுபவனும் யாருமில்லை. கொடுப்பவனும், வாங்குபவனும், வைத்திருப்பவனும் யாருமில்லை ஹக்'கைத் தவிர.

பீர் ருஹ்னேபதேசிகர்

இரண்டாவது, தடவையும் எனது பீர் (பிரமணீய) பூநூலுக்காக வேண்டி தங்களது 'கிர்வா'வென்னும் ஆடையைக் கைவிட்டார்கள்.

அவர்கள் தனது தொன்னூறு வருடங்களின் சேகரத்தை 'குப்பார்'களான அசுவாசிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள் (அத்தார்) பீர் அவர்கள் அந்தரங்க அகமியத்துக்காக வேண்டி வெளியரங்க வேஷங்களை விடுத்தார்கள். ஆரம்பத்தில் 'முமூட்சு' நீண்ட ஆடையை போர்த்திக் கொண்டு பக்தியையும், விசுவாசத்தையும் கடைபிடிக்கிருர்; முன்னேற முன்னேற அவர் யாதொன்றையும் உணர்வதில்லை. 'சலாமத்து' ஆகிய பாதுகாவலான நிலையை விடுத்து 'மலாமத்து, ஆகிய ஒன்றையும் அறியாத நிலையை எடுத்துக் கொள்கிருர். அதாவது, வெளிவேஷங்களை அவர் கைவிட்டு விட்டு உண்மையான பக்தியைக் கடைபிடிக்கிருர் நீ உனது (குறுகிய) தன்மையை மறந்துவிட வேண்டுமானல் இந்த விடுதியினுள் புகுவாயாக புகுந்து, அந்த விடுதியும், அதன் சொந்தக்காரனும் உனக்குஎன்ன செய்திருக்கிருர்கள்' என்று பார்ப்பாயாக அங்கு தான் நீ 'குலிர் ரூஹுமின் அம்ரிறப்பி' என்பதன் அர்த்தமாகிய ' நபியே! ரூஹு (ஆத்மா) ஆகிறது எனது இறைவனுடைய 'அமரு' ஆகிய ஏவலில் நின்றுமுள்ளது என்று சொல்வீராக'' என்பதை உணர்வாய். விடுதியாகிய தங்குமிடம் என்பது ஒருவன் காதலில் மூழ்கும் திக்கு திசையற்ற ஸ்தானம். 'ஷரீஅத்'தின் சட்டதிட்டங்கள் ஸ்தூல சரீரத்துக்கேயொழிய 'ரூஹு' ஆகிய ஆத்மாவுக்கன்று. ''யௌமது பத்திலுல் அர்ளு கைருள் அர்ளு'' — அந்த நாளில் பூமியானது வேரொரு பூமியாக மாறும். (குர்ஆன்) அந்தரங்க நிலைமைகள் இந்த தடைகளுக்கெல்லாம ஐக்கியப்பட்டவையன்று. துன்னூன்—மிஸ்ரீ (றலி) அவர்கள் நாற்பது வருஷ பக்தியில் ஈடுபட்டிருந்த சிஷ்யரை 'பர்லு'. 'சுன்னத்து' ஆகியவற்றைத் தவிர இதர வணக்கங்கள் சகலவற்றையும் விட்டு விடும்படி உத்தரவிட்டார்கள்

அஸ்ராரே அனல்ஹக்

இந்த பிரபஞ்சம் அல்லாஹ்வின் ஊதலாக இருக்கிறது 'பைஹூற்றஹ்மானி' (றஹ்மானின் கொடை)யாக கண்டிப்பாக அது ஆகி இருக்கிறது. 'அல்ஆலமு கர்புன் மின்கர்புர் ரஹ்மான்' — இந்த பிரபஞ்சமாகிறது றஹ்மானின் ஊதுதல்களின் நின்றும் ஒரு ஊதலின் எழுச்சியாயிருக்கிறது. எஜமானின் சமுகத்தில் நீ பல வருட காலம் பட்டு வந்த முயற்சிகளாலும் அடையாத 'பஹு' நிலையை ஒரே ஊதலால் அடைந்து விடுதலாம் 'இன்ன யௌமுன் இந்தறப்பிக கஅல்பிFசனதின் மிம்மாத உத்தூன்'', 'நீ கணக்கிடக்கூடிய ஆயிர வருடங்கள் உனது றப்பினடத்தில் ஒரு தினத்துக்கு சமானமாகும்'

11-வது அத்தியாயம்

முரீது—சிஷ்யன்—அல்லது முமுட்சு

மனிதர்கள் மூவ்வகைப்படுவர்' அவர்களாவன:-

(A) 'வஹ்தத்து' ஆகிய ஏகத்துவத்திலிருந்து 'கத்ரத்து' ஆகிய பலவற்றினளவில் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள், தங்கள் (சுபாவ) குணங்கள் என்னும் இருளால் மூடப் பட்டவர்கள் இது 'தெய்வீகக் கோபம்' என்பதினுடைய 'தஜல்லி'யாகிய தோற்றமாகும். ''அஊதுபி அப்விக மின் சக்திக அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்றஜீம்'' ''நான் உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பாகிய பாது காவலைத் தேடுகிறேன்; விரட்டியடிக்கப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன்'' என்ற பிரார்த்தனை இதற்காகவே ஏற்பட்டது துரிதத்தில் கலைக்கப்படுகின்ற கோடைகால மேகத்தைப் போன்றே இந்த 'தஜல்லி' உண்டா யிருக்கிறது சாலிக் ஆகிய முமுட்சுவினுடைய ஒப்புக்கொள்ளப் பட்ட மனித வாழ்வின் ஜீவியத்துக்குத்தான் ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் பொருத்தத்திற்குரிய வாழ்வை நடத்துவான் வேண்டி யும், தங்கள் தங்கள் இனத்தவர்களின் பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து பிரபஞ்சத்தின் கண்டப் பொருள்கள் 'ரூஹு' ஆகிய ஆத்மாவின் தன்மையைப் பெருமலிருந்தற்காகவும் மனித வர்க்கத்தின் பொருத்தப்பட்ட மறதியும் உண்டாயிற்று. இவ் வாருன நிலை சில ஔலியாக்களுக்கும், இத்ரீஸ் போன்ற நபி மார்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருந்தது 'தாத்'துடைய 'தஜல்லி' ஒரு வினடி உதயமளித்து மறு வினடி மறைந்து விடுகின்றது. இடைவிடாது இந்த 'தஜல்லி' ஏற்பட்டால் கண்டிப்புகள் மறைந்து விடும். 'அர்வாஹுன அஜ்சாதுன வஅஜ்சாதுன அர்வாஹுன'—நமது ஆன்மாக்களே நமது சடலங்கள். நமது சடலங்களே நமது ஆன்மாக்கள்

அஸ்ராரே அனல்ஹக்

(B) சில மனிதர்கள் 'தாத்'தின் தஜல்லியைக் கொண்டு தங்களை மறந்து சதாகாலமும், 'மகாமுன் மஹ்மூது' என்னும் புகழப்பட்ட ஸ்தானத்தில் தரிபட்டிருக்கிறார்கள் அவர்கள் 'மஜ்தூபு' என்னும் பரவச நிலையில் சொக்கி கறக்கமுடையோ ராயிருக்கின்றனர்.

(C) அந்த நிலையிலிருந்து திரும்பி சிலர் 'சாலிக்' ஆகிய முமுட்சுவாக ஆகிவிடுகின்றனர் அவர்களின் 'சுலூக்கு' ஆகிய யாத்திரையில் சில வேளை சுயேச்சையாக திரிந்து கேவலப்படுகின்றனர்; பின்னர், மிருகங்களைப் போலாகி மேலும் கேவலத்தை யடைகின்றனர் ''வஉலாஇக கல் அன் ஆமி பல்ஹும் அளல்லு'' சில வேளை சிலர் 'தாத்'துடைய 'தஜல்லி' யிலிருந்து 'சிபாத்'துடைய 'தஜல்லி'யாகி பின்னர் 'சிபாத்' துடைய 'தஜல்லி!யிலிருந்து 'அப்ஆல்' உடைய 'தஜல்லி'யைப் பெற்று உன்னதமாக்கப்பட்டு அவர்களின் யாத்திரையுடைய சுழற்சியையும் முடித்துக் கொள்கின்றனர்.

'சுலூக்' என்னும் பாதை நடத்தல் 'அல் அல்லாஹ்' வென்ற 'அல்லாஹ்' அளவிலும் 'Fபில்லாஹ்' வென்ற 'அல்லாஹ்'விலும், 'மஅல்லாஹ்' உடனும் என்ற பல்வேறு வகைப்படும் இந்த யாத்திரை மற்றவர்களை சீர்திருத்து வதற்காகவேயாம். ஒரு 'மஜ்தூபு' தனது பரவச நிலையை விட்டும் திரும்புவது பிறரை சீர்திருத்தவேயாம் தன்னுடைய 'ஜத்பு' ஆகிய பரவச நிலையில் அவர் நிழலிடாத நடுப்பகல் சூரியனைப் போன்றிருக்கிறார் அவருடைய திரும்புதலில் அவர் அஸ்தமிக்கும் சூரியனைப் போன்றிருக்கிறார். அந்த அஸ்த மிக்கும் சூரியன் தனது பூரா யாத்திரையை முடித்ததாயிருக் கிறது. 'இன்றைய தினம நான் உங்களுடைய மார்க்கத்தை சம்பூரணமாக்கித் தந்து எனது அரும்பெருங் கிடைத்தற்கரிய சன்மானங்களை பூர்ணமாக உங்கள் மீது அளித்தேன்'' — ''அல்யௌம அக்மல்துலகும் தீனகும் வஅத்மம்து அலைக்கும் நிஃமதீ''.

முரீது – சிஷ்யன் அல்லது முமுட்க

தனது யாத்திரையை முடித்துக் கொண்ட ஒரு 'பீர்' தனது ஒவ்வொரு முரீதுடனும் யாத்திரையிலாகிறார் ஒரு வித்தானது மரமாக ஆகி, மறுபடியும் வித்தாகி, இவ்வாறே மீண்டும் கணக்கற்ற முறைகள் செய்வது போன்றும், ஒரு புள்ளி ஒரு வரியாக ஆகி ஒரு சுற்றுக்கோடாக ஆகி, மறுபடியும் புள்ளியின் நிலையையே அடைவது போன்றும் அந்த 'பீர்' தனது முரீதுடனும் யாத்திரை செய்து கொண்டேயிருக்கிறார். இதுவோ ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவினுள் நுழைதலன்று. ஆனால் 'தஜல்லி'யினது ஒரு வெளியீடுதான். இதனைக் கருதியே மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ) அவர்கள் ''எழுநூற் றெழுபது சரீரங்களை நான் கண்டிருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்கள்

முதன் முதலில் 'பீர்' தனது சொந்த 'சுலூக்கு' ஆகிய யாத்திரையை முடித்துக் கொண்டு அந்த யாத்திரையை ஒவ்வொரு 'முரீது'டனும் நிறைவேற்றுகிறார் இவ்வாறாக அவர் முன்னிருந்ததைவிட மேலான பூர்ணத்தைத் தடவைக்கு தடவை அடையப் பெறுகிறார். நபி அவர்களின் ஜோதி பெரியதோர் சூரியனாயிருக்கிறது: ஒரு சமயம் மூஸாவிலும் மறுசமயம் ஆதமிலும் தோற்றமளித்தது பூமத்திய ரேகையில் தான் எஜ்மானனின் நேரமிருக்கிறது. அது சகல சாய்கைகளையும், நிழல்களையும் விட்டு நீங்கியது (குல்ஷன் – ராஜ)

'சூபி'யாகிறவர் அந்த கோப்பையினின்றும் குடிக்கும் வரை கலப்பு நீங்கியவராக ஆவதில்லை.

காய் பழமாக ஆவதற்கு மிகுந்த யாத்திரை அவசியப்படுகிறது. (மத்னவீ)

'பீச்' முரீதின் வடிவைப் பெற்று தனது ஆசிகளை அளிக்கிறார். 'பீரு'டைய ஆன்மா 'முரீது'டைய ஆன்மாவை தனது செல்வாக்கைக் கொண்டு வசப்படுத்திக் கொள்கிறது இதுவோ 'புருஜ்'

அல்ஃபாரே அனல்ஹக்

என்னும் 'தஜல்லி'யே தவிர, ஒன்றினூட நுழைதலன்று. இதுவோ, அநேக விளக்குகளை ஒரே விளக்கின் நின்றும் கொளுத்துவது போன்றும் முதல் விளக்குதான் அல்லாஹ் வினது ஜோதியினின்றும் கொளுத்தப்பட்ட முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஜோதி ''அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்லி. மஸலு நூரிஹி கமிஷ்காதின் பீஹா மிஸ்பாஹுன் அல்மிஸ்பாஹு பீஸுஜாஜதின்'' (குர்ஆன்) அல்லாஹ் வானங் களினதும், பூமியினதுமான ஜோதியாயிருக்கிறான்: அவனது ஜோதிக்கு உவமானமாவது யாதெனில் மேல்பாகத்தில் விளக் கொன்றை வைக்கப்பட்ட விளக்குத் தண்டு போன்றும் அந்த விளக்கு ஒரு சிம்னியினுள்ளும்

அதாவது, அந்த ஜோதி 'கல்பு'(இதயம்) என்னும் விளக்கில் பிரகாசிக்கின்றது. அந்த 'கல்பு' ஆகிய விளக்கு சரீரமென்கிற சிம்னியினுள்ளிருக்கிறது இவ்வாறு பல்வேறு தன்மையடைந்தது திரிகளின் பெருக்கத்தினால், ஜோதியினால் அன்று ஆதம் (அலை) அவர்களில் ஆரம்பித்து நபித்துவம் முஹம்மது (ஸல்) அவர்களில் சம்பூர்ணமடைந்தது. (அவர் களே நபித்துவத்தின் முத்திரையாகும்) அதாவது ஹகீகத்து முஹம்மதீயானது சகல நபிமார்களிலும் சுற்றுதலடைந்து 'முத்திரை' பெற்று முஹம்மது (ஸல்) அவர்களில் பூர்த்தி படைந்தது. 'விலாயத்து' மட்டுமே உலகில் தங்கியது அவ் வாறு தங்கி இரண்டாவது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தது சாலிக் ஆகிய முமுட்சு ஒரு குறிப்பிட்ட தகுதி அல்லது அளவின் தோற்றமாகயிருக்கிறான்; அவன் அந்த தோற்றத்தில் மட்டுமே அடைபட்டிருக்கிறான். ஒரு தோற்றம் மற்றொரு தோற்றத்தினுள் சென்றேற முடியாது சாலிக்கு ஆகிய முமுட்சு 'பனா' நிலையை அடையும்பொழுது தோற்றமும் மறைந்து சாலிக்கு சம்பூர்ணத்தைப்படையப் பெற்று 'பகா'வை அடை கிறான். இந்த நிலையில் அவனது தகுதி விரிவடைந்து 'தாத்து' 'முத்தலக்'காகிய சம்பூர்ண தத்சொரூபத்தை அவன் உணர்கிறான் அதாவது, தனது அறிவினுள்ளே சம்பூர்ண 'சூபி'யுடைய அறிவில் அறிவு இருப்பதை உணர்கிறான்.

முரீது — சிஷ்யன் அல்லது முமூட்சு

'ஹக்'குடைய அறிவு மறைந்து விடுகிறதென்று மௌலானு ரூமி (கத்) அவர்கள் கூறியிருப்பது இதைக் குறித்தே முதன் முதலில் சாலிக்கு ஆகிய முமூட்சு தனது கைர் ஆக தோன்றின 'ஷான்' (தோற்றம்) அல்லது 'இஸ்மி'லிருந்து மேல் நோக்கிச் சென்று அதனை முடித்துக் கொண்டு இப்பொழுது சம்பூர்ண 'தாத்'திலிருந்து (கீழ்நோக்கிப்) பிரயாயணப்படுகிறுன். கண்டமானது அகண்டமாக ஆகி விடுகிறது. 'லாயஸஅனி அர்பீ லா ஸமாஇ வலாக்கின்யஸ அனிகல்பி அப்துல் முஃமீன்'' வானம் பூமி எனக்கு விசாலமானதல்ல; எனினும், உண்மை விசுவாசியின் உள்ளம் எனக்கு மிக விசாலமானது இதுவே 'சூபியின்' அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்திருப்பதாகும் ஒரு துளியாக இருந்த சூபி ஒரு பெரிய சமுத்திரமாக ஆகினர். (கண்டார்த்த) தன்மையை இன்மையாக்கலே அவரின் தகுதியை விசாலிப்பதாகும் — ஒரு துளியினது தகுதியேதான் சமுத்திரத்தின் தகுதியைப் பெற்றது. நீ ஒரு நீர்த்துளியின் இதயத்தைக் கிழிப்பாயேயாகில் அதனுள் நூறு சமுத்திரங்களைக் காண்பாய். (குல்ஷன் ராஜ்) 'ஒடத்திற்குள் கடல்' என்பதன் பொருள் இதுவே, தன்னளவிலே (அதாவது தன் கண்டிப்பு நிலையில்) நீர் துளி இன்மையாக்கப்பட்டு சமுத்திரத்தில் நிலைபாடானது தன்னைச் சுற்றிலுமுள்ள சகலவற்றையுஞ் சேர்த்து 'அர்ஷு' ஆனது என் இதயத்தின் ஒரு மூலையிலிருந்தாலும் நான் அதனை உணர்ந்தறிய மாட்டேன்'' என்று அபூயஸீதுல் பிஸ்தாமி (ரலி) அவர்கள் அருட் செய்திருக்கிருர்கள்.

ஷரீஅத்து (சரியை)யும், தரீகத்து (கிரியை)யும் ஒழுங்கான முறையில் எடுத்து நடத்தப்படாவிட்டால் ஹகீகத்து ஆகிய அகமியம் ச்ரிவர உண்டாகாது. எழுதுகோலானது சரியானபடி சீவப்படா விட்டால் எழுத்துக்கள் ஒழுங்காக அமையாது.

மனிதர்கள் நான்கு வகைப்படுவர் அவர்களாவன:—

(1) சிருஷ்டிப் பொருள்களைப் பார்க்காது 'ஹக்கை) மட்டிலும் தெரிசிப்போர்.

(2) சிருஷ்டிப் பொருள்களை பிரத்தியட்சமாகவும் 'ஹக்'கை உள்ளீடாகவும் பார்ப்போர். இவர்களை 'தவில் அக்லு' என்னும் 'விவேகிகள்' என்றழைக்கப்படுகிறது இவர்களுக்கு சிருஷ்டிப் பொருளிலே 'ஹக்கு' தோற்றமளிக்கிருன்.

(3) 'ஹக்'கை பிரத்தியட்சமாயும், சிருஷ்டிகளை மறைந்ததாயும் தெரிசிப்போர். இவர்களுக்கு 'ஹக்கி'லே சிருஷ்டிப் பொருள்கள் தோற்றமளிக்கின்றன. இவர்கள்தான் 'தவில்—ஐன்' என்னும் தெரிசனையுடையோராவார்.

(4) ஹக்கை கல்கிலும் கல்கை 'ஹக்'கிலும் கிலும் இரண்டுக்குமிடையே யாதொரு திரையுமின்றி தெரிசிப்போராவார் இவர்களே 'தவில்—ஐன்' வஅக்லு என்னும் பார்வையும், விவேகமுடையோருமாகும். இதுதான் 'கத்ரத் ஆகிய பலவற்றினுடன் 'வஹ்தத்து' ஆகிய ஏகத்துவத்தை தெரிசிப்பதைக் குறிப்பிடுகிறது 'சுத்த தௌஹீது' ஆவது யாதெனில் சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வைக் காண்பதே யாகும்' என்று இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கூறியிருக்கிருர்கள். ''அத்தௌஹீதுல் காலிஸு அன்லாயாராஹ ஃபீகுல்லிஷைஇன் இல்லல்லாஹ்'' இவரோ சகல வஸ்துக்களிலும் அல்லாஹ்வின் 'ஜமால்' என்னும் பேரழகைப் பார்க்கிருர் இந்த 'ஜமால்' ஆகிய பேரழகுதான் ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ளமையாக உள்ள 'ஹகீகத்து முஹம்மதீ'யாகும். ஏனெனில் இந்த அகமியத்தின் மீதுதான் ஒவ்வொரு வஸ்தும் அடங்கியிருக்கிறது வஸ்துவோ அந்த அகமியத்திலிருந்தும் தோன்றி அதனளவிலேயே மீண்டுவிடுகிறது. ஹக்குடைய ஜமால் என்னும் பேரழகு ஒவ்வொரு வஸ்துவிலும் பிரத்தியட்சமாயிருக்கிறது வஸ்துக்கள் அந்த 'ஜமால்' ஆகிய 'ஹகீகத்து முஹம்மதீ'யின் கண்ணாடிகளாயிருக்கின்றன. இந்த கடைசி வகை 'சாலிக்கு' ஆகிய முரீட்கு முஹம்மது (ஸல்) அவர்களை தனது மத்திய ஸ்தானமாகக்கொள்கிருர்.

முரீது — சிஷ்யன் அல்லது முமுட்சு

சந்தேக நிவர்த்திக்குரிய ஔடதமாவது ஆரிபு ஆகிய மெய்ஞ்ஞானியின் சமூகத்திலிருப்பதேயாம். தனது பீருடைய சாவகாசத்தில் முரீது தன்னுடைய சந்தேகங்கள் யாவற்றையும் போக்கிக் கொள்ள வேண்டும்; சூரியனானது உச்சியை அடுத்ததும் நிழலானது மறைந்து விடுகிறது. ''குல்ஜா அல்ஹக்கு வஜஹகல்பாதிலு'' சொல்வீராக, மெய் வந்து விட்டது; பொய் மறைந்து ஒழிந்தது'. முரீதுக்குரிய தன் பீரின் உபதேசம் செம்பை பரீட்சிக்கும் உரைக்கல் போன்றிருக்கிறது அவர் அறிவு கற்பதிலும், நினைப்பதிலும் மட்டும் அடங்கியதன்று; ஆனால் அதனினும் உன்னதமானது. அதாவது, இவ்வித முறைகளால் கற்க முடியாத தொன்றாயிருக்கிறது. 'ஹால்' (நிலை) ஆகிய கஷ்பு என்னும் திரை நீங்கலாலேயே அடையப்படுகிறது. 'ஹால்' என்னும் நிலை தெரிந்து கொண்டு சென்றால் அது 'மகாம்' ஆகிய பதவியாக ஆகிறது. யாருக்கு 'ஹால்' ஒரு தடவையேற்பட்டதோ அவரே ஆரம்பக்காரராகி ஒரு 'வலீ'யுடைய பதவியைப் பெறுகிறார். இந்த 'ஹால்' ஆகிய நிலையைத் தொடர்ந்து இடைவிடாது அடையப் பெறுபவரே 'குத்பு'ம் கௌதுமாக ஆகிறார். ''திராட்சை ரசத்தை சுற்றிக் கொணரப்படுங்காலே அதனின்றும் ஒரு கோப்பை அல்லது இரண்டையே குடித்துக் கொள்; நிரந்தரமாக அதில் மூழ்கிப் போவதை எதிர்பார்த்து நில்லாதே. (ஹாபிஸ்)

ஔலியாக்கள், குத்புமார்கள் ஆகியோரின் பதவிகள் இந்த ஹால் ஏற்பட்டு நிற்கும். நேர. அளவைப் பொறுத்திருக்கிறது: இதனை சில ஜனங்கள் ஒரு வினாடி நேரம் பெறுவர்; சிலர் அவர்களின் தகுதிக்குத் தக்கவாறு நீடித்த நேரமும், மற்றுஞ் சிலர் சதாகாலமும் பெற்றிருப்பர்,

''அலலதீனஹும்ம அலாசலாத்திஹிம் தாயிமூன்'' அவர்கள் நித்திய கால நிரந்தரத் தொழுகையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'மிஃராஜ்' என்னும் இரவில் நடந்த யாத்திரை 'லைலத்துல் கத்ரு' என்னும் மகிமை மிக்க இரவு ஆகிய இந்த

நேரங்களேயாம் ஜனங்களுக்கு 'ஹாலு'(நிலை)ம் 'விசாலு' (ஐக்கியம்)ம் பல்வகைப்படும். அவையாவன:—

(A) வணக்கவாளி (ஆபிது) தனக்கு யாதொரு அசைதலுமின்றிய ஒரு சடப்பொருளாகத் தன்னைக்காணும் ஹால் என்னும் பனு நிலை

(B) 'ஆஷிக்கு' ஆகிய காதலன் ஹக்குடைய அழகுகளைப் பல்வேறு வஸ்துக்களிலும் தெரிசிக்கிறான்.

(C) 'முதகல்லிக்' ஆகிய நேர்மையாளன் தனது பண்புகளை 'ஹக்'குடைய பண்புகளாக மாற்றிக்கொண்டு 'குர்பு' - பராயி'லையும், - குர்பு' நவாபிலையும் அடையப்பெற்று அவற்றின் நிலைமைகளையும் அடைகிறான். காதலனோ காதலியுடைய அழகை ஒரு குறித்த தூரத்திலிருந்து தான் தெரிசிக்கிறானேயன்றி தன்னை தனது காதலியின் தோற்றமென்றும், பண்புகளென்றும் காண்பதில்லை. ஆனால் ஏனையோர் அந்த பண்புகளாக மாற்றமடைவதைப் பார்க்கிறான் காதலியின் தெரிசனையால் அவன் தாகசாந்தியடைகிறான். தரிசனையாகிய இந்த திராட்சை ரசத்தின் ஒரு துளியையேனும் ருசித்திருந்தாலும் வணக்கவாளிக்கு அவ்வாறான திருப்தியடையாது. ' ஜனன் யஷ்ரபுபிஹல் முர்ராபூன்'' இந்த பானம் அவர்களின்பால் மேலிருந்து இறங்கிய தண்ணீரால் சேர்க்கப்பட்டது.

( ) 'முவஹ்ஹி'தானவர் 'தாத்தில்' இன்மையாகி தனது தாத்தை ஹக்குடைய தாத்தாகக் காண்பவராகும்

(E) 'முதுஹக்கிக்' என்பவர் தாத்திலிருந்து சிபாத்தளவில் அன்பியாக்களையும், சில ஔலியாக்களையும் போல் கீழிறங்குகிறவராகும். இந்த நிலைமைகள் குறித்த கால அளவைப் பெற்றிருக்கின்றன' சிலர் ஹால் ஏற்பட அவசியமில்லையென்றும். உண்மை விசுவாசம் மட்டும் இருந்தால்போதுமென்றும் கூறுகின்றனர் விசுவாசிகள் கைபு என்னும்

முரீது — சிஷ்யன் அல்லது முமூட்சு

மறைப்பொருளின்பால் விசுவாசங் கொள்கின்றனர்' "யுஃமினூன பில்கைபி' அவர்கள் மறைப் பொருளின் மீது நம் பிக்கைக் கொள்கினறனர்' ஆரிபீன்களான ஞானிகள் மறைப் பொருளைப் பார்க்கின்றனர்' ஆதலின், ஞானம் என்பது பார்வையைப் பொருத்ததேயன்றி வெறும் நம்பிக்கையும் கல்வியுமல்ல. விசுவாசம் என்பது கேட்பதும், கேட்டதைப் பார்த்து நம்புவதும், பார்த்ததின் இருப்பை அறிந்திட உறுதி கொள்வதுமாகும். தாகமுடையோன் தண்ணீரின் பேரைக் கேட்டதும் அவனுக்கு (தண்ணீரின் பேரில்) விசுவாசம் ஏற்படு கிறது. அதை (தண்ணீரை)ப் பார்க்கிருன். நம்பிக்கை அதி கரிக்கிறது. அதை ருசிக்கிருன்' திட உறுதியும். நிச்சயமும் ஏற்படுகிறது' ஒருவன் கேட்பதுடன் நின்று விட்டால் பார்த் தல் ருசித்தல் என்னும் நிலைமைகளுக்கு முன்னேறுவதை விட்டும் தடை பண்ணப்படுவான். ஹால் என்பது கால் என்ற சொல்லினுடைய அகமியமாக ஆக வேண்டும்.

12-வது அத்தியாயம்

சுலூக்கு — பயிற்சிமுறை

பார்வை என்னும் பண்புக்கு பார்க்கல் என்னும் தத்துவத்தைத் தவிர உலகில் யாதொரு தோற்றமுமில்லை. பார்த்தல் என்னும் தத்துவத்துக்கும் கண் என்னும் பார்க்கும் கருவியின் வாயிலாகவேயொழிய யாதொரு தோற்றமுங் கிடையாது. தத்துவாதிகளின் வாயிலாகத் தோற்றமளிக்கும் பண்புகளை 'ஷரீஅத்து' (சரியை)படி 'மலாஇகத்துகள்' என்றும் 'சூபி'யாக்களின் பாஷையில் 'ரூஹூகள்' அல்லது 'ஆன்மாக்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன. தத்துவாதிகள் என்று தத்துவ சாஸ்திரிகளால் அழைக்கப்படுகின்றன. 'ஹக்கு'டைய பண்பாகிகளின் தோற்றமே 'இந்த பிரபஞ்சம். ஒவ்வொரு பண்பும் ஒரு தத்துவத்தின் கோலத்தைக் கொண்டதும் அதன் மூலம் சடலோகத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு கருவியாக ஆனது. தத்துவம் 'மலகூத்து' என்னும் சூட்சுமலோகத்தைச் சேர்ந்தது; பண்பு 'ஜபரூத்' ஆகிய காரண லோகத்தைச் சேர்ந்தது. எனவே சகல கருவிகளும் அவயங்களும் பண்புகளின் தோற்றங்களாகும். மனக்கண் திறந்த தீரன் தனது கருவிகளும் அவயங்களுமான கண்ணாடியிலே ஹக்குடைய பண்புகளைப் பார்க்கிறான். அவ்வேளை அவன் செயல்கர்த்தாவாகிறான். இந்த நிலையை சூபியாக்கள் குர்பு – நவாபில் —(சாலிகுடைய கருவியாக ஹக்கு ஆதல்) என்று அழைக்கின்றனர். சிலவேளை அவன் தன்னை ஒரு தத்துவமாகவும் ஒரு கருவியாகவும் காண்கிறான். அதாவது தான் ஹக்குடைய கருவியாகவும் ஹக்கு செயல் கர்த்தாவாகவும் ஆகிறான்.

'பனா'வென்னும் இன்மை நிலையில் 'சாலிக்'குடைய கண்டிப்பான உள்ளமையை 'ஹக்'குடைய சம்பூர்ண உள்ளமை மிகைத்ததும் சாலிக்கு தனது கண்டிப்புத் தன்மையையும் வஸ்துக்களின் கண்டிப்புத் தன்மையையும் பற்றி நினைப்பதில்லை. இதுவே விலாயத்துடைய நிலை. ஒளலியாக்களுக்கிடையேயுள்ள வித்தியாசங்கள் இந்த நிலையில் அவரவர்கள் தரிபடுவதின் நேர அளவைப் பொருத்திருக்கிறது. சிலர் ஒரு

களுக்கு பயிற்சிமுறை

நிமிட நேரமும் சிலர் ஒரு மணி நேரமும் சிலர் ஒரு நாளைக்கும் பலவாறாக இந்த நிலையின் அனுபவத்தை அடையப் பெறுகின்றனர். தங்கள் வாழ்நாள் பூராவும் இதனை இடைவிடாது பெற்றிருப்பவர்கள் மஜ்தூபு என்றும் பரவச நிலையில் சொக்கிய சுறக்கமுடையோர் என்று அழைக்கப்படுகின்றனர். சம்பூர்ணமான ஓர் நிலையில் அவர்கள் தரிபடுகிறார்கள். இதுவே பகாவென்றும் 'தரிபாடான நிலை' சிலர் நம்புவது படி ஹக்குடைய பகாவாகிய தரிபாடு சாலிக் ஆகிய மூமூட்சுடன் சேர்ந்துகொள்வதன்று.

ஒரு பாரசீகக் கவிஞர் கூறுவது யாதெனில்;—

"கடலோரப் பிரயாணமொன்று செய்து ஓர் அதிசய காட்சியைக் கண்டேன்; கடலினுள் ஓடத்தையும், ஓடத்திற்குள் கடலையும் யான் தெரிசித்தேன்" அகண்ட உள்ளமையை இங்கு ஒரு கடலுக்கும், கண்டிப்பான உள்ளமையை ஒரு ஓடத்திற்கும் ஒப்பிடப்படுகிறது. அல்லது 'தாத்'தையும், 'இன்ஸான்-காமிலை'யும் சுட்டிக் காட்டுகிறது. "லாயஸஅனி அர்ளி வலாசமாஇ வலாகின் யஸ் அனீபிகல்பி அப்துல் முஃமின்" — ஒரு சம்பூர்ண ஞானி ஹக்குடைய மெய்யான கண்ணாடியாக இருக்கிறார். பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவும் 'ஹக்'குடைய சில பண்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்க, ஒரு சம்பூர்ண 'ஆரிபு' அல்லது 'இன்ஸான்காமிலு'க்கு மட்டுமே இதனை அளிக்கப்பட்டிருப்பதேன்? மனிதனே 'ஹக்'டைய சகல பண்புகளையுமுடைய சம்பூர்ணமான கண்ணாடியாக இருக்கிறான். பார்ப்பவனின் முகம் கண்ணாடியில் தோற்றமளித்தற்கு அவசியமான மிக இருண்ட பூச்சுகளை மானிடன்பெற்றிருக்கிறான். 'மலக்கு'களான வானவர்கள் பிரகாச பாகத்தை மட்டிலும் பெற்றிருக்கின்றனர் சடப்பொருள்கள் இருண்ட பாகத்தை மட்டுமே அடையப் பெற்றிருக்கிறன. மானிடனே இந்த இரு பாகங்களையுமே தன்னில் பெற்றிருக்கிறான். அதனாலேயே அவன் ஓர் தகுதி வாய்ந்த சம்பூர்ணமான கண்ணாடியாக இருக்கிறான்.

அஸ்ராரே அனல்ஹக்

'சூபி' யுடைய அறிவில் 'ஹக்கு' டைய அறிவு மறைந்துவிடுகிறது; 'சாதாரண மக்கள் இதனை எவ்வாறு விளங்குவர்?' (மத்னவீ) ஆரம்பத்தில் சிருஷ்டிகள், சிருஷ்டிப் பொருள் என்னும் பாகுபாட்டினால் ஏற்பட்ட 'ஹக்கைப்பற்றிய அறிவு 'சூபி'யுடைய அறிவிலே காலக்கிரமத்தில் மறைந்து விடுகிறது. கீழ்வரும் வரிகள் இதனை மிகவும் தெளிபடுத்து கின்றன. அவை யாவன:— 'சூபி'யுடைய அறிவு 'ஹக்' குடைய அறிவில் மறைந்துவிடுகின்றது; மடையனொருவன் இதனை எவ்வாறு தெளிவான்?

''லாஇலாஹ இல்லல்லாஹ்'' அல்லாவின் வேறான நாயன்யாருமில்லை 'சாலிக்'குடைய உள்ளமையைத் தவிர யாதொரு உள்ளமையுமில்லை இதுதான் 'அஹ'வாதிகளின் கொள்கை உள்ளமையை 'ஹக்கு' (மெய்ப்பொருள்)டைய உள்ளமையென்று நீபூர்ணநிட்சயத்துடன் கருதிக்கொள்வாயாக. 'நான்'மட்டுமே இருக்கிறேன். 'நான்' என்பதைத்தவிர வேறு யாருமில்லை'' !''லாமவுஜூத இல்லாஅஹ'' ''என்னைத் தவிர உள்ளமையுடையான் யாருமில்லை'' சர்வ கர்ப்பனைகளின் அகமியமும் மெய்ப்பொருளாகவே இருக்கிறது சர்க்கரையி லிருந்துதான் பல கோலங்களாயமைந்த மிட்டாய் வகைகள் தயாரிக்கப்படுகின்றன இவைகளுள் யாதொன்றையேனும் நீ விழுங்கியபோது சர்க்கரையின் தித்திப்பைத் தவிர வேறு எதையும் நீ காண்பதில்லை.

'ஷிர்க்கு' — ஹக்குடன் ஓர் இணையை உண்டு பண்ணுதல் - வணக்கத்திலும். காதலிலும் நாயகத் தன்மை யிலும், உள்ளமையிலும் எதிலிருப்பினுஞ்சரி அவ்விதஷிர்க்கு ஆகிய இணைவைத்தல் இருவகைப்படும் ஒன்று 'ஜலீ' (பகிரங்க மானது), மற்றொன்று 'கபீ' (அந்தரங்கமானது) 'ஷிர்க்கு' 'கபீ' என்னும் அந்தரங்க இணை வைத்தல் கருப்பு எறும்புகள் கருங்கல்லின் மீது ஊர்ந்து செல்வது போன்று அவ்வளவு மறைவும், விளங்குதற்கரிதானதுமாயிருக்கிறது அது

களுக்கு பயிற்சிமுறை

'தாத்'திலும். 'சிபாத்'திலும் 'அப் ஆலி'லுமிருக்கும். ''மனிதர்களுள் பெரும்பான்மையோர் 'ஹக்'கின் மீது இணை வைத்தலின்றி விசுவாசங்கொள்வதில்லை'' — ''வமாயுஃமினு அக்தாரஹுமம் பில்லாஹிஇல்லாவஹும் முஷ்ரிகூன். ''அல்லாஹும்ம அந்தரப்பீ வஅனு அப்துக'? 'ஓ' அல்லாஹ்! நீ எனது இரட்சகன். நான் உனது அடிமை!'' என்று சொல்லும் வணக்கவாளிகள் யாவரும் இந்த 'ஷிர்க்கு-கபீ'யில் சிக்கியிருக்கிறார்கள். இந்த 'ஷிர்கை'ப் பற்றியே நாயகம் (ஸல்) அவர்கள், ''அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினஷ்ஷிர்க்கி'' ''ஏ, இறைவா! நான் உன்னிடம் 'ஷிர்க்கு' என்னும் இணை வைத்தலைவிட்டும் காவல் தேடுகிறேன்'' என்று பிரார்த்திக்கிறார்கள் சகல நற்செயல்களும், துற்செயல்களும் 'ஷிர்க்கு' தான். நீ உன்னுடைய (கண்டிப்பான) இருப்புத் 'தன்மையை 'ஹக்கு'டையதில் போக்காவிடில் நீ ஷிர்க்கை விட்டும் (ஒருக்காலும்) தப்பிப் பிழைக்க முடியாது ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்பதே ஷிர்க்கைப் போக்கி 'தௌஹீதை'த் தரிபடுத்தலாயிருக்கிறது சரியை, கிரியையினின்றும் தன்னைத் துண்டித்து அறிவை அடிப்படையாகக்கொண்ட வெறும் விசுவாசத்தினாலும், அவற்றின் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளாலும் திருப்தியடைபவன் எவனோ அவனே ஒரு 'முல்ஹிது' என்னும் வழி கேடானவன் 'ஹால்' என்னும் நிலையைப் பெற்று, தனது பார்வையில் யதார்த்த உள்ளமையை அடைந்து ஷரீஅத்து ஆகிய சரியையின் யாதொரு விஷயத்தையும். தான் 'ஹால்' என்னும் நிலையினால் மிகைக்கப்பட்டு விட்ட நேரத்திலேயேயொழிய மற்ற நேரங்களில் மறக்காதிருப்பவரே உண்மையான 'முவஹ்ஹிது' என்னும் அத்வைதியாவார்.

'குப்ரு'ம் 'இஸ்லாமு'ம் ஒவ்வொன்றும் இருவகைப்படும். அவை யாவன:—

(1) பகட்டான 'குப்ரு' என்றும், உண்மையான குப்ரு' என்றும்.

(2) பகட்டான இஸ்லாம் என்றும், உண்மையான இஸ்லாம் என்றும் பிரிக்கப்படும். வெளிவேஷம் அல்லது போலி 'குப்ரு' என்பது யாவராலும் அறியப்பட்டதே இதுவோ உண்மையை மறைத்து வைத்து அதனை வெளிக் காட்டாமல் இருத்தலாகும் வேளாண்மைக்காரன் ஒருவன் ஓர் வித்தை மண்ணினுள் புதைத்துவைப்பது போன்றும் மெய்யான 'குப்ரு' தான் 'சாலிக்கு'டைய கண்டிப்பான (ஜீவ) அகங்காரம். இதுவோ உண்மையை ஒருவன் தனது அகங்காரத்தினுல் மூடிவிடுதலாம். போலி இஸ்லாம் என்பது 'ஷரீஅத்துடை'டைய சட்ட ரீதிகளுக்கு ஒப்ப ஆசாரங்களைக் கடைபிடித்து ஒழுகுத லாகும் மெய்யான இஸ்லாமோ 'பஃ' நிலைக்குப் பின்னர் 'பகா'வை அடைதலாம் அதாவது ஜீவ அகங்காரத்தைப் போக்கி பிர்ம அகங்காரத்தில் தரிபடுதலாம்.

"கண்ணாடிகளுக்குப் பின்னால் நான் ஓர் கிளியைப் போன்று வைக்கப்பட்டிருக்கிறேன்; நித்திய கால நாயகன் எதைச் சொல்கிறானோ அதனை நான் திரும்பச் சொல்கிறேன்." இங்கு சடத்தை கண்ணாடிக்கும் அதன் பின்னலிருக்கும் ஜீவ அகங்காரத்தை வேலைக்காரனுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. தனது உள்ளமையை இன்மையாக 'சாலிக்' மாற்றிக்கொள்ளும் பொழுது அவனது சகல செயல்களும், அசைதல்களும் ஹக்குடையதாக ஆகிறது "மாரமைத்த இதரமைத்த வலா கின்னல்லாஹா ரமா" — "(பத்ருபோரில்) நீர் ஓர் பிடிமண்ணை (கூழாங் கற்களை) எறிந்தபோது நீர் எறியவில்லை; எனினும், அல்லாஹ்தான் எறிந்தான்."

'பிக்ரு' (சிந்தனை அல்லது ஆராய்தல் அல்லது நோட்டமிடல்) மூன்று வகைப்படும் அவை யாவன:—

(1) இவ்வுலக காரியங்களைப்பற்றிய 'பிக்ரு'.

(2) சுவர்க்க நரகத்தைப்பற்றிய 'பிக்ரு'.

(3) 'தாத்து', சிபாத்தைப்பற்றிய பிக்ரு

களுக்கு பயிற்சிமுறை

மூன்றாவது அல்லது கடைசி வகை 'பிக்ரு' அல்லது சிந்தனை ஒரு விநாடி செய்யப்படினும் அது இரு லோகங்களின் வணக்கத்தைவிட மேலானது "தபக்கருசா அதின் கைருன் மின் இபாததித்தகலைன்". இங்கு வஸ்துகள் வேற்றுமையாகத் தோற்றலை, வேற்றுமையைப் பார்வையினின்றும் அகற்றுவதைக் கொண்டு ஹக்குடைய 'தாத்'தாக கருதவேண்டும். வஸ்துக் களின் எதிரிடையான பண்புகளின் வேற்றுமையை 'ஹக்குடைய பண்புகளாகவும் அவற்றின் செயல்களை ஹக்குடைய செயல் களாகவும் கருதவேண்டும். இதுதான் வேற்றுமை மறைத லாகிய 'வஹ்தத்து' ஆகும் அந்த 'வஹ்தத்'தை அடைதற் குரிய மார்க்கம் இதுவே. முதன்முதலில் நீ உன்னை 'தாத்து' துடைய அகமியமென்றும், எனது'தாத்'தே ஹக்குடைய 'தாத்' தென்றும் பின்னர் கீழிறங்கி 'எனது செயல்களே 'ஹக்கு'டைய செயல்களென்றும் கருதவேண்டும். இதுவோ 'நுஸூல்' ஆகிய. 'படி இறங்குதல்' ஆகும். பிறகு 'உரூஜ்' என்னும் 'படி ஏற்ற'த் தில், எனது செயல்களே, 'ஹக்கு'டைய செயல்களென்றும். எனது 'தாத்'துதான் 'ஹக்குடைய' 'தாத்'தென்றும், கருது வாயாக. மறுபடியும், 'படி இறங்குதல்' ஏற்படுகின்றது இந்த படி இறங்குதல் 'ஹக்கு'டன் யாத்திரை செய்தலாம் - (ஸைர் மஅல்லாஹ) படி ஏற்றமாகிய உரூஜில் நீ '(ஞ)' நிலையை அடைகிறாய் இரண்டாவது படி இறங்குதலில் நீ 'பகா' நிலை யைப் பெறுகின்றாய். படி ஏற்றத்தில் சாலிக்'குடைய செயல் களும், பண்புகளும், 'தாத்து'தும், முறையே 'ஹக்கு'டைய வற்றில் மறைந்துவிடுகின்றன படி இறங்கலில் 'ஹக்'குடைய செயல்களும், பண்புகளும், 'தாத்து'தும், 'சாலிக்'கினிடத்தில் உறுதிப்பட்டு விடுகின்றன.

"மெய்யான 'குப்ரை' ஜாடையாகப் பார்க்கக் கூடியவன் பகட்டான இஸ்லாத்தின் பேரில் வெறுப்படை கிறான்" (குல்ஷனி ராஜ்) பகட்டான இஸ்லாம் சடங்காசாரங் களைக் கடைப் பிடிப்பதிலும், யதார்த்த இஸ்லாம் ஜீவ அகங்காரத்தை ஒழிப்பதிலுமிருக்கிறது முந்தியது விக்கிரக ஹாராதனையை ஒத்திருக்கிறது. எனவே "அஸ்ஸு பிலா மத்ஹபல்ஹு இல்லா மத் ஹபுல் ஹக்கு" 'சூபி' ஒருவருக்கு

'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளைத் தவிர யாதொரு 'மத்ஹபு' ஆகிய பிரிவுமில்லை பகட்டான 'காபிரும்' பகட்டான முஃமினும் வெளியரங்கசுத்தஞ் செய்வதில் மட்டும் ஈடுபட்டிருக்கின்றனர். இதனைவிட்டும் நீங்கியவராக ஒரு 'சூபி' ஆகியிருக்கிறார்.

வறுமையைப்பற்றி ஹக்குடைய சமூகத்தில் பிரஸ்தாபிப்பது ஒரு குற்றஞ்சாட்டலாகும். ஒரு அடிமை தனது எஜமானிடம் குற்றஞ்சாட்டுவது கூடாது 'ஷௌக்காரியா'க்கள் அவ்வாறு குற்றஞ் சாட்டுவது கிடையாது அவர்களுக்குக் கிடைப்பதை புசித்து உண்மையான அந்த மாபெருங் கொடையாளனை 'ஹக்'கை சதாதங்கள் நோட்டத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் உள்ளமையை நோட்டமிடுவதாகிறது 'தவக்கல்' என்னும் பாஞ்சாட்டலைவிட மேலானது ஒரு 'பகீர்' இம்மையின் எமானையிருப்பதால் தனது சொந்த சொத்தை அவர் உபயோகிப்பதினின்றும் யாரும் அவரைத் தடை செய்ய முடியாது இந்த உலகின் சொத்து. அவருடைய சொந்த சொத்தாகும் 'சுலூக்'கில் நீ 'கைர்' ஆகிய வேற்றுமையை விட்டும் உனது பார்வையை அகற்றிவிடவேண்டும் 'அன்சார்' களில் ஒருவரான 'ஹாஷிமு'டைய வீட்டில் ஒரு கொத்து பேரீச்சம் பழத்தை நாயகர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். (கேட்கும் வகை இலவாதலின்) யாரும் கேட்டல் என்பதை வஸ்துக்கள் அழிவில் சாட்டி குழப்பிவிடக்கூடாது. 'மாலிக் காபூர்' என்பார் ஒரு 'பகீரு'க்கு நன்கொடை அனுப்பியதற்கு அந்த 'பகீர்' "நான் அல்லாஹ் வல்லாத வற்றிடமிருந்து எதையும் ஒப்புக்கொள்வது கிடையாது" என்று பதிலிறுத்து அந்த வெகுமதியை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார் 'காபூர்' மறு முறையும், "ஸப்ப ஹலில்லாஹி மாபிஸ்ஸமா வாத்தி வல்அர்லி Fபஜனல் 'காபூர்' என்று பதில் சொல்லி அனுப்பினார் அதாவது "வானங்களிலும், பூமியிலுமுள்ளவை அல்லாஹ்வின் மீது துதி பாடுகின்றன எனவே 'காபூர்' என்பவனுக்கு இங்கு இடமெங்கே?" என்பதாம் கொடுப்பவனும், வாங்குபவனும் இங்கு 'ஹக்கு'தான் (பாகுபடுத்துதற்கு முயற்சிக்கும்) 'முஜாஹதா'வானது குழந்தை விளையாட்டுக்கும். ('ஹக்'கை எவ்விடத்தும்) நோட்டமிடுதல் மானுஷிக யுத்தத்துக்கும்

களுக்கு பயிற்சிமுறை

ஒப்பாகும் ஷரீஅத்து'படி 'பனா' செய்தலென்பது பாவத்தை யும், 'நப்ஸு'டை இச்சைகளையும் போக்கிவிடுதலாம் 'பனா' நிலையில் அவர்கள் இச்சைகளைப் போக்கிக்கொள்கின்றனர்; 'பகா' நிலையில் 'ஹக்கு'டைய பண்புகள் யாவற்றையும் கணிக்கின்றனர் ''ஷரீஅத்தில் மரணித்தல் என்பது பாவத்தை விட்டும் நீங்குதலேயாம். 'தரீகத்தில் துர்நடத்தைகளைவிட்டு நீங்கி நற்குணங்களென்னும் ஆடையால் தன்னைப் போர்த்திக் கொள்வதாம். 'தகல்லகூபி அக்லாகில்லாஹ்' — ''அல்லாவின் குணதிசயங்களை நீங்கள் அடையப் பெறுவீர்களாக'' — என்று ஹதீது பகருகின்றது 'ஹகீகத்'தில் ஒருவன் தனது ஜீவ அகங்காரத்தைப் போக்கிக்கொள்வதுதான் இதுவோ மேற் சொல்லப்பட்ட இரண்டையும்விட மிகக் கடினமாயும், வெகு துரிதத்தில் போக்குதற்கு சாத்தியமில்லாத ஒரு நிலையாயு மிருக்கிறது. ஏனெனில் அது ஒரு பரவசநிலை முந்திய இரண்டையும் கொஞ்சம் பிரையாசையினால் போக்கி பலனடையக்கூடும் மூன்றாவதாகிய இந்த ஜீவ அகங்காரமான தேகான்ம புத்தியைப் போக்குதற்கு இறை அருளும். சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞான தேசிகரின் வழி காட்டலும் தேவைப்படு கின்றன அப்பியாஸங்களாலும், 'முஜாஹிதா'வென்னும் தெண்டிப்பினாலு மட்டுமே இதனை அடைய சாதித்து வெற்றி பெறுவது மகா கடினம் ''தாலிக பல்ளுல்லாஹியுஃதீஹி மன்யஷாஹு'' ''இதுவோ அல்லாஹ்வின் அருட்கொடை; அதனை அவன் நாடியவர்களின் மீது அளிக்கிறான்;'' சிலர் 'நப்ஸு' மாணித்தல் என்பதை (உயிர்ப்பெற்று) ஜீவித்தல் என்பதாய்க்கொள்கின்றனர். மரணிப்பதற்கு யாதொரு அவசியமுமில்லை. ஏனெனில் (அவர்கள் கூறும் 'அதம்' ஆகிய மனிதனின் தாத்து) மரணம் தானாகவே இருக்கிறது. ஷுத்தாரியாக்கள் மரணித்தல் என்பதை ஒப்புக்கொள்வதில்லை. இதுவே அவர்களின் நிலையாகும். ''தனது 'தாத்'தையும், சிபாத்தையும், 'அப்ஆலை'யும் அல்லாஹ்வின் 'தாத்து', 'சிபாத்து', 'அப்ஆல்' என்று கருதினாலேயே யொழிய எந்த 'ஆரிபு' ஆகிய ஞானியும் அல்லாஹ்வை அறிவதில்லை.'' என்று அப்துல்லாஹ்பில்யாலி அவர்கள் கூறுகிறார்கள்.

ஹக்கு' தனது தரிபாட்டில் தரிபாடானவனாயிருக்கிறான்.

'வேறு' என்று முற்றிலுமில்லை. 'லய்ஸ F பில் உஜூதி இல்லல்லாஹ்' - ''உள்ளமையுடையான்யாருமில்லை, அல்லாஹ்வைத் தவிர'' 'இன்னீ அனல்லாஹு லாஇலாஹ இல்லா அனு'—'' நான் அல்லாஹ்வாயிருக்கிறேன்' என்னின்வேறான நாயன் யாருமில்லை. '' 'நான்' என்று அல்லாஹ்வைத் தவிர வேறு யார்தான் கூறமுடியும்? '' மன்அரப நப்ஸஹு பகத் அறப றப்பஹு — '' தன்னை யாரென்று அறிந்தவன் நிட்சயமாக தனது நாயனை அறிந்தவனும்.'' என்று ஒரு ஹதீது ஏற்பட்டிருக்கிறது உன் 'தாத்து' ஆகிய சுயத்தை அல்லாஹ்வின் 'தாத்து' என்றும் உனது அறிவை அவனுடை அறிவென்றும் உனது உள்ளமையை அவனது உள்ளமை என்றும் உனது உள்ளமையை அவனது உள்ளமை என்றும்' உணர்வாயாக அப்பொழுது 'நானே அல்லாஹ்' அல்லது 'அவனே அல்லாஹ்' என்று எப்படி சொன்னாலும் பாதகமில்லை (அரபி இலக்கணப்படிக்குள்ள) பதினான்கு பிரதிச்சொற்களும் (தன்மை ஒருமையாகிய) 'நான்' என்ற பிரதிச் சொல்லானது, பதினான்கு திசைகளின் சுற்றிவருதலைக் கொண்டு ஏற்பட்டன. தன்மையைக் குறிக்குங்கால அனல் ஹக்கு' (நானே ஹக்கு [மெய்ப்பொருள்]. என்று அந்தப்பிரதிச் சொல் கூறுகிறது தன்மை. ஒருமையாகிறது பிரதிச் சொற்களின் பெருக்கத்தால் அதிகரித்து விடுவதில்லை; இந்த பெருக்கத்துக்கு யாதொரு தனி உள்ளமையுங் கிடையாது பெருக்கமென்பது பண்புகளிலும், பயன்களிலும் தான் ஏற்பட்டிருக்கிறது உள்ளமை ஒன்றைவிட அதிகரித்ததன்று ஆனால் (அந்த உள்ளமைக்கு) தனது ஏகத்தன்மையில் வெளியரங்கத்திலும், அந்தரங்கத்திலும் பிரதிபிம்பங்களான தோற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன பண்புகளிலும், செயல்களிலுமே பெருக்கமேற்பட்டிருக்கிறது. மற்ற வகையாகக் கூறுமிடத்து 'தாத்'தைப்பொருத்தவரை அது தன்மைப் பிரதிச் சொல்லான 'நான்' ஆகியிருக்கிறது 'கைபு' என்னும் மர்மத்தினின்றும் வெளிப்பட்டதும் அதுமுன்னிலையாகிய 'நீ' என்று தன்னைத்தானே அழைக்கிறது; 'கைபு'க்குள் மீண்டும்தான் புகுந்துகொண்டதும் தன்னைப் படர்க்கையாகிய 'அவன்' என்று நினைத்துக் கொள்கிறது தனது தொகுப்பான (சமஷ்டி) அகமியத்தின்

களுக்கு பயிற்சிமுறை

மீது தன் பார்வையை செலுத்தும்போது தன்னை 'நாம்' என்று
அழைத்துக்கொள்கிறது. 'நஹ்னுஅக் ரபுஇலய்ஹிமின்ஹப்லில்
வரீது' — " அவனுடைய பிடரி நரம்பைவிட நாம் அவனுக்கு
மிக சமீபித்து இருக்கிறோம் " 'நான்' என்பது தாத்துடைய
,தஜல்லி'யாகிற தோற்றமாகவும், மற்ற பிரதிச் சொற்கள்
யாவும் 'அஸ்மா', சிபாத்து, 'அப்ஆல்' ஆகியவற்றின்
'தஜல்லி'யாகவும் இருப்பதால் 'ஹக்கு' மாத்திரம்தான் 'நான்'
என்று சொல்ல முடியும். (அவனைத்தவிர) யாதொரு (வேறு)
மில்லை. " இன்னீ அனல்லாஹ் லாஇலாஹ இல்லா அன "
" திட்டமாக, நானே அல்லாஹ்வாகும். 'நான்' என்பதைத்
தவிர நாயன் யாருமில்லை எனவே. உனது 'நான்' எனும்
தன்மையை உணர்ந்து. உன்னைக்கொண்டே நீஜீவித்துக்
கொண்டிருக்கிறாய் என்று கருதிக்கொள்; 'கைர்' என்னும்
அன்னியவஸ்து என்பதைக் கனவிலுங்கொள்ளாதே " மன்
அரபல்லாஹலாய கூலுல்லாஹ் அல்லா(ஹ்)வை அறிந்தவன்
அல்லா(ஹ்)வென்று கூவியழைக்க மாட்டான். நீ உன்னை
'ஹக்'குடைய உள்ளமையைக் கொண்டு ஜீவிப்பவனாகக்
கருதினால் நீ ஒரு 'முஷ்ரிக்' என்னும் இணைவைப்பவனாக
ஆய்விடுகின்றாய். உள்ளமைக்கு பிரிதொரு உள்ளமை
யிருக்குமாகில் வேறொரு 'ஹக்'கை நீ அடைந்துவிடுவாய்
அவன் உள்ளீடாயிருக்கையிலேயே வெளியீடாய்த் தோன்றி
னானேயொழிய அவனது வேறு என்பது கிடையாது 'மாயுஃ
மினு அக்தாஹம் பில்லாஹி இல்லாவஹ்ம் முஷ்ரிகூன்' —
அல்லாஹ்வின் மீது விசுவாசங்கொண்டவர்கள் அநேகரிருப்பி
னும் அவர்கள் முஷ்ரிக்காகவே இருக்கின்றனர் பெறுதற்குரிய
யாதொரு அன்னியமாகிய 'கைரு'ம் அவனுக்கில்லை. 'ஆலம்'
என்பது அல்லாஹ்வின் 'வேறு' அன்று; ஹக்கு தனது தத்து
வாதிகளுடையவுமான கோலங்களிலே வெளியீடாயிருக்கிறான்.
அவனுடைய வெளிப்பாட்டையே பிரபஞ்சம் என்று அழைக்கப்
படுகிறது அது அவனுடைய வெளியீட்டின் திருஷ்டாந்த
மாகும். 'ஆலம்' அல்லது பிரபஞ்சம் அவனுடைய ஆடை.
'தௌஹீது' என்னும் அத்வைதமாகிறது. திரோகாதியான
(கண்டிப்பான ஜீவத்) தன்மையை இன்மையாக்குவதினாலும்,
கண்டிதத் தன்மையைப் போக்கி குறிப்புகளை விட்டுவிடுவதினா

லும், அகண்டார்த்தமான (குறிப்பற்ற) தன்மையை உணர்வ திலுலும் அடையப்படுகின்றது.

ஜனங்களை தங்கள் வழிக்கழைப்பதற்கு 'ஒளலியா'க்கள் கட்டளையிடப்படவில்லை ஆனால் 'அன்பியா'க்களோ அவ்வாறாக கட்டளையிடப்பட்டிருந்தனர். முடிவான எல்லைக் கோடே 'விலாயத்து' ஆகும் 'நபித்துவம்' 'விலாயத்து'க்கு ஐக்கியப் பட்டது. 'நபி' (ஸல்) அவர்களும் கீழ்ப்பட்டிருந்தார்கள் என்பது எதுபோலெனில். ஒரு அரசன் தனது பொக்கிஷ தாருக்கு அவர் ஐக்கியமாவதுபோல் வெளிப்படையில் அது கீழ்ப் பட்டிருந்தாலும். யதார்த்தத்தில் அது அவனுடைய கட்டளை யாகும் 'விலாயத்து' 'ஹக்கு'டனே வைத்திருக்கும் மர்மம்: நபித்துவம் அல்லது 'நுபுவ்வத்து நேர்வழிக் கழைத்தலாம். 'லீம அல்லாஹு வக்துன் லாயஸ் அனீபீஹிமலகுன் முகர்ாபுன் வலா நபிய்யுன் முர்ஸலுன்' 'ஹக்கு'டன் எனக்கு ஒரு நேர மிருக்கிறது அந்த நேரத்தில் மிக சமீபித்த 'மலக்கு'ம் தூதனுப்பப்பட்ட 'நபி'யும் இடம்பெற மாட்டார்கள்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள் இதுவே 'விலாயத்து'டைய பதவி. இந்த பதவியில் நபித்துவத்துக்கு சமீபிக்கும் 'தஜல்லி' இன்மையாகிவிடுகிறது.

'நபி'த்துவம் தாற்காலிக பண்பு; ஏனெனில், ஒவ் வொரு 'நபியும் தனது வாழ்நாளில் ஓர் குறித்த காலத்துக்கு 'நபி'யாக இருந்தார். சிஷ்டிப் பொருள்களின் நிலையை உயர்த்துவதற்குத்தான் இது ஏற்படுத்தப்பட்டது. இதுவோ சாசுவதமற்றது 'விலாயத்து' என்பது 'தாத்து'டைய தரி பாடான பண்பு. ஒரு 'நபி'யின் நுபுவ்வத்து முடிந்துவிடுங் காலை அவர் ஒரு 'வலீ'யாக மட்டும் தரிபட்டிருக்கிறார். 'விலாயத்து'ம். 'நபுவ்வத்து'ம் ஒரு மனிதனில் சேகரமாயிருந் தால் 'விலாயத்'துதான் மேன்பதவியைப்பெறும்.

முதன்முதலில் 'நபி'மார்கள் 'தௌஹீ'தைப்போதித்து பின்னர். 'ஷரீஅத்து'வாயிலாய் 'சுலூக்கு' என்னும் பயிற்சி முறையைக்கற்பித்தனர். 'குல்-ஹாதாஸபீலீ அத்ஊஇலல்லாஹி

களுக்கு பயிற்சிமுறை

அலா பஸிரதின் '' — '' சொல்வீராக. இதுவே மார்க்கம்
அல்லது பாதை அகப்பார்வையைக் கொண்டு நான் உங்களை
அல்லானளவில் அழைக்கிறேன். '' (குர்ஆன்) முதலில் நாயகம்
(சல்) அவர்கள் ஜனங்களை '' தௌஹீ'தின் பால் அழைத்தார்
கள். '' மன்காலலாஇலாஹ இல்லல்லாஹு தகலல்ஜன்னு '' —
'' யாரொருவன் அல்லாஹ்வின் வேறான நாயன் யாருமில்லை
யென்று சொன்னாரோ அவன் சுவன பதியில் புகுந்தவனாகும் ''
(ஹதீது) காபிரீன்கள் இந்த சொல்லைக்கேட்டு நிட்சயமாக இது
ஓர் பேராச்சரியமும், விந்தையுமான விஷயமாயிருக்கிறது என்ற
அர்த்தங்கொண்ட '' இன்ன ஹாதால ஷைஉன் உஜ்ஜாப் ''
என்றும், '' என்ன! எல்லா இலாஹுகளையும் அவர் ஒரே
இலாஹாவா ஆக்குகின்றார்? '' என்ற பொருள் பொருந்திய
''அஜஅலல்ஆலி ஹத இலாஹுன் வாஹிது '' என்றும் கூறி
னர். பிறகு நபி அவர்கள் அவர்களை 'உபூதியத்து' என்னும்
அடிமைத்தனத்தின் பால் அழைத்து அவர்களின் வணக்க
முறையை 'திக்று' என்னும் ஜெபித்தலாக செய்துவிட்டார்கள்.
'தௌஹீது' அளவில்தான் அழைப்பு ஏற்பட்டிருந்ததால் இது
விஷயத்தில் 'நபி' மார்கள் யாவரும் ஒத்திருக்கின்றனர் எல்லா
மார்க்கங்களும் ஒரே பொதுவான அடிப்படையின்பேரில்
ஸ்தாபிதமாயிருக்கின்றன நபிமார்கள் ஆத்மீக உன்னதம்
பெற்றவர்களுக்கு மட்டும் 'தௌஹீ'தையும், சாதாரண பொது
மக்களுக்கு ஷரீஅத்தையும் போதனை செய்து தங்கள் தூது
வேலையைத் தொடங்கினர் ஏனெனில் சாதாரண பொது மக்கள்
ஷரீஅத்தின் மூலம் மேலேறி ஹகீகத்தை அடைவரென்றும்.
ஆத்மீக உன்னதம் பெற்றோர். 'ஹகீகத்திலிருந்து கீழிறங்கி
ஷரீஅத்தை அடையப்பெற்று [தன்ஸீஹ், தஷ்பீஹ்] இரண்டை
யும் ஒன்று சேர்ப்பார்களென்ற கருத்துக்கொண்டே நபிமார்கள்
அவ்வாறு போதித்தார்கள். அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த
பேதாபேதகங்கள் ஷரீஅத்தின் அனுஷ்டான முறைகளைப்
பொருத்ததேயாம்.

ஷரீஅத்துக்கு முதலிடத்தை இப்பொழுதே அளிப்பா
யாக 'ஷரீஅத்தின் வாடையின்றி 'ஹகீகத்து' என்பதில்லை
(குல்ஷன்ராஜ்) ஒரு 'மஜ்தூபு - சாலிக்கு 'ஹகீக்கத்திலிருந்து'

அஸ்ராரே அனல்ஹக்

ஷரீ — அத்தின் பால் கீழிறங்குகிறார். ஒரு 'சாலிக்கு' மஜ்தூபு' ஷரீஅத்திலிருந்து ஹகீகத்தின் பால் மேலேறுகிறார்.

'அதம்' என்னும் இன்மையுடன் சம்பந்தப்பட்டது தான் தீமை. நேர்முரணான எதிரிடையான 'இஸ்மு'களுடைய சம்பந்தா சம்பந்தம்தான் அந்த தீமை "மாஅஸாபக மின்ஹஸனத்தின் பமினல்லாஹ்வமா அஸாபக மின்ஸையி ஆதின் பமின்நப்ஸிக" — நன்மையாக வெளிப்படுவதை ஹக்கின் புறத்திலும், தீமையாகவெளிப்படுவதை உனது நப்ஸின் புறத்திலும் சாட்டிவிடுவாயாக. அடக்கியாள்பவன் (கஹ்ஹார்), கிருபையுடையோன் (றஹீம்) ஆகியவை இரண்டு இஸ்முகளாகும். இவ்விரண்டுக்கும் ஏற்படும் சம்பந்தம்தான் தீமை (ஷர்ரு) என்றாகிறது. எனவே 'ஆரிபு'கள் இவற்றை விட்டும் கடந்தவர்கள். "வமா அர்ஸல்னாக இல்லா றஹ்மதுலில் ஆலமீன் (நபியே!) நாம் உம்மை சர்வலோகத்தினருக்கும் அருட்கொடையாகவேயன்றி அனுப்பி வைக்கவில்லை"

'கைர்' என்னும் வேற்றுமையைத் தரிபடுத்தும் 'ஷிர்க்கு' ஆகிய இணையைவிட்டும் நபிமார்கள் நீங்கி இருக்கிறார்களென்று உலமாக்கள் யாவரும் ஒத்தோர்மித்துக் கூறுகின்றனர் ஏனெனில் 'நுபுவ்வத்து' பெறுவதற்கு முன்னர் அவர்கள் 'வலீயு'டைய நிலையை அடைந்துவிட்டனர்; அந்த 'வலீ' பதவியானது வேற்றுமையை நிராகரித்து 'ஹக்'கை தரிபடுத்துதலாகும் இது நிற்க. அவர்களால் யாதேனும் பாவம் நிகழ்ந்துவிடுமாயின் அதனைப்பற்றி அவர்களுக்கு யாதொரு அச்சமுமில்லை "இன்னல்லாஹ லாயக்Fபிறு அன் உஷ்ரக பிஹி வயகFபிறு மாதூன தாலிகலிமன்யஷாஉ" - "ஷிர்'க்கை மட்டும் 'ஹக்கு' ஆகிய மன்னிப்பதில்லை. அவன் நாடியவர்களுக்கு அவன் பாவங்களை மன்னித்துவிடுகிறான் 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளுக்காக வேண்டிய ஹக்கிலிருந்து 'ஹக்கு'க்கு இடப்படும் கட்டளையே பாவங்களாகும் — "மாரமைத்த இத்ரமைத்த வலாகின்னல்லாஹ ரமா" — "(பத்ருயுதத்தில்) நீர் எறிந்த ஒருபிடி (மண் அல்லது கூழாங் கற்களை) நீர் எறியவில்லை, எனினும் ஹக்குதான் எறிந்தான்."

சுலூக்கு பயிற்சிமுறை

'விலாயத்'தென்பது ஹக்கை ஹக்கின் வாயிலாய்ப் பார்ப்பதாம். 'நுபுவ்வத்'தென்பது 'ஹக்'கை சிருஷ்டிகளின் வாயிலாய்ப் பார்த்தலாம். முந்தியதில் சிருஷ்டிப்பின் சாயலையுடைய யாதொருகுறையுமிருப்பதில்லை; பிந்தியதில், 'ஹக்'கைப் பார்த்தலுடனே வஸ்துக்கள் பிரத்தியட்சமாய்த் தெரிப்பட்டிருக்கின்றன. முந்தியதில், 'சாலிக்கு' உட்பட சிருஷ்டிப் பொருட்களின் (தனி) இருப்பைப்பற்றிய விபரீத புத்தியின்றியே ஹக்கைப் பார்த்தலுண்டாயிருக்கிறது. பிந்தியதில், 'ஹக்கை'யும், வஸ்துக்களையும் பார்த்தல் உண்டாயிருக்கிறது. முந்தியது 'பனா' நிலையும் பிந்தியது 'பகா' நிலையுமாயிருக்கிறது. சிலர் 'முந்தியதையே சம்பூர்ணமான பதவியென்றுகொள்கின்றனர்; 'அல்விலாயத்து அப்லலுமினன் நுபுவ்வத்தி' 'விலாயத்தானது நுபுவ்வத்தைவிட சிறந்தது.' நான் அகமியக் கடலை அடைந்தபோது நபிமார்களைக் கடலோரத்திலும் என்னை அக்கடலிலுமிருக்கக் கண்டேன் என்று அபூயஸீது புஸ்தாமீ (றலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். நபி (ஸல்) அவர்களுடைய 'முப்தா'வாகிய பூர்வ காலத்தையும், 'மஆது' ஆகிய நித்திய காலத்தையும்பற்றித் தெரிந்துகொள்வதாகும் மற்றவர்கள் தங்கள் தங்கள் 'முப்தா'வையும், 'மஆதை'யும், நபி அவர்களுடைய போதனையிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். 'நபி'மார்கள் தங்களை அல்லாஹ்வினிடமிருந்து வந்தவர்களென்றும், அல்லாஹ்வுடனுள்ளவர்களென்றும், அதே அல்லாஹ்வின் கண்டித்த தன்மை தாங்களேயென்றும், அவர்களது கண்டிப்பு ஆரம்பமானதென்றும், இதா பிந்திய தொடர்பான கண்டிப்புகளை அடைய வளைந்ததென்றும் கருதிக்கொள்கின்றனர் அவர்களின் ஆரம்பமான 'முப்தா'வென்னும் பூர்வீகத்தையும், அவர்களது முடிவான 'மஆது' என்னும் நித்திய காலத்தையும்பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

உனது பாதையில் 'குப்ரு'ம் 'இஸ்லாமு'ம் ஓடிக்கொண்டிருக்கின்றன.

நீயே இணையின்றிய ஏகன் எனக்கூறிக் கொண்டிருக்கின்றாய்.

அஸ்ராரே அனல்ஹக்

ஏகத்தன்மையை அவர்கள் வெளிப்படையாக மறுத்த போதிலும் 'காபிரீன்'கள் அல்லாஹ் ஒருவன்தான் என விஸ்வாசங்கொள்கின்றனர்; எனினும் 'நுபுவ்வத்'தை மட்டும் நிராகரிக்கின்றனர். வித்தியாசம் செயலில் இருப்பதாக வாதித்தாலும் அதுவும் சரியே; ஏனெனில் செயல்கள் எண்ணங்களைப் பொறுத்திருக்கின்றன. "குல்லு மவ்லூதின் யூலது அலா பித்ரதில் இஸ்லாம்" (ஹதீது) சகல சிருஷ்டிப் பொருட்களும் இஸ்லாத்தின் தன்மையுடனேயே பிறக்கின்றன. "யுஸப்பிஹு லஹூ மாபிஸ்ஸமாவாத்தி வமா பில் அர்ளி" — வானங்களிலும், பூமியிலுமுள்ள சகலமும் அல்லா(ஹ்)வின் மீது துதிபாடுகின்றன. ஏகத் தன்மையின் பால் விசுவாசிக்கும் கூட்டத்தைவிட்டும் 'காபிர்'களை நீக்கி விட முடியாது.

'முஸ்லிம்' ஒருவன் விக்கிரஹம் என்பது யாதென்றறிக்கால் விக்கிரஹாராதனைதான் மார்க்கம் என்று தெரிந்து கொள்வான் (அல்தென்றாஸ்) ஒரு விக்கிரஹாராதனைக்காரன் எப்பொழுது விக்கிரஹாராதனைக்காரனாக ஆகிறானென்றால் அவன் ஓர் விக்கிரஹத்தில் சிருஷ்டித் தன்மையை மட்டும் பார்ப்பானேயானால் அப்பொழுதுதான்; அவ்வேளைதான் அவன் ஓர் 'காபிர்' ஆக ஆகிறான்

மறைந்திருக்கும் தாயகத் தன்மையை அதில் நீ பார்க்காவிடினும் உன்னை 'தரீக்கத்'படி 'முஸல்மான்' என அழைக்கப்படுகிறது. இதுவே பகட்டான 'இஸ்லாம் — மஜாஸீ' யாகும். வார்த்தைகளிலும், அனுஷ்டான முறைகளிலுமே யன்றி அர்த்தத்தில் வித்தியாசமில்லை. 'முஸ்லிம்'கள் அல்லாஹ் வென்றும், ஹிந்துக்கள் 'பிரம்' என்றும் அழைக்கின்றனர். சர்வாங்கத்திலும், சகலவற்றிலும், வானங்களிலும், பூமியிலும் வணங்கப்படுவது யாருமில்லை, 'ஹக்'கையன்றி — இதனை பொட்டியே ஸீஹாவும் சம்பவம் ஒன்று விபரிக்கப்படுகிறது 'லப்பைக்' (இதோ நான் இருக்கிறேன்) 'லப்பைக்' (இதோ தான் இருக்கிறேன்) என்ற சப்தம் இறைவனிடமிருந்து

தொனிக்க ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஒரு சமயம் கேட்டு இந்த கிருபாகடாட்சம் யாரை நோக்கியது என்று வியந்து போயிருந்தார்கள். அவ்வேளை 'மஜூஸி'யின் வணக்க ஸ்தலத்திலும், கிருஸ்துவ கோவிலிலும், முஸ்லிமுடைய பள்ளிவாயிலிலும் யாதொரு வணக்கவாளியையும் இறைவன் மீது புகழ் கூறி பாடிக் கொண்டிருக்க அவர்கள் காணவில்லை. அச்சமயம் தெய்வீக தொனி (அசரீரியாக) "ரூம் தேசத்திலுள்ள இன்ன கோவிலுக்குப் போய் உண்மையைக் கண்டறிந்துகொள்" என்று கூறிற்று அங்கு ஒரு 'மஜூஸி' ஒரு விக்கிரகத்துக்கு சாஷ்டாங்கஞ் செய்து நெஞ்சுருகி அழுது கொண்டு "ஓ இரட்சகா!" என்று கூவி அழைத்தபோது "லப்பைக், லப்பைக்" என்ற மறுமொழி உண்டானதை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கோபாவேசங்கொண்டு அந்த 'மஜூஸி'யுட்பட அந்த கோவிலையே கவிழ்த்து விடுவதற்கு இறைவனிடம் உத்திரவு கேட்டு இறைஞ்சினார்கள் அதற்கு இறைவன் "ஓ ஜிப்ரயீல்! அவன் தனது வணக்கத்தின் இலட்சியத்தை இழந்துவிட்டபோதிலும் 'வணங்கப்படுபவன்' தன்னை இழந்து விடவில்லை எவ்விடத்திலும், எந்நிலையிலும் 'அவன்' தான் வணங்கப்படுவோன்." என்று கூறி ஜிப்ரயீல் (அலை) அவர்களைத் தடுத்துவிட்டான்.

'அறபிலே – முராக்கபா' வாகிய நிஷ்டையாளருக்கு கிரந்தமோதுவோரின் நட்பு தீங்கிழைப்பதாயிருக்கிறது. 'முராக்கபா'வில் கற்ற கல்வியையும் மறக்கவேண்டியிருக்கிறது 'முராக்கபா'வில் 'தஜல்லியாத்து' கூட மனதை மறைக்கின்றன. உன்னில் யாதொரு கல்வியும் புகுத இடமளிக்காது. மறதியில் உன்னை மூழ்கடித்துக்கொள். எண்ணங்கள் வருங்காலை அவைகள் மனதில் கற்பனை சித்திரங்களை சித்தரித்து, அதனை ஓர் சித்திரசாலையாக்கிவிடுகின்றன. 'தஸவ்வுபு'டைய ஞானமும், பல்வகை 'அஸ்காரே' (அப்பியாஸங்களைப்) பற்றிய அறிவும் கூட தேகான்ம புத்தியை மறக்கச் செய்தற்கு தடையாயிருக்கின்றன "அல்இல்முஹிஜாபுல் அக்பர்" 'இல்மாகிறது அல்லாஹ்வின் பெரிய திரையாயிருக்கிறது. 'மறதி' என்னும் நிலையுங்கூட உனக்கு எதிர்படாவண்ணம் அவ்வளவாக உன்னை நீ மறந்துவிடவேண்டும்.

அஸ்ராரே அனல்ஹக்

உன்னில் 'தாத்து' 'சிபாத்து'டைய 'தஜல்லியாத்து' கள் உனது மனமென்னும் கண்ணுடியில் பிரதிபலித்து, அக் கண்ணுடி உன்னுடைய மானுஷீக தன்மையென்னும் துருவினல் மறைக்கப்பட்டு, (அகக்கண்) குருடாகிவிட்டாய்

உள்ளமைக்கு 'வேறு' ஆகிய இன்மையான 'அதம்' என்பதிலிருந்துதான் ஒவ்வொரு தீமையும் ஏற்பட்டிருக்கிறது. உள்ளமையுடன் தீமை என்பது சம்பந்தப்பட்டதன்று. இம்மை யிலோவன்றி மறுமையிலோ அதனைக்கொண்டு சங்கடத்தை அனுபவிக்கும் ஒரு மனிதன் பால்தான் தீமையை சாட்டப் படுகிறது. தீமை என்பது தீமையுடன்தான் சம்பந்தப்பட்டது. நாயும், பன்றியும் அவ்வவற்றைப் பொருத்தவரை நன்மை யானதுதான்; மனிதனைப் பொருத்தவரை அசுத்த மானவையே. உள்ளமையென்பது முற்றமுடிய சம்பூர்ண நன்மையே நன்மை. முறண்பாடான 'இஸ்மு'கள் ஒன்ருே டொன்று சம்பந்தப்படுங்காலே 'தீமை வெளிப்படுகின்றது. 'அல்கைருஹுவல் உஜூது வஷ்ஷர்றுஹுவல் அதம்;' என்று 'சூபி' கூறியிருக்கிருர் சதுர்ப் பூதங்களும் தங்கள் 'அஸ்லு' அளவில் மீண்டுவிட்டதும், 'ரூஹு' ஆன்மா மட்டுமே மீதப் படுகின்றது: அதில் 'ஹக்'குடைய 'தஜல்லி' பிரகாசிக்கின்றது!

''ஹக்கு'டன் பித்தன் ஒருவனைப் போன்று நடந்து கொள்; முஹம்மது (ஸல்) அவர்கள்விஷயத்தில்எச்சரிக்கையா யிரு.'' என்று ஒருவர் பாடியிருக்கிருர் அதாவது. 'அஹ்லு ல்லாஹ்'க்களிடத்தில் பித்தனைப் போன்று நட; ஏனெனில், 'காதல்' என்பது ஹக்கிடத்தில் பித்தனைப் போன்றிருப்பதாம். 'அல் இஷ்கு ஜுனூனுல்லாஹ்' — 'ஷரஉ'டையவர்களிடத்தில் புத்தி சாதுரியத்துடன் நடந்துகொள்வதோடு காதலைப்பற்றியும் பேசாதிருப்பாயக. ''துகல்லிமுன்னுஸ அலாகத்ரி உகூலிஹிம்.'' ''ஜனங்களுடைய விளக்கத்துக்குத் தக்க வாறு அவர்களிடம் நீங்கள் உரையாடுங்கள்'' என்று முது மொழி வருகிறது பேரின்ப பைத்தியம் என்பது தாத்தின் காதல்; உணர்ச்சியென்பது 'வஹ்தத்து' அல்லது 'ஹகீகத்து முஹம்மதீ'யைச் சார்ந்தது. 'இருப்பதும், இல்லாததுமான நிலை இதுவே

சுலூக்கு பயிற்சிமுறை

'ஹகீகத்து'டைய முடிவான எல்லை 'ஷரீஅத்து' ஆகும். ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்பது 'ஷரீஅத்து' டைய முடிவான ஸ்தானம்; முஹம்மதுர் ரசூலுல்லா(ஹ்) வென்பது ஹகீகத்துடைய முடிவான எல்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றின்பால் படி எடுத்து வைத்து ஒரு சம்பூர்ண மனித னாக (மஜ்தூப் — சாலிக்கு) ஆகி 'மகாமுன்மஹ்மூது' என்னும் பதவியைப் பெறுவாயாக. 'சுக்ரு' இல்லாமல் 'சஹ்வு'வை அடைய முடியாது. நீ உன்னை மறந்து, நீ அவ்வாறு மறந்து விட்டதைத் தெரியாதவரை யாதொரு திருப்தியுமிருக்காது.

மறதியைப்பற்றிய ஞாபகம் (சஹ்வு) உனக்கு ஏற்பட்டு நீ உன்னளவிலாகாதவரை வெறும் மறதி (சுக்ரு) மட்டும் பயன் படத்தக்கதன்று. ஆலம் மிதால் (சூட்சும லோகம்) உன் மீது ஒரு தடவை உதயமாகிவிட்டால் அதன் பயன் அழியாது தரிபட்டுவிடும். நீ ஒரு உன்னத மனிதருள ஒளியாக ஆய்விடுவாய் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிஃராஜ் ஒரு தடவைதான் ஏற்பட்டது.

''லாஇலாஹ இல்லல்லாஹ்' அல்லாஹ்வின் வேறான நாயன் யாருமில்லை.'' 'லா' என்றும் 'இல்லை' என்பது (ஜீவ) அகங்காரத்தையும், பிரபஞ்சத்தையும் இன்மையாக்க லாகும் 'சாலிக்கு'ம், பிரபஞ்சமும் இவ்வாறு இன்மையாக்கப் பட்டுவிடுகின்றனர். 'சாலிக்கு' தனது (ஜீவ) தன்மையில் இல்லாமையாயும், ஹக்கில் தரிபாடானவராயுமிருக்கிறார். அறிவுடைய எல்லைக்கு அப்பாற்பட்ட 'அஹதியத்து' மட்டுமே தரிபட்டு நிற்கின்றது. 'தாத்து' தன்னை அறிந்துகொண்ட 'நுக்தா'வாகிய முதற் புள்ளிதான் 'ஹகீகத்து முஹம்மதி' யாகிய முஹம்மது (ஸல்.) அவர்களுடைய அகமியமாகும்.

''உனது இருப்பின் பிரதிபிம்பம் கண்ணாடியில் தரி பட்டிருக்கும் பரியந்தம், உன்னால் வணங்கப்படுவது உனது சொந்த எண்ணங்கள்தான்.'' என்று ஒருவர் பாடியிருக்கிறார். உனது 'அறிவு' என்னும் கண்ணாடியில் உனது இருப்பின் பிரதிபிம்பம் தரிபட்டு நீ (திரேகாதியான கண்டிப்பான 'நீ'யாக

மட்டும் இருக்கும்வரையில் உன்ணுல் வணங்கப்படுவது உனது நினைவுகள் மட்டுந்தான்: அப்பொழுது யதார்த்த உள்ளமையைவிட்டும் நீ திரையிடப்பட்டுவிடுவாய். உனது 'ஜீவ' அகங்காரம் நீங்கிவிடும்பொழுது அவனுடைய 'பிர்ம' அகங்காரம் உதயமாகி அவனுடைய 'ஜமால்' என்னும் பேரழகை உணர்வு பெறாத உன் பேரில் காட்டத் தொடங்குகிறது. 'தாத்து முத்லக்கு'தான் ஆசாமி; வஸ்துக்களோ கண்ணுடியில் தோன்றும் கண்டிப்புகளான பிரதி பிம்பங்கள். எதுவரை உள்ளமையின் இந்த பிரம்பிம்பங்கள் உனது அறிவிலும், உன் எண்ணத்திலும், கற்பனையிலும் தரிபட்டிருக்கின்றனவோ அதுவரை அறியப்பட்டது வஸ்துக்கள் மாத்திரம் தான் அவைகள்தான் உன் வணக்கப் பொருளாய் இருக்குமேயன்றி, 'ஹக்கு'டைய உள்ளமை யன்று 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருள் 'ரூஹு' ஆகிய ஆத்மாவில் மறைந்தும் 'ரூஹா'னது 'கல்பா'ன மனதில் மறைந்தும் 'கல்பா'னது 'காலிபா'ன சரீசத்தில் மறைந்தும் இருக்கிறது சரீரம் உன் பார்வையில் இருக்கும்போதே, நீ மெய்ப் பொருளாகிய 'ஹக்கை' தேட்டமிடவேண்டும்.

'' 'ஹக்கு' பிஜிஸான் அந்தர் நிஹான் வஜான் பதில் அந்தர் நிஹான். அய் நிஹான் அந்தர் நிஹான் அந்தர் நிஹான் அந்தர் நிஹான். ''

'உஜூதை' தேட்டமிடுதலாகிய 'முஜாஹதா' 'முஷாஹதா' அல்லது 'குர்பு நவாபிலு' ஆகிய 'பஜு' 'குர்பு — பராயிலு' ஆகிய 'பகா'வை அப்பியாசிப்பவரே ஒரு 'தர்வேஷ்' ஆகும்.

சரீர சுகங்களை ஒரு 'சாலிக்கு' முதன் முதலில்விட்டு விடவேண்டும். தேர்ச்சிபெற்றவன் இவ்வித சுகங்களைக் கொள்ளலாம்

''நீங்கள் சரீரசுகங்களை எவ்வாக்கெவ்வளவு அடையப் பெறுகின்றீர்களோ அவ்வளக்கவ்வளவு உங்கள் முதுகு மறுமைமையின்பால் திருப்பட்டுவிட்டது, '' என்று ஒரு ஹதீது

களுக்கு பயிற்சிமுறை

கூறுகிறது. ஒருவன் 'ஆரிபு' (ஞானி) ஆக ஆய்விடுங்காலை விஷயம் மாற்றமாக ஆய்விடுகின்றது. ''முஜாஹதா'வென்பது குழந்தை விளையாட்டு 'மஃரிபத்து'தான் மனிதச் செயல்'' என்று அலீ உஸ்மான்ஜீலானி அவர்கள் கூறி இருக்கிறார்கள். தங்கள் வணக்க பலத்தால் சரீர இச்சைகள் யாவற்றையும் கைவிட்டுவிட்டார்கள் பிஷ்ருல் ஹாபீ (றஹ்) அவர்கள், மஃறூபுல்கர்கீ (றலி) அவர்கள் சரீரசுகங்களைக் கடைபிடித்து வந்தார்கள். ஒரு ஆரோக்கியமான மனிதனுக்குள்ள வாழ்க்கை விதிகளைவிட்டும் ஒரு சீக்காளியுடைய நிலைமை வேறுபட்டதாயிருக்கிறது. ''ஆரம்பத்தில் என்னைக் கண்டவன் ஒரு 'சித்தீகு' (உண்மையாளர்) ஆக ஆய்விட்டான்; முடிவில் என்னைக் கண்டவன் ஒரு 'ஸிந்தீகு' (பாவி)யாக ஆய்விட்டான்'' என்று ஜுனைதுல் பக்தாதீ (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குற்றஞ்சாட்டுவதும், துக்கத்தை வெளிப்படுத்துவதும் பொறுமைக்கு மாற்றம் என்று சில 'மஷாயிகு'கள் நம்புகின்றனர். அவ்வித செய்கை 'ஹக்'கல்லாத பிறிதொரு பொருளிடத்திற்றான் சாத்தியப்படும், என்று மற்றுஞ் சிலர் கருதுகின்றனர். தாழ்மையும், அழுகையும் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்டவை. பொறுமை குணத்தில் உறுதிபூண்டிருந்த 'நபி'மார்களும் ஒலிமார்களும் தாழ்மையையும் பிரார்த்தனையையும் கைவிட்டுவிடவில்லை. நாயகம் (ஸல்) அவர்கள்கூட ''என் இறைவா! மரண வஸ்தையை விட்டும் என்னை காப்பாற்றுவாயாக'' – அல்லாஹும்ம அய்யினீ அலாசகராத்தில் மௌத்தி'' என்று பிரார்த்திக்கிறார்கள்.

ஒருவனது புத்தியானது 'ஹால்' என்னும் உணர்ச்சி நிலையினால் மிகைக்கப்படுங்காலை அவனை 'மஜ்தூபு' என்று அழைக்கப்படுகிறது. அன்றி அவன் கவலையினாலோ அல்லது சந்தோஷத்தினாலோ மிகைக்கப்பட்டுவிட்டால் அவன் 'மஜ்னூன்' (பித்தன்) ஆக ஆய்விடுகிறான். எதுவாயிருப்பினுஞ்சரி அவனுக்கு முன்னுள்ள திரையானது நீக்கப்பட்டுவிடுகிறது. அவன் மறை பொருளை பார்க்கக்கூடியவனாகிறான். பித்தன் தனது பழைய நிலையையடைந்துவிட்டபொழுது அவனுக்கு நடந்ததொன்றும் புரியாது! அதன் பயனையும் உணர்ந்து

கொள்ளமாட்டான். 'மஜ்தூ' போசதாகாலமும் அவனுக்கு ஏற்பட்ட 'கஷ்பு' ஆகிய திரை நீங்கலே மறுமையிலும் பெற்றிருப்பான்.

'ஷிர்க்'கைவிட்டும் 'நபி'மார்கள் நீங்கியிருக்கின்றன ரென்று 'உலமா'க்கள் ஒத்தோர்மித்து கூறுகின்றனர். 'ஷிர்க்கு' என்பதோ 'வேறு' ஆகிய 'கைரை'த் தரிபடுத்துவ தாகும் 'நுபுவ்வத்'தை அடைதற்கு முந்தியே 'விலாயத்'தை அவர்கள் பெற்றுவிட்டனர் 'வலி'த்தனம் என்பது 'கைர்' என்னும் பிறபொருளை இன்மையாக்கி 'ஹக்'கைத் தரிபடுத்துத லாகும். இவ்வாறிருந்தும் அவர்கள் பாவங்களைப் புரிந்துவிட்டா லும் அவர்களுக்கு யாதொரு அச்சமுமில்லை "இன்னல் லாஹ லாயக்பிறு அன்உஷ்ரக பிஹி வயக்பிறு மாதூன தாலிகமன்யஷாஉ" — அல்லாஹ் இணை வைத்தலை மன்னிப்ப தில்லை. எனினும், அவன் நாடினுல் சகல பாவங்களையும் மன்னித்துவிடுகிருன் 'ஹக்கு' ஆகிய மெய்ப் பொருளிட மிருந்து ஹக்கின்பால் 'ஹக்'குக்காக வேண்டி இடப்பட்ட கட்டளைகளே பாவங்களாகும். 'மாரமைத்த இத்ரமைத்தவலா கின்னல் லாஹரமா' — "(பத்ரில்) நீர் ஓர் கைப்பிடி மண்ணை (கூழாங் கற்களை) விரோதிகளின் மீது எறிந்தபோது நீர் எறிய வில்லை எனினும், அல்லாஹ்தான் எறிந்தான்."

'கோலியா'த்தை காலூது (அலை) அவர்கள் தங்கள் (ஜீவந்) தன்மையினுல் கொன்றபொழுது ஒரு பாவியாக ஆனார்கள் ஆனல் நாயகம் (சல்) அவர்களுடைய கையிலிருந்து எறியப்பட்ட கூழாங் கற்களை எறிந்தது நாயகம் (ஸல்) அவர்கள் அல்லவென்றும். ஆனல் அல்லஹ்தான் எறிந்தான் என்றும் கொள்ளப்படுகிறது 'யதுல்லாஹி பௌக ஐதீஹிம்' — அவர் களுடைய கைளுக்கு மேலால் அல்லாஹ்வின் கரமிருந்தது 'அன்பு' மார்க்கத்தில் பாவமென்பது பாலமென்பது மன்னிக்கப் பட்டதொன்று "லியக்பிரலகல்லாஹு மாதகத்தமவமாத அக்கர" — (ஓ நபியே!) அல்லாஹ் உம்முடைய முந்திய பாவங்கள், பிந்திய பாவங்கள் யாவற்றையும் மன்னித்து விட்டான் (குர்ஆன்)

களுக்கு பயிற்சிமுறை

ஷெய்குல் அக்பர் (றலி) அவர்கள் தங்கள் 'புகூசல்) ஹிகம்' என்ற கிரந்தத்தில் 'பஸ்ஸேஹாரூன்' என்ற தலையங்க முள்ள அத்தியாயத்தில், "ப இன்னல் ஆரிபு மன்யரஉல் 'ஹக்கு' பீகுல்லிஷைஇன் பல்யரஉஐன் குல்லிஷை இன்" — ஒவ்வொரு வஸ்துவிலும் வெறுமனே 'ஹக்'கைப் பார்ப்பதோடு நின்றுவிடாமல் அவனை (ஹக்கை) ஒவ்வொரு வஸ்துவின் அகமியமாகவும் பார்க்கின்றவனே 'ஆரிபு' என்னும் ஞானியா யிருக்கிறன் " என்று கூறியிருக்கிறார்கள். இவ்வாறில்லாவிடில் அல்லாஹ்வின் 'ஷரீஅத்து'படிக்கு வெளியரங்கத்தைப்பார்த்தல் மட்டுமே ஏற்படும் 'மூஸா' (அலை) அவர்கள் 'ஹாரூன்' (அலை) மீது கோபங்கொண்டது 'வெளிப்படை'க் குற்றத்தைப் பார்த்தே தான். 'ஸாமிரீ'யின் 'பசு'வின் அகமியமாகிய 'ஹக்'கைப் பார்க்கும் மூஸா (அலை) அவர்கள் வெளியரங்கத்தைப் பொருத்தே 'ஹாரூன்' (அலை.) அவர்கள் மீது கோபங் கொண்டார்கள். அவர்களின் வெளியரங்க நிகராகரிப்பு அவர்களின் கொள்கையை உண்மையில் உறுதிப்படுத்திவிட்டது ஒரு 'வலீ'யுடைய தொழில் யாதெனில் வஸ்துக்களான கண்ணாடிகளில் 'ஹக்'கை நோட்டமிடுதலும் அதனை குறித்த ஓர் வஸ்திலும் கண்டித்துவிடாதிருத்தலுமேயாகும் அந்த தங்கப் பசுவில் ஹக்கைக் கண்டபடித்திதனுல்தான் 'ஸாமிரீ' பாவத்தில் வீழ்ந்தான்.

'தாத்து', 'தாத்'தைக்கொண்டு 'தாத்'துடன் தாத்தின் மீது உதயமாகிசொக்கிப்போய் ஏகவஸ்துவாகி, பின்னர், 'தாத்'தைக்கொண்டு 'தாத்து'டன்தோற்றமளிக்கின்றது. இந்த நிலையில் பண்புகளுக்கு இடமில்லை 'தௌஹீது'டைய 'நுக்தா' வென்னும் புள்ளியாகிறது 'தாத்து'டைய ஒரு 'தஜல்லி'யாயிருக்கிறது 'சாலிக்கு' பிறருக்கு போதிக்க வேண்டுமாயில இந்த நிலையிலிருந்து அவர் கீழிறங்க நேரிடுகின்றது.

குறிப்பிட்ட தொழிலை நிறைவேற்றும் மானிடன் ஒருவனுக்கே 'நுஸூல்' ஆகிய 'படி இறங்குதல்' ஏற்பட்டிருக் கிறது. அவ்வாறு அவன் நியமிக்கப்பட்டிராவிடில் ஹக்குடன்

அவன்பெற்றிருக்கும் ஐக்கியத்தினின்றும் வெளிவரவேண்டிய அவசியமில்லை. முஹம்மது (ஸல்) அவர்களிடம், "நீர் புறப்பட்டுச் சென்று லோககைங்கரியங்களில் ஈடுபடுவீராக" என்று கூறப்பட்டது. உவைசுல்கர்னி (றலி) அவர்களைப் பார்த்து, நீர் நெருங்கி வந்து எங்களுடன் இருப்ீராக." என்று சொல்லப்பட்டது. யாதொரு தொழிலுக்கும் நியமிக்கப் படாதவர்களுக்கு பிரபஞ்சத்திலும், குடும்பத்திலும் சம்பந்தம் கிடையாது. "நீ ஒரு துறவியாகயிருந்தால் உனது பாதை யைத் தொடர்ந்துக்கொள்; அன்றி நீ ஒரு குடும்பியாகயிருப்பின் உனது பாதையைத் தொடர்ந்துகொள்;" என்று ஒரு கவி பாடியிருக்கிறார். பல வந்தப்படுத்தப்பட்டுதான் நபிமார்கள் குடும்ப வாழ்க்கையை நடத்த முன் வந்தனர். இந்த பலவந்தம் (லோக) நன்மையை முன்னிட்டுதான் உண்டாயிற்று.

இந்த பாதையின் ஒழுங்குதான் சுற்றுதல் அல்லது சுழற்சியாகும். 'சாலிக்'குடைய சுழற்சி அல்லது சுற்றுதல் 'ஹக்'கை நோக்கியே.

"உள்ளமையென்னும் சமுத்திரத்தில் தன்னை அறிதல் என்ற முத்தைத்தவிர யாதொன்றுமில்லை. நாம்தாம் நம்மைச் சுற்றி நீர் சுழியைப் போன்று சுழன்றுக்கொண்டு வருகிறோம்" என்று ஒரு கவிஞர் பாடியிருக்கிறார். நமது செயல்களிலும், நடத்தைகளிலும், மறைவான 'ஷிர்க்'கிலிருந்து 'தௌஹீது' அளவில் சுழற்சி அல்லது சுற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. இன்மை யாக்குதற்கு யாதொரு அவசியமுமில்லை. இல்லாத ஒன்றினை இன்மையாக்கல் முடியாத காரியம். செயல்களிலும், நடத்தை களிலும் ஏற்படும் சுற்றுதலைக் கவனித்தற்கு எவ்வளவு அத்தியா வசியமில்லையோ அது போன்றே மறைவான 'ஷிர்க்'கிலிருந்து 'தௌஹீது' அளவில் ஏற்பட்டுவரும் சுற்றுதலை கவனிக்கவும் அவசியமில்லை. நாயகம் (ஸல்.) அவர்களுடையகாலத்தில் 'ஷிர்க்' கைப் போக்குதற்கு இவ்வளவு கடினமான வாழ்க்கை விதிகளை அனுஷ்டிக்க உத்திரவிடப்பட்டில்லை. நீ எதனை 'கைர்' என்று கருதுகிறாயோ அது உண்மையில் 'ஹக்கு' தானாகவே யிருக்கிறது. நீ 'உன்னை'யும் 'பிரபஞ்சத்'தையும், 'கைர்'

என்று நினைக்கிறாய் அருபத்திலும், வகை விபரத்திலும், சொருபத்திலும் (வியஷ்டியிலும்) நீயும், பிரபஞ்சமும், 'ஹக்கு' தானாகவேயிருக்கின்றாய் என்று கருதிகொள்வாயாக.

"மக்ரிபி! உனது 'கல்வத்து' அறையில் எதனை நீ தேடிக்கொண்டிருக்கிறாயோ, அதனையே நான் ஒவ்வொரு தெரு மூலையிலும், சந்து பொந்துகளிலும் தோற்றமளிக்கக் காண்கிறேன்." என்று ஒருவர் பாடியிருக்கிறார் தொழுகை, நோன்பு, தனித் திருத்தல், 'தஸ்பீஹா' செய்தல் ஆகியவை யாவும் 'ஹக்'கைத் தண்ணிலும், கடற்கரையின் மணற்றுளிகளிலும் நோட்டமிடுதற்காகவே ஏற்படுத்தப்பட்டன. நீ அலைகளை மட்டும் பார்த்துவிட்டு. தண்ணீரைப் பார்த்தலை இழந்து விடுகிறாய். அலைகளோ வெருங் கற்பனா ரூபங்கள். தண்ணீர் மட்டுந்தான் மெய்ப்பொருள். உனது உண்மையை 'ஹக்' குடைய உள்ளமையாகக் கருதிகொள்; இன்னும் உனது 'சிபாத்து'களான பண்புகளையும். 'அப்ஆல்' ஆகிய செயல்களையும் 'ஹக்கு'டைய 'சிபாத்து' 'அப்ஆல்' (பண்புகள், செயல்கள்) ஆக எண்ணிக்கொள்; முதலில். உனது ஜீவத் தன்மைவிடுத்து நீ இழந்துவிட்ட உள்ளமையான 'பிர்ம' அகங்காரத்தைத் தேடி அடையப் பெறுவாயாக உனது ஜீவ அகங்காரம் இன்மையாக்கப்பட்டதென்றும். 'ஹக்'குடைய அகமியமே உனது அகமியமென்றும் யாதொரு சந்தேகமுமின்றி கருதிக்கொள்வாயாக.

'கைபு' என்ற அந்தரங்கத்தையும் 'சஹாதத்து' என்ற வெளிரங்கத்தையும் 'ஹக்'கு அறிகிறவனாயிருக்கிறான் 'ஆதி' உள்வீடு என்னும் அவனது திருநாமங்கள் 'கைபு' என்னும் அந்தரங்கத்தைக் குறிக்கின்றன; 'அந்தம்' வெயீடு என்பவை வெளியரங்கத்தைக் குறிக்கின்றன. அவனுடைய அறிவில் 'அஹதிய்யத்து' 'உலூஹியத்து' ரூபூபிய்யத்துடைய அந்தரங்க நிலைகள் யாவும், 'அல்லாஹூ' 'அம்தால்' 'அஜ்ஸாம்' ஆகிய வெளியரங்க நிலமைகள்யாவும் இவ்'ற்றினுள் சேர்க்கப்படுகின்றன. இதுவே 'ஷரீஅத்து'டைய பாஷை சூபிய்யாக்களின் பாஷையில் இந்நிலைமைகள் 'கைபு' 'ஷாஹாதத்து'

'ரூஹா' 'மிதால்' அஜ்ஸாம் என்றும் ஹல்ராத்து - கம்ஸா (ஐம்பெரும் சமுகங்கள்) தோற்றங்கள். என்று அழைக்கப்படுகின்றன. 'ஸைபை' 'காயிபுல்கைபு' என்றும், 'கைபு' என்றும் காட்டப்படுகின்றது. 'ஷரீஅத்'தின் ஆறு பதவிகளும் இவ்வாறு ஏற்படுகின்றன 'ஹுவல்லதீ கலகஸ்ஸமாவாதிவல் அர்ள பீஸித்ததி ஐயாமின்தும் மஸ்தவா அலல் அர்ஷி' — "அவன் ஆறு நாட்களில் வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தான் பின்னர் 'அர்ஷ' (சிம்மாசனம்) மீது அமர்ந்தான்" — (குர்ஆன்)

'ஷரீஅத்'தை உண்டுபண்ணுகிறவர் சாதாரண மக்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்திக் காட்டுவதில்லை 'துகல்லி முன்னாஸ அலாகத்ரி உகூலிஹிம்' 'அவரவர்களின் அறிவின் விளக்கத்துக்குத் தக்கவாறே நீங்கள் மனிதர்களுடன் உரையாடுங்கள்' என்பது ஒரு பொருத்தமான சொல்லாகும்; 'நபி'மார்கள் இரகசிய பூட்டுகளை உடைத்து வெளிப்படுத்தும் பொருட்டு நியமிக்கப்படவில்லை. அவர்களுடைய 'ஷரீஅத்'தைக் கொழிந்படச்செய்து அகமியங்களை மறைத்து வைக்க வேண்டியிருந்தது உதாரணமாக, சிலஜனங்கள் 'நபி' (ஸல்) அவர்களைப் பார்த்து, "அ-அன்த அஹது" — (நீங்கள் 'அஹது' தானா?) என்று கேட்டதற்கு, அவர்கள் மறுமொழியாக 'லாஅன அஹ்மதுன் பிலாமீம்' — (இல்லை. நான்மீமின்றிய 'அஹ்மது' வாயிருக்கிறேன்) என்றார்கள் அதாவது "நான் 'பந்தா'வாகிய அடிமை (கண்டப் பொருள்); என்னுடைய அகமியம் 'ஹக்கு' (அகண்டப் பொருள்) ஆக இருக்கிறது." என்பதாம் 'ஹகீகத்'தென்பது 'ஷரீஅத்'தினைல் மூடப்பட்டிருக்கிறது "அல்ஈமானு உர்யானுன் வலிபாசுன் தக்வா" — 'தன் நம்பிக்கையாகிறது நிர்வாணமாயும், அதன் ஆடை பயபக்தியாயுமிருக்கிறது' என்று சொல்லப்படுகிறது 'ஔலியா'க்கள் மர்மங்களை வெளிப்படுத்தி வைக்கவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் பொது கூட்டங்களில் அவற்றை விவரித்துப் பேசுகிறார்கள் எனது பகிரங்கத் தன்மைகள் வெற்றியிலிருந்து தோல்வியனவில் தலை கீழாய் விழுந்துவிட்டன;' எவ்வாறு விளங்காத கூட்டங்களுக்கு

இரகசியங்கள் மறைக்கப்பட்டிருக்கும்? (ஹாபிஸ்) இவ்வாறு இரகசியங்கள் மறைக்கப்பட்டிருக்கும். 'ஒளலியா'க்கள் செய்திராத பக்ஷத்தில் திருகுர்ஆனின் இரகசிய கருத்துக்கள் யாவருக்கும் மறைக்கப்பட்டே போயிருக்கும். 'நபி' மார்களால் மூடிவைக்கப்பட்ட மர்மங்களை 'வலி' மார்கள் வெளிப்படுத்தினார்கள். 'நபி'மார்களால்தொடப்படாத ஆத்மீகக் கஸ்தூரியைப் பொதிந்துகொண்டிருந்த தோலைக்கிழித்து வெளிப்படுத்தி மணக்கச் செய்தது 'ஒளலியா'க்கள்தான்.

''ஒமக்ரிபி! தனித்த இடத்திலிருந்து நீ தேடிகொண்டிருக்கும் வஸ்துவை நான் ஒவ்வொரு வீதியின் மூலையிலும். சந்து பொந்துகளிலும் தோற்றமளிக்கப்பார்த்து வருகிறேன்'' ஜுனைதுல்பக்தாதீ (றலி) அவர்கள், 'அனா அக்லது. வஅனா அஸ்மஉ மன்பித்தாரைனி கைரீ' — ''நானே பேசுபவனும், நானே கேட்பவனுமாய் இருக்க இருலோகங்களிலும் எனது வேறு ஆகிய (அன்னியப்பொருள்) என்பது யார்? என்று அருளியிருக்கிறார்கள். மேலும் மற்றொரு 'ஒளலியா,' ''லைஸபிஜுப்பிதின் சிவல்லாஹ்'' ''என்னுடைய சட்டைக்குள் அல்லாஹ்வையன்றி வேறு யாரிருக்கிறான்?'' என்று கூறியிருக்கிறார்கள். மற்றொருவர், ''லைஸ பித்தாரைனி கைரீ'' — என்னைத் தவிர இருலோகங்களிலும் யாருமில்லை'' என்றும் பகர்ந்திருக்கிறார் இவை நாயகம் (ஸல்) அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட ''அனா அஹமதுன் பிலாமீம்'' ''நான் மீமின்றிய அஹமதுவாயிருக்கிறேன்'' என்ற ஏடுதலான மொழியின் விபரங்களாயிருக்கின்றன 'ஒளலியா'க்கள் 'நபி மார்களுடைய வாரிசு பெற்ற நாவு அல்லது பேச்சாளர்களாயிருக்கிறார்கள் 'நபி'மார்களுடைய 'பாதின்' ஆகிய அகமியப் பொருட்களை வெளிப்படுத்தி வைப்பவர்கள் அவர்களே. 'அல்வலது சிர்ருன்லி அபீஹி' — ''தந்தையினது (வெளிப்படுத்தப்பட்ட) மர்மம் குழந்தைதான்'' தங்கள் 'பீர்' ஆகிய ஷெய்குபஹாவுத்தீன் ஜகரியா' அவர்களுடைய நூற்களில் காணப்படாதவற்றை 'மீர்ஹுஸைன் ஸாதாத்' அவர்களும், 'பக்ருதீன் இராக்கீ' அவர்களும் வெளிப்படுத்திவிட்டதனால் அவர்கள் 'பித்அத்' என்னும் நூதனத்தை கற்பித்துவிட்டதாக சில ஜனங்கள் அவர்களை குறை கூறினார்கள் அதற்கு

பக்ருத்தீன் இராக்கி அவர்கள் " நாங்கள் அவர்கள் முரீதுகள். முரீதுகள் தங்கள் 'பீரு'டைய நாவாகயிருக்கின்றனர்; 'பீர்' எதனை மறைத்து வைத்துக்கொண்டாரோ அதனை அவருடைய நாக்குதான் வெளிப்படுத்தி வைக்கும் " என்று பதிலளித்தார்கள். 'அல்லது சிர்ருன் லி அபீஹி' — களது தந்தையின் மர்மம் தனையன்தான்! பாத்திரத்திலிருப்பவற்றைக் கொண்டுவரும் அகப்பைகள் நாங்களே. 'நபி' மார்கள் தங்களுக்கு பின்' ஒரு 'நுக்தா' வாகிய புள்ளியை விட்டுச் சென்றனர். 'ஔலியா'க்கள் அதனை ஒரு சுற்றுக் கோடாகச் செய்துவிட்டனர் இந்த உலகிலிருந்து அந்த சுற்றுக் கோடுகள் அல்லது வட்டங்கள் மறைந்துவிடினும் சுவனபதியில் அவைகள் சதாதரிபட்டிருக்கும் எனெனில், அதுவே நிரந்தரமான நித்திய உலகு சகல மர்மங்களும் மறைந்துவிடும் இடமே நிரந்தரஉலகம் அந்த மர்மங்களை நிராகரிக்கும் பகட்டான் 'சரியை' வாதிகள், வேஷக் குருக்கள், பொய் வணக்கவாளிகள் ஆகியோருக்கு இவை வெளிப்படா. 'ஹக்கு' தோற்றமளிக்கும் இந்த உலகிலும் 'ஹக்'குடைய 'தஜல்லி' வெளியாகும் மனிதனிலும் தோட்டமிடுதலில் கொஞ்சமேனும் அவர்கள் நம்பிக்கை வைப்பதில்லை. 'ரஐத்துரப்பீ அலா! சூரத்தில் அம்ராத்' — நான் எனது நாயனை ஒரு அழகிய வாலிபனின் கோலத்தில் தெரிசித்தேன். ' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள். " நீ விஷேஷ தஜல்லி'யைப்பார்க்க நாடினால் மனிதனின் முகத்திலே பார்ப்பாயாக; அங்கு தெளிவான புன்முறுவல் பூத்ததாக ஹக்குடைய தாத்தை நீ காண்பாய் " (மத்னவீ)

உருப்படியான முழு கண்ணாடியிலே நீ பார்க்குங்காலை உனது கண்களின் ஒளி கிரணங்கள் உனது முகத்தில் பிரதிபலிக்கிறது. முகமானது ஒன்றே ஒன்றாக இருப்பதால் ஒரே முகம்தான் பிரதிபிம்பிக்கப்படுகிறது. பல்வேறு கண்ணாடிகளினுக்கையில் அவற்றினின்றும் அநேக முகங்கள் ஒரே கண்ணில் பிரதிபலிக்கின்றன ஒவ்வொரு கண்ணாடியைப் பார்க்கும்பொழுது ஒரே முகம்தான் தனித்தனியே பலவாகப் பிரதிபலிக்கின்றன. ஒரு முழு கண்ணாடியை எடுத்து பல துண்டுகளாக உடைத்து அந்த துண்டுகளை ஒரு அட்டையின் மீது ஒட்டிய பின்னர் நீ உன்

முகத்தை இந்த பல்வேறு துண்டுகளிலும் பிரதிபலித்துப் பல வாகக் காண்கிருய்.

"ஒவ்வொருவனும் ஒரு தடவைதான் மரணிக்கிருன். ஏழை 'ஜாமீ' மட்டும் அநேக தடவைகள் பிரதிபிம்பத்திலும் மரணிக்கிருர்." முகம் ஒன்றே. கண்கள் பல. கண்ணுடியில் அவ்வாறுதான் தோன்றுகின்றது. 'ஜமால்' என்னும் பேரழகு பலதிரப்பட்ட தோற்றங்களிலிருக்கின்றன. இந்த தோற்றரவுகளைப் பார்வையிட பல்வேறு கண்கள் தேவைப்படுகின்றன; அதாவதுதான் பார்க்கப்பட்ட காதலுக்குப் பல்வேறு கண்கள் தேவைப்படுகின்றன காதலன் தன்னுடைய சுய அழகினுலேயே தன் மீதேதானே காதலிக்கிருன். அழகின் காட்சிகள் கணக்கற்றவை; காதலின் அனுபவங்களும் எண்ணற்றவை. அழகு என்பது மேற்றிசையினதுமன்று: கீழ் திசையினதுமன்று; 'அரபி'களுடையதுமன்று; அஜமிகளுடையதுமன்று. தான் பிரதிபலிக்கப்படுதற்கு அழகு அனேக கண்ணுடிகளை வேண்டிற்று காரணம் வெவ்வேறு காட்சிகளைக் காட்டுதற் பொருட்டேயாம் ஒரே அழகினுடைய பலதிறப்பட்ட தன்மைகளை கண்ணுடிகளின் எண்ணிக்கை கொணர்ந்துவிட்டது ஏனெனில் இந்த தன்மைகளை ஒன்றன் மீதொன்ருய் குவிப்பதற்காகவே. 'மாஅப்ருக ஹக்க மஃரிபதிக." மாலஹித்தருக ஹக்க ஷஹாததிக' — "உன்னை அறியும் அளவுக்கு நான் உன்னை அறிந்துவிடவில்லை. என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலந்தருளியிருக்கிறார்கள்.

'ஹக்கு'டன் உண்மையான இணைவைத்தல் என்ற ஒன்றுயிருப்பதுமில்லை; இருந்ததுமில்லை. 'ஷிர்க்' என்பது 'கைர்' என்ற பிறப்பொருளுடன் கூட்டு வைத்தலைக்கொண்டு வருகிறது. 'ஹக்கு'டைய 'வஹ்தத்'தென்னும் நிலையில் யாதொரு 'கைர்' என்னும் 'வேறு' கிடையாது. இவ்வாருக 'கைர்' என்பது அடியோடு இன்மையாக இருக்கையில் ஒருவன் எவ்வளவுதான் முயன்றபோதிலும் அவன் ஒரு 'முஷ்ரிக்' என்னும் இணைவைப்பவனுக ஆகமுடியாது 'கைர்' என்னும் வேறு பொருளைக் குறிக்கும் பொய்த் தோற்றங்களைதான்

'ஹக்'டைய அகமியம் அணிந்துகொள்கிறது; அப்பொழுதுதான் அனேகத் தன்மை வெளியாகிறது எனினும், அதற்கு 'கைரு' மில்லை அனேகமுமில்லை. ஏனென்றால் வெறுந் தோற்ற மானது மெய்ப்பொருளைவிட முற்றிலும் மாறுபட்டது "ஒரு தோற்றத்துக்கு தனியான உள்ளமை கிடையா; தன்னையே தனக்கு மெய்யல்லாத பொய்யான கற்பனை எண்ணத்திலே தோற்றிக்கொண்ட மெய்ப்பொருளின் வெற்று எண்ணமே யாம். கற்பனையான தோற்றத்தின் பலனாக ஏற்பட்ட கற்பனையான 'ஷிர்க்கு' என்னும் இணைவைத்தலானது மெய்ப்பொருளாகிய 'ஹக்கு'டைய 'தஜல்லி' (தோற்றம்), ஏற்பட்டவுடன் மறைந்துவிடக்கூடிய ஓர் கற்பனை எண்ணமா யிருக்கிறது "ஜா-அல் 'ஹக்' வஜஹக்கல் பாதிலு இன்னல் பாதில கான ஸஹூக்கா" - மெய்ப்பொருள் உதயமாகிவிட்டது: நிட்சயமாக பொய்மையானது மறையக்கூடிய ஒன்றேயாம் ஒரு தோற்றத்திற்கு உள்ளமையின் அடிக்களம் யாதொன்று மில்லை ஆனால் எதனை அது அடித்தளத்தினின்றும் பெற்றிருக் கிறதோ அது அந்த அடிக்களமான உள்ளமையைவிட்டும் மறையக்கூடியதே கோலத்தின் வாயிலாய்த் தோன்றும் அந்த ஒன்று மட்டும் தரிபட்டிருக்கிறது அதுவோ ஒரு மனிதன் ஓர் மனுஷியின் ஆடையில் காட்சியளித்தல் போன்றும்: அகமிய மானது அறியப்படும்பொழுது ஆடையினது தேவையில்லாமல் போய்விடுகின்றது; பெண்மை என்பது ஒரு கற்பனை தோற்ற மும், 'அகம்' ஆகிய இன்மையுமாயுமிருக்கிறது. உள்ளமை யானது இன்மையை மிகைத்துவிடுகிறது. "லிமனில் முல்குல் யௌமலில்லாஹில் வாஹிதில் கஹ்ஹார் — "இன்றைய தினம் யாருடைய அரசாட்சியாயிருக்கிறது;? அது அடக்கி ஆளும் அந்த ஒரு நாயனுடையதாயிருக்கிறது."

தீமை என்பது தோற்றத்தினின்றும் வெளிப்படுவ தாகும். தோற்றமாகிறது அறிவுடன் சம்பந்தப்பட்டது அதுவே 'இஃதிபார்' ஆகிய ஹேஸ்யம் (கற்பனை) இவ்வாறு இப்பிரஞ்சம் ஒரு எண்ணமாகும் ஆனால் இந்த உலகத்தை ஒரு அகமியமின்றிய (ஹகீகத்தற்ற) ஒருவெற்று எண்ணம் என்று மட்டும் நான் சொல்வதாக நீ கருத

வேண்டாம். ஹகீகத்தாகிய அகமியம் எண்ணத்தின் கோலத்திலே வெளியிடாயிருக்கிறது. இவ் உலகமானது கற்பிக்கிறவனின் கற்பனையாகிய வெற்றிடத்தின் உள்ளமை பெற்றிருக்கிறது. எண்ணம் ஓர் வெறும் ஹேஸ்யமான 'இஃதி பார்' என்றும், அந்த ஹேஸ்யம் அல்லது கற்பனை 'கதீம்' ஆகிய பூர்வப் பொருளாயிருக்க முடியாதென்றும் கருகாதே. அவ்வாறிருக்கில் 'ஹக்கு'டைய அறிவும் பொய்யென்று ஆகிவிடும். நமது எண்ணம் பொய்யே; ஹக்குடைய அறிவோ'கதீம்' ஆகிய பூர்வமானது அவனது 'இஃதிபாரத்'தும் பூர்வமானது; இந்த பூர்வமான 'இஃதிபாரத்தைத்தான் 'சிபாத்து' என்று அழைக்கப்படுகிறது. சிபாத்தென்பது அறிவிலிருக்கும் வெறும் 'இஃதி பாரத்து' ஆன ஹேஸ்யங்களாகும். இவை மறையும் வேளை 'தாத்து' மட்டும் தரிபட்டிருக்கிறது. 'தாத்தி'ல் 'தாத்'தைத் தவிர பிறிதொன்றுமில்லை ஆதலின், 'சிபாத்' தென்பது 'தாத்'தையன்றியே வேறு யாது? 'தாத்து' தன்னை தன்னளவில் திருப்பியபோது, 'அறிவு' என்னும் 'சிபாத்து' உதயமானது நீ 'சிபாத்து' என்றழைக்கும் 'இஃதி பாரத்து' அந்த அறிவு என்னும் கண்ணாடியில் தோன்றி உள்ளமைப் பெற்றது எனவே, ஒரே 'ஹகீகத்து' தன்னை 'இஃதி பாரத்து'டனும், 'சிபாத்து'டனும் கண்டு எதார்த்தமாகிய ஏகத் தன்மையை விட்டு, அனர்த்தமான அநேகத் தன்மை அளவில் இறங்கினது. அறிவுடைய நிலையில் அது உண்மையான ஏகத் தன்மையாயிருக்கிறது கற்பனையான அநேகத் தன்மை அந்த நிலையில் வெளிகோலத்தை எடுக்கவில்லை இரண்டாம்படி இறங்கலில் உண்மையான ஏகத் தன்மை அறிவின் கோலங்களுக்குத் தக்கவாறு உண்மையான அநேகத் தன்மையாகத் தோன்றின; அவ்வேளை உண்மையான அநேகம் உண்மை 'ஹகீகத்'தாகிய ஏகத்தை மூடிக்கொண்டது. (யாதொரு 'ஷிர்க்கு'ம் மெய்யாக இல்லாவிடினும்) அந்த யாதார்த்த ஏகத் தன்மையை உணராத ஒருவன் 'முஷ்ரிகு' ஆக ஆகிறான். 'வஹ்தத்'தில் தரிபாடது அநேகம் என்னும் திரைகளின் வாயிலாய் தன்னை உணராது தானே தனது சொந்த 'ஆரிபு' ஆக ஆகாத ஒருவனே 'முஷ்ரிகு' ஆவான். எனவே, 'முஷ்ரிகும்' 'காபிரு'ம் இவ்வாறாக அறியப்பட்டார்கள்

இத்தகைய மனிதர்களின் நேர்வழிக்காகதான் 'நபிமார்கள் அனுப்பப்பட்டனர் 'ஜமால்' ஆகிய போழகின் முகத்தி லிருக்கும் திரைதான் தோற்றங்களாகும். இந்த திரையின் ஒரு மூலையானது சிலருக்கு சில விநாடி நேரம் உயர்த்தப் பட்டும். மற்றுஞ் சிலருக்கு அறவே உயர்த்தப்படாமலு மிருக்கும் அவ்வாறு உயர்த்தப்படாதவர்கள் சதா காலமும் திரை மறைவிலிருப்பார்கள்: அவர்களே நாகத்தில் குடியிருப்பவர்கள்; அதில்தான் அவர்கள் நித்திய காலமும் ஜீவிப்பார்கள் "வஉலாயிக்க அஸ்ஹாபுன் நாரி ஹும்பீஹா காலிதூன்." திரை தூக்கப்பட்டவர்களே சுவர்க்கவாதிகள்: அவர்கள் 'ஜமாலை'க் கொண்டு போஷிக்கப்படுவர் திரை யிடப்பட்டவர்கள் ஜலாலைக்கொண்டு போஷிக்கப்படுவர். ஒருவருக்கு அமிர்தமும், தேனும் கிடைக்கும்: மற்றவர் 'ஸக்கூம்' கள்ளி மாத்தின் பழங்களையும், ரசத்தையும்பெறுவர் தோற்றங்களாய் வெளிப்பட்ட ஹக்குடைய எண்ணங்கள்தான் இவ்வாறாக ஆயின. அவன் (ஹக்கு) நன்மை, தீமை என்ற உடைகளையும், கருணை, மகிமை (கோபம்) என்ற ஆடைகளை யும் போர்த்திக்கொண்டான் யாரும் அவனை தடைசெய்ய முடியாது இன்னல்லாஹ ஹலாகுமு மாயுரீது — தான் நாடு கிறதை 'ஹக்கு' கட்டளையிடுகிறான்.

'கத்ரத்'திலிருந்து (பலவற்றிலிருந்து) 'ஷிர்க்கு' உண்டானது ஒரே 'தாத்து'தான் தன்னை அநேக பல்வேறான ஆடைகளால் அலங்கரித்துக்கொண்டது எனவே அந்த ஒன்றை அநேக ஆயிரங்களாகப் பார்ப்பது 'ஷிர்க்கு'க்கான். தனது அழகின்மீது சொக்கிப்போய் அவன் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து, ஒரு திரையைப் போட்டுக்கொண்டு இங்கு ஒரு மூலையையும் அங்கு ஒரு மூலையையும் உயர்த்துகிறான். தனது சொந்த அலங்கரிப்புக்காகவும், தனது சுய அழகைக் தோற்றுவித்தற்காகவுமே திரை எற்பட்டது அணிபவனுக்கு வேறானதே திரை அத்திரைதான் 'நினைவு' என்னும் திரை. அதைப் போக்குவதினால் எற்படும் பலாபலன்தான் 'விஸால்' தன்னில் தானே 'ஹக்கு' ஐக்கியமடைதல்) என்பதாகும்.

கலுக்கு பயிற்சிமுறை

வணங்கப்பட்டவனுடைய கூட்டுறவால் கற்பிக்கப் பட்ட அநேகத் தன்மையை ஒழித்தற் பொருட்டு தொழுகை யுடைய நேரத்தில் 'சாலிக்கு' தனது (ஜீவத்) தன்மையைப் போக்கிக்கொள்ளவேண்டும்; அவ்வேளை வணக்கம் என்பதே மறைந்துவிடுகிறது கௌதுல் அஃலம் முஹைறதீன் அப்துல் காதர் ஜீலானி (றலி) அவர்கள். 'ஹக்கே தனது சொந்த வணக்கவாளியும், வணங்கப்படுவோனுமாயிருக்கிறான்' என்று அருளி இருக்கிறார்கள். தொழுகையில் நீயே உன்னை வணங்கு பவனாயிருக்கிறாய்; வணக்கத்திற்காகவேண்டி ஒரு விக்ரஹத்தை நீ தயாரித்துக்கொள்ளாதே நீ உன்னை 'ஹக்கு'க்கு வேறென்றும், 'ஹக்'கை உனக்கு வேறென்றும் கருதுவாயா கில் நீ 'ஷிர்க்கு'டைய அஸ்திவாரத்தை நிலை நாட்டிவிட்டாய். இரண்டாவது என்று ஒன்று வரும்பொழுது 'வேறு' என்பது உண்டாகிறது. இரண்டாவது என்பதில்லாவிடில் ஒன்று மாத்திரமே தரிபட்டிருக்கிறது ஆரம்ப காலம்தொடுத்து 'ஹக்'குடைய வேறு என்பது என்றுமிருந்ததில்லை; எனவே ஏன் உன்னை வீணில் 'வேறு' என்று அழைத்துக்கொள்கிறாய்? 'அன அஹ்மதுன் பிலாமீம்' – நான் மீமின்றிய 'அஹ்மது'வா யிருக்கிறேன் என்று நாயகம் (சல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். இவ்வாறே 'அஹ்மது' 'அஹது' வாய் ஆனது அதாவது (ஜீவத்) தன்மை நீங்கிய அஹமது 'அஹது'வாக ஆயிற்று. இந்த நிலையை நீ அடையப்பெற்றதும் உனது சரீரத்திலுள்ள ஒவ்வொரு மயிரும் "அனல் ஹக்கு" ('ஹக்கு' ஆகிய மெய்ப் பொருள் 'நான்'தான்) என்று சப்த மிடும் மேலும், வணக்கவாளி 'ஹக்கு'க்கு வேறானவனாயிருப்ப தால் தொழுகைக்கு அவனுக்கு ஒரு திசை தேவைப்படுகிறது 'பஐனமாது வல்லூ பதம்ம வஜ்ஹுல்லாஹ்' – நீங்கள் எத்திசை திரும்பினும் அங்கு அல்லாஹ்வின் வதனமிருக்கிறது வணக்கவாளி தன்னளவில் முகம் நோக்கும்பொழுது அங்கு அல்லாஹ்வின் முகமிருக்கிறது வணங்குபவன் தனது (ஜீவத்) தன்மையைத் தன்னை விட்டும் நீக்கிக்கொண்ட பிறகு ஹக்கைத் தன்னில் காணவேண்டும். தன்னை ஒரே திசையில் திருப்பிக்கொள்ள வேண்டும் "இன்னீ வஜ்ஜஹ்து வஜ் ஹிய லில்லதீ பதரஸ்ஸமாவா திவல் அர்ளி" – வானங்களையும் பூமியை

யும் படைத்த அந்த ஒருவன் பால் எனது முகத்தைத் திருப்பிக் கொண்டேன்; உன்னை உன்னளவில் திருப்புவாயாகில் அங்கு 'கைர்' என்னும் 'வேறு' கிடையாது.

'குப்ரு' என்பது ஓர் விதையை மண்ணில் மறைத்து வைப்பதற்கு ஒப்பாகும் யதார்த்தத்தில் ஹக்கையே மூடி வைத்தலாகும் எனவே, எவனுடைய பார்வையிலிருந்து 'ஹக்'கானது மறைக்கப்பட்டிருக்கிறதோ அவனே 'காபிர்' ஆகும். அவனது மனக் கண்ணில் பொய் அல்லது கற்பனை (மாயையாகிய 'வேறு') தவிர யாதொன்றும் தோன்றுவதில்லை. இதுவே பகட்டான 'குப்ரு; மெய்யான 'குப்ரு' ஆகிய ஆகிறது ஒருவனது 'நான்' எனும் தன்மையை ஹக்குடைய 'அவன்' படர்கை ஒருமையில் மறைத்தலாகும். இந்த 'குப்'ரில் இஸ்லாத்தின் சரியை ஆசாரங்களுக்கு மாற்றமாக நடப்பதால் யாதொரு ஹானியையும் விளைவிக்காது. ஒரு கவள சாதம் தொண்டயில் அடைத்துக்கொள்ளும் வேளை. ஒரு மிடறு திராட்சை ரசத்தை அருந்துவது நன்மைதான் செய்யயும். இதனை 'சாலிக்கு' தனது 'பீரு'டைய கட்டளையைப் பெற்றே செய்கிருன்.

"உனது 'பீர்' உத்திரவிடுவாராயின் உனது தொழுகைக்குரிய பாயை திராட்சை ரசத்தால் தோய்ந்துவிடு; இந்த பாகையுடன் சர்பந்தப்பட்டிருக்கும் சடங்காசாரங்களை 'சாலிக்' குணர்ந்துக்கொண்டிருக்க முடியாததொன்றல்ல" உண்மையில் இந்த 'குப்ரு'தான் 'பனுபில்லாஹ்' (அல்லாஹ் வில் தன்னை இழத்தல் அதாவது தனது ஜீவத் தன்மையை உணராதிருத்தல் (பே குதி), ஏழ்மைத்தனம் 'பக்ரு' என்பதாகும்

ஒரு 'தர்வேஷ்' ஜுனைதுல் பக்தாதீ (றலி) அவர் களுடைய 'கான் காஹ்'வென்னும் ஆஸ்ரமத்திற்குச் சென்று 'அல்ஹம்து லில்லாஹ்' 'அல்லாஹ்'வுக்கே சகல புகழும்) என்று கூறினர்கள். ஜுனைது (றலி) அவர்கள் 'அல்ஹம்து லில்லா ஹிறப்பில் ஆலமீன்' ("சர்வலோக இரட்சகனுகிய

களுக்கு பயிற்சிமுறை

அல்லாஹ்வுக்கே எல்லாபுகழும்) என்று சொல்லும்" என்று கூறினார்கள். அதற்கு அந்த 'தர்வேஷ்'," "ஹக்குடனே நான் இணைத்துச் சொல்வதற்கு சர்வலோகங்களும் எங்கே? என்று கேட்டார்கள். 'தர்வேஷ்' 'பனா' நிலையிலிருந்தார். அந்நிலையில் அவர் மாஸிவல்லாஹ் (அல்லாஹ்வின் 'வேறு')வை 'அதம்' என்றும் இன்மையாகக் கண்டார். 'ஜுனைது' (றலி) அவர்கள் 'பகா' என்றும் நிலையிருந்த தால் 'அதம்' ஆகிய 'இன்மை' என்றும் கண்ணாடிகளிலே 'தாத்து'டைய தோற்றங்களை நோட்டமிடுதலை சுட்டிக் காட்டினார்கள்.

'பனா' நிலையில் 'சாலிக்கு'டைய உணர்வு (சுட்டறிவு) மறைந்துவிடுகிறது. அவருடைய உண்மையும், 'சிபாத்து'ம் 'அப்ஆலும்' அவ்வாறு ஆவதில்லை இங்கு உணர்வு என்பது வஸ்துக்களைப்பற்றிய அறிவையே குறிக்கப்படுகிறது அதாவது வஸ்துக்களை வஸ்துக்களாகவும், அவற்றின் 'வேறு' என்பதைத் தரிபடுத்துவதாகவுமிருக்கிறது. அவருடைய அறிவில் வஸ்துக் களுக்கு சொந்தமாக யாதொரு உண்மையுமில்லை; வேற்றுமை யுமில்லை. இந்த நிலைமை நீடித்திருக்குமேயானின் இதனை 'ஜத்பு' (ஆனந்த களிப்பு - அல்லது பரிபூர்ண உணர்ச்சி) என்கிறோம். மேலும், இதனை 'ஜுனூனே இலாஹீ' (நாயனில் பித்துக்கொண்டிருத்தல்) என்றும் அழைக்கிறோம் இதனை ஒரு விநாடி நேரம் பெற்றவர் ஒரு 'ஒலி'யாக ஆகிவிடு கிறார். நீண்ட நேரம் பெற்றவர் ஒரு 'குத்பு' அல்லது 'கௌது' ஆக ஆய்விடுகிறார்

'அப்து' 'ஹக்கு' அளவில் முடுகுதல் உண்மை யில் 'ஹக்கு' அப்து அளவில் முடுகுதலேயாம். ஏனெனில், 'ஹக்' அவனை நாடாவிடில் 'அப்து' 'ஹக்கி'டம் முன்னேறிச் செல்லமுடியாது 'சுலூக்கு' என்பது உண்மையில் 'ஜத்பு' என்னும் பரவச நிலை. 'பர்கு'டைய நிலையிலிருந்து 'ஜம்உ'டைய நிலையின்பால் 'ஹக்கு' திரும்பாதிருக்கும் வரையில், 'சாலிக்கு' ஹக்களவில் திரும்புவதற்கு இயலாது வேற்றுமை என்பது 'சாலிக்'குடைய மனதில் புகுதாதவரை

ஒருவன் தனித்திருக்கிருன். ஒருவனது மனதிலிருந்து 'வேற்றுமை' என்னும் எல்லா எண்ணங்களும் மறைவதுதான் தனிமையும், 'கல்வத்து'மாகும்.

ஒருவன் தூக்கத்தில் உணர்உடன் இருக்கும்பொழுது (அதாவது மனம் தூங்காத நிலையில்) கண்கள் மூடி 'திகறு.' 'பிக்று.'களை அந்த நிலையில் செய்துவந்தபோதிலும், விழிப் பும், தூக்கமும், ஜீவியமும், மரணமும், அவனுக்கு சமமாகவே ஆகிறது.

சாப்பிடும் வேளையில் கொடுக்கிறவன் 'இலாஹி'யான 'இஸ்மு' ஆகிய 'முன்இிம்' (கண்காணிப்போன்) என்றும், உனது கரம் 'இஸ்மு - இலாஹி'யான 'றஸ்ஸாக்' 'போஷிக் கிறவன்) என்றும். உன்வயிறு 'இஸ்மு-கியானி' யாகிய 'மர்ஸூக்' (போஷிக்கப்பட்டவன்) என்றும். குடிக்கும்பொழுது 'இஸ்மு - இலாஹியான' ஹையுன் (உயிர்ப்பிப்போன்) என்பது தண்ணீ நடைய கோலத்திலாகி மனதையும். சரீரத்தையும் உயிர்ப்பிக்கிறது என்றும் கருதிக்கொள்வாயாக.

நீ 'ஹக்'கை அவற்றில் பார்க்காவிடில் இவ்வுலகின் நற்கருமங்கள் 'ஹக்'குடைய திரையாயிருக்கின்றன. சில பக்தர்கள் நற்செயல்களையே அறவேவிட்டுவிடுகின்றனர்.

நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் தாங்கள் நோட்டத்தை சிதறச் செய்ததை முன்னிட்டு தங்கள் புதியதோர் ஜோடி செருப்புகளைக் கைவிட்டுவிட்டார்கள் வாழ்கையின் அவசியத் தைப் பொறுத்தே பக்தர் இவற்றைப் ஒப்புகொள்கிருர். அபூயஸீது (றலி) அவர்கள் ஒன்றரை வருட காலம் குளிர்ந்த தண்ணீரே குடிக்காதிருந்தார்கள். ஆனல் ஒரு 'ஆரிபு' ஆகிய ஞானியோ நற்கிரியைகளென்னும் கண்ணாடியில் கொடையாள னை அவனுடைய முகத்தை மட்டும் நோட்டமிடுபவர்களா யிருந்தார்கள். அந்த வகையில் நன்மைகளை எடுத்து கொண்டார்கள் இந்த நோட்டம் அவர்களைவிட்டும் நழுவியதும் அந்த நன்மைகளையும் கைவிட்டுவிட்டார்கள். "ஹுப்பிப

களுக்கு பயிற்சிமுறை

இலாமின் துன்யாகும் தலாதுான அத்தையிபு வன்னிஸாஉ வகுர்ர திஐனி பிஸ்ஸலாத்தி '' — 'நான் இவ்வுலகில் மூன்று வஸ்துக்களை நேசிக்கிறேன். அவை யாவன:- வாசனை திரவியம், பெண்மணிகள், தொழுகையில் எனது நேத்திரானந்த மான குளிர்ச்சி ஆகியவையே,'' என்று நாயகம்(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். நல்ல வஸ்துக்களைக் கொடுத்தவனை பாராட்டுவதில் ஈடுபட்டிருக்கையில் நல்ல வஸ்துக்களை ரசித்தல் என்பது மறைந்துவிடுகிறது

அல்லாஹ்வின் மகோன்னதம் பெற்ற வஸ்துவாகிய மனிதன் மரங்கள் போன்ற கீழ்த்தரமான வஸ்துக்களின் முன்னர் தன்னைப் பணியச் செய்துகொள்கிறான். '' வஸக்கரலகும் மாபிஸ்ஸமாவாத்தி வமாபில் அர்ளி ஜமீஅன் மின்ஹு '' அவன் வானங்களிலும், பூமியிலுமுள்ள சகலவற்றின் மீதும் உங்களுக்கு அதிகாரத்தை அவனிடமிருந்து அளித்தான் (குர்ஆன்) மனிதன் கேவலத்தையடைந்தது இச்சையைக் கொண்டுதான் ஆஸ்தி பூஸ்திகளின் மீதும், கௌரவத்திலும் அவன் பிரியங்கொள்வதே அவனது தாழ்ந்த நிலைக்குக் காரணங்களாயின இறைவனை வணங்குவதும், சுவர்க்கத்தின் மீது வைக்கும் ஆசையால் தான். மனிதனுக்கு அவனது தெய்வத்தின்பால் ஏற்படும் பொழுதுள்ள ஆசை காதல் அல்லது அன்பினுடைய 'தஜல்லி' யின் தோற்றமாகயிருக்கிறது. மனிதன் படி ஏறும்பொழுது தன்னை சகல இச்சைகளைவிட்டும் நிவர்த்தி செய்துகொண்டு உண்மை காதலியுடன் ஐக்கியமடைகிறான்.

ஷெய்குல்அக்பர் (றலி) அவர்கள் பஸ்ஸெ-ஹாரூனியில் '' ப இன்னல் ஆரிபு மன்யாராஉல்ஹக்கு பீகுல்லிஷைஇன் '' சகல வஸ்துகளிலும் ஹக்கைப் பார்ப்பவனே நிட்சய மாக ஒரு 'ஆரிபு' என்னும் ஞானியாக இருக்கிறான் 'ஹக்'கை வஸ்துக்களில் மட்டும் பார்ப்பதோடு நில்லாமல் அவன் (ஹக்கு) சகல வஸ்துக்களின் அகமியமாக இருப்பதை பார்ப்பவனே ஒரு உண்மை 'ஆரிபு' ஆக இருக்கிறான் ஆகையால் அவன் (ஆரிபு) தனது சொந்த 'பாதின்' (ஆகிய அகமியம்)ஐ ஒருக்காலும் நிராகரிப்பதில்லை; (ஏனெனில் அது 'ஹக்'குடைய அகமியமா

யிருக்கிறது.) அவ்வாறு அவன் செய்தால் அவன் கொள்கையின் மீது 'ஷரீஅத்'தினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வெளியாங்க சூழ்நிலைகளைப்பொருத்தும், தன்னை ஹக்கிடமிருந்து 'மஹ்ஜூப்' ஆகிய திரையிடப்பட்டவனாகச் செய்துக்கொள்வதற்கேயாம். குறித்த இந்த காரணத்தை முன்னிட்டே மூஸா (அலை) அவர்கள், 'ஹாரூன்' (அலை) அவர்கள் மீது கோபங் கொண்டார்கள் 'நபி'மார்களுடைய நேரிய பாதை (சிராதுல் முஸ்தகீம்) 'ஷரீஅத்து'தான். ஹக்கினால் நிர்ணயிக்கப்பட்ட கடைகள் இந்த பாதையில் எற்பட்டிருக்கின்றன. தங்கள் சொந்த தன்மையை முன்னிட்டு சகிக்கப்படவேண்டிய கஷ்டங் களான இக்கடைகளாலான கமையை சிலர் ஒப்புக்கொண்டனர்; இதனை ஒப்புக்கொள்ளாது மறுத்தவர்கள் 'காபிர்' என ஆயினர், 'றப்புல் அர்பாபு'டைய கோபத்திற்கும் ஆளாயினர் (ரப்புல் அர்பாபு) என்பது 'றப்பு'களின் 'றப்பு' எனப்படும். ருபியத் துடைய பதவியில் சகல 'இஸ்மு'களில் மீதும் ஆட்சிபுரிந்து, சகல இஸ்முகளையும் தன்னுள் சேகரித்துக்கொண்ட 'இஸ்மு'தான் 'இஸ்மும் அஃலம்' அல்லது 'ரப்புல் அர்பாபு' என்ப்படும் தங்களைப்பின் தொடர்பவர்களின் மீது 'நபி'மார்களின் கோப முண்டானது இக்காரணத்திற்காகத்தான். (பின்தொடர்ந்தோர் கள் நேரான பாதையில் இல்லாதிருந்தார்கள்) 'அஸ்மா.' 'சிபாத்'துடைய 'தஜல்லியாத்'தின் ஒளியில் பிரபஞ்சத்தின் சகல தோற்றங்களிலும் ஒரு 'ஆரிபு' ஹக்கைத் தெரிசிக்கிறார். இந்த தடைகளை எல்லாம் நோட்டமிட்டு அவற்றினால் ஏற்படும் சங்கடங்களைப் போக்கிக்கொள்பவரே ஒரு மெய்யான ஞானி யாகும் 'வமன்யதஅத்த ஹுதூதல்லாஹி பகத்லளம நப்ஸஹு' - ஹக்கினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லையை மீறுபவன் தனக்குதானே அநியாயஞ் செய்துகொண்டவனாகும் 'ஆரிபு' ஆகிய ஞானியோ 'அஸ்மா'வை அவற்றின் சகல தோற்றங் களிலும் தெரிசிக்கிறவராகும். மேலும், நபிமார்களுடைய பாதையில் நடப்பவனும், 'கத்ரத்'தாகிய அநேகத் தன்மையில் சிக்கி 'மஹ்ஜூப்' என்னும் திரையிடப்பட்டவனாக ஆகாமலு மிருப்பான் இதுவே 'ஜம்உல்ஜம்உ'டைய நிலை. (இதில் நபிமார்களுடைய பாட்டைகளும். அஸ்மாவின் பாட்டைகளும் ஐக்கியப்பட்டிருக்கின்றன) 'மாஜல் பஹ்ரைனியல் தகியானி

கஹுக்கு பயிற்சிமுறை

பைனஹுமா பர்ஜுகுன் லாயப்கியான்' — நாம் இரு கடல்களையும் இரண்டும் சந்திக்கும் வகையில் ஓடச்செய்தோம், இவற்றினிடையில் ஒன்றை ஒன்று கடந்துவிட முடியாத ஒரு தடை ஏற்பட்டிருக்கிறது. 'இந்த இரு கடல்களும் ஆரிபினிடத்தில் சங்கமமடைந்து கலக்கின்றன.

ஒன்று பலதில் தெரிசிக்கப்படுகிறது. ஹக்கை ஹக்கைக் கொண்டு தெரிசிப்பாயாக 'பஸரஹு பிஸ்பிஹி' தெரிசனைக்கு முன்னர் காதலனை காதலிக்கப்பட்டவனாயிருந்தான். காதலியில் தனது பண்புகளை இழந்தபோது காதலன் துவிதத்தைக் கண்டான்.

'ஹக்'குடைய 'ஜமாலி'ன் கண்ணாடியாக மனிதனிருக்கிறான். நல்லுடைத் தரித்த ஒரு மனிதன் தனது உடையாபரணத்தைப்பற்றி யாதொரு கவலையும் எடுத்துக்கொள்வதில்லை. தன்னையேதான் பார்க்கும் கண்ணாடியில் ஒரு சிறிது நேரம்தான் தூசிப்படிந்திருக்கிறது. அவனே தனது ஆடையினால் அந்த தூசியைத் துடைத்துவிடுகிறான்.

மனிதனுடைய ஆத்மாவும், 'ஹகீகத்து இன்ஸானி'யாகிய இன்ஸானுடைய அகமியமும் அரூபத்தில் ஹக்குடைய ஞானத்தைப் பெற்றுள்ளவை. மனிதனுடைய சரீரத்தில் அவைகளுடைய தோற்றமுண்டாகி அவற்றிற்கு 'இர்பான்' என்னும் ஞானத்தை அளித்தது. மாகலக்துல் ஜின்ன வல்இன்ஸ இல்லாலியஃபுதூன்'' — ''நான் ஜின்னையும், மனிதர்களையும், படைக்கவில்லை. என்னை அவர்கள் வணங்கி வழிபடுதற்கேயொழிய'' (குர்ஆன்) அலஸ்து பிறப்பிகும்காலூ பாலஷைஹித்னா'' ''நான்உங்கள்இரட்சகனல்லவா?'' என்பதற்கு அவர்கள்ஆம், மெய்தான்; நாங்கள் அவ்வாறே சாட்சி பகருகிறோம்.'' என்று வாக்கு தத்தம் செய்ததை மறந்த அவர்களை இறைவனும் மறந்துவிடுகிறான் இதனைக் கொஞ்சமேனும் ஞாபகித்தவர்களே 'நபி'மார்களின் மீது விசுவாசங்கொண்டனர்.

அஸ்ராரே அனல்ஹக்

தொழுகை, நோன்பைக்கொண்டும், இராக் காலத்தில் கண்விழித்திருப்பதைக் கொண்டும், வணக்க முறைகளைக் கடைப் பிடிப்பதிலை மட்டும் 'பக்ரு' அல்லது 'தர்வேஷு'த் தனம் உண்டாகியிருக்கவில்லை ஆனல் ஹக்குடைய அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட வஸ்துக்களின்பால் அதிருத்தியடையாதிருக்கலில் தானிருக்கிறது சம்பவங்கள் யாவும் இறைவனல் நிர்ணயிக்கப்பட்டதேயன்றி. 'கைர்'என்னும் பிறப் பொருளாலன்று. ஹக்கினல் சம்பவிக்கப்படும் காரியங்களுக்கு 'தர்வேஷ்'என்போர் தலைசாய்க்கவேண்டியவரே என்று ஷெய்கு அப்துல்லாஹ் பில்யானீ அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

சாலிக்குடைய கர்வமும், அகங்காரமும் அவனது இதயத்திலிருந்து நீங்காதவரை அவனுக்கு யாதொரு 'பனு'வுமில்லை எனெனில் இவைகளோ (கர்வம், அகங்காரம்) 'சாலிக்கு'டைய ஜீவத் தன்மையின் பண்புகளாயிருக்கின்றன. ஒருவனுடைய ஹிருதயத்திலுள்ள கர்வத்தைக் தோண்டி எடுப்பதைக்காட்டிலும் ஒரு மலையை வேருடன் களைந்துவிடுவது வெகுசுலபமானது ஆகையால் அந்த ஜீவத் தன்மையே தானக நீங்கிவிடவேண்டும்.

'பஸுப்ஹானல்லதீபியதீஹிமலகூத்துகுல்லிஷைஇன்' சகல வஸ்துகளின் அரசாட்சியும் யாருடைய கையிலிருக்கிறதோ அவனுக்கே எல்லா மகிமையும். (குர்ஆன்)

தபாரகல்லதீ பியதி ஹில் முல்கு வஹுவ அலா குல்லிஷைஇன் கதீர் — யாருடைய கையில் அரசாங்கமிருக்கிறதோ அவனே ஆசீர்வதிப்புடையவன். சகல வஸ்துக்களின் மீதும் அவனே சக்தி பெற்றிருக்கிருன். (குர்ஆன்) ஹக்கினிடமிருந்துதான் சர்வ வஸ்துக்களும் உண்டாகின்றன; ஆனல் அன்பினல் தூண்டப்பட்ட மரியாதையானது நன்மையைப் பொருத்தவரை 'ஜப்ரு'க்கும், தீமையைப்பொருத்தவரை 'கத்'ருக்கும் குறிப்பிடும்படி உன்னை ஏவுகிறது "அல்ஈமானு பைனல் கத்ரிவல்ஜப்ரி" — "ஈமானுகிறது 'கத்ரு'க்கு

'ஜப்ரூ'த்துடையில் ஏற்பட்டிருக்கிறது" என்று ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (றலி) அவர்கள் அருளியிருக்கிறார்கள். 'மா அஸாபக மின்ஹஸனத்தின் பமினல்லாஹி வமா அஸாபக மின்ஸய்யிஆதின் பமின் நப்ஸிக' — நீ நன்மையிலிருந்து எதனைப் பெறுகிறாயோ அது ஹக்கிடமிருந்தே; தீங்கிலிருந்து எதைப் பெறுகிறாயோ அது உன்னிடமிருந்தே" அவ்வாறான நிலையே உண்மையில் 'துக்வா'வென்றும் பயபக்தியுடைய தன்மையைப் பெற்றது. ஆதம் (அலை) அவர்களைக் கீழ்ப்படியாததைப்பற்றிக் கேட்கப்பட்டபொழுது, அவர்கள் "றப்பனா ளலம்னா அன்புஸனா" — நாயனே நாங்கள் எங்கள் 'நப்ஸு'களுக்கே அநியாயஞ் செய்துகொண்டோம்." என்று பதிலளித்தார்கள். அப்துடைய செயல்கள் ஹக்குடைய சிருஷ்டியாகும் முன்பின் என்பதால் இரண்டும் வெவ்வேறாய்த் தோன்றினும் சாவியின் அசைவேதான் கையினது அசைவாகும். இந்த இரு அசைவுகளும் ஹக்குடையகையின் அசைவுகள்தான். "யதுல்லாஹி பௌகஐதீ ஹிம்" — ஹக்குடையகை அவர்களின் கையின் மேலிருக்கிறது.

"அல்மஃரிபத்து உஜூது ஜஹ்லிக இன்தகியாமி இல்மிஹி' - "ஹக்குடைய அறிவின் முகத்திலுள்ள உன்னுடைய உண்மையான மடமையின் உள்ளமையுடைய பார்வையே 'மஃரிபத்து' ஆகும். ஹக்குடைய அறிவுடன் ஒத்துப்பார்க்கும் பொழுது உன்னுடைய தாத்தின் அகமியம் மடமைத்தனமே. உன்னுடைய அறிவை ஹக்குடைய அறிவென்று கருதிக்கொள். உன்னுடைய அறிவு உண்மையில் வெளிப்படையிலும், பகிரங்கத்திலும், ஹக்குடைய கண்டிப்பான அறிவாயிருக்கிறது; அதன் உள்ளீடான தன்மை உண்மையும், அகண்டமுமாயிருக்கிறது. 'இல்மெ ஹக்தர் இல்மெ சூபிஙும் வதைவது' — சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்திருக்கிறது.

'கைர்' என்னும் வேற்றுமையைப்பற்றிய அறிவு மறைந்துவிடுவதுதான் 'பனா'வாகும். 'கைர்' என்னும் வேற்றுமையின் அறிவுமறைந்த பிறகு ஒருவன் அடையப்பெறும்

ஹீக்குடைய அறிவுதான் 'பகா'வாகும். விலாயத்தை அடையப் படும் சுலூக்குடைய முடிவான எல்லையிலிருக்கும் 'நுக்தா' வென்னும் இந்த புள்ளியை ஒருவன் அடைகிறான்.

இன்னல்லாஹகலக ஆதம அலாசூரத்திஹி (ஹதீது குத்ஸீ) ஹக்கு தனது சுயவடிவிலே மனிதனை சிருஷ்டித்தான். 'கைபு;' 'ஷஹாதத்து.' 'ரூஹு,' 'அம்தால்,' என்னும் நிலைமைகள் சகலவற்றையும் 'ஹக்'குடைய 'தாத்து' சூழ்ந்தறி கின்றது அதைப்போன்று மனிதனுடைய அகமியமும் (ஹகீகத்து இன்ஸானீ) அவைகளை சூழ்ந்திருக்கின்றது; ஒன்று ஹகீகத்தாகிய அகமியத்திலும். மற்றொன்று கண்டிப்பிலும் செய்கின்றது "மன் அரப நப்ஸஹு பகத் அரபறப்ப ஹு" தனது றப்பை இந்த நிலைமைகள் யாவற்றையும். சூழ்ந்தறிவ தாக அறிந்த ஒருவன்தானே அவைகள் யாவற்றையும் சூழ்ந் தறிவதாகத் தன்னை அறிந்துகொள்கிறான். "அரப்து ரப்பீ பிறப்பீ" — நான் எனது 'றப்' பில் ரப் பாக தரிப்பட்டு இருக்கிற நிலையில் என் 'றப்'பை உணர்ந்தேன். உன்னுடைய 'தாத்து' 'சிபாத்து' 'அப்ஆல்' ஆகியவற்றை 'ஹக்கு'டைய 'தாத்து' 'சிபாத்து' 'அப்ஆல்' ஆகக் கருதி ஒன்றுபடுவாயாக. இதுவே 'ஷுக்காரியா'க்களின் பாதை "அப்பியாஸங்களையும், 'முஜாஹதா'வென்னும்கெண்டிப்பையுங்கடைபிடித்துஉன்னுடைய நப்சை 'பனா'வின் வழியிலும். 'ஹக்'கையதை'பகா'வின் வழியி லும் உனது நப்ஸை 'உபூதியத்து' என்னும் அடிமைத்தனத்தின் வழியிலும். அவனுடையதை ருபூபியத்து என்னும் இரட்சகத் தனத்தின் வழியிலும் (நிலைநாட்டி) கருதுவாயாக என்று கூறும் (அப்ரார். அக்யார்களின்) பாதை மற்ற 'ஆரீபீன்'களுடைய பாதையன்று வேற்றுமை பாதையால் அறிவது இந்த (மேற் கூறப்பட்ட) ஹதீதின் தாத்பரியமன்று.

இச்சையானது 'ஷிர்க்கு-கபீ' என்னும் அந்தரங்க இணையாகும், அது சரீரத்தின் சகல அவயங்களிலும் ஊடேறிச் சென்று ஒவ்வொரு நரம்பிலும் உறைந்திருக்கிறது. "'லாயுஃமினு அக்தாஹும்பில்லாஹி இல்லாஹும் முஷ்ரிகூன்" அவர்கள் அல்லாஹ்வின் மீது விசுவாசங்கொண்டிருப்பினும்

களுக்கு பயிற்சிமுறை

அநேகர் இன்னும் அவர்களுள் 'முஷ்ரிக்'காகவே இருக்கின்றனர். 'முஷ்ரிக்கு'டைய அகங்காரத் தன்மை 'ஷைத்தானீ'யாக இருக்கின்றது. அது அவனுடைய ஹிருதயத்திலிருந்து நீங்காதவரை 'ஹக்கு'டைய 'ஹுவியத்'தாகிய 'அவன்' என்னும் படர்க்கைத் தன்மை அதில் தோற்றமளிக்காது.

13-வது அத்தியாயம்

(' அத்கார், ' ' அஷ்கால், ' — தியான அப்பியாஸ முறைகள்)

தனிமையில் தானுக தன்னல் செய்யப்படும் 'திக்று' 'ஷுக்லால்' அதிக பலனில்லை பலன்தரதக்க கருக்தோர்மித்த ஒரு 'பீரு'டைய செல்வாக்கின் கீழிருந்தாலன்றி எண்ணங்கள் ஓர்மிக்காது விருப்பமுடையோரின் விஷயத்தில்தான் 'பீரு'டைய செல்வாக்கு பெரிதும் பலன் தரதக்கதாயிருக்கிறது. 'பஹு'உடைய நிலையை அடைந்துவிட்ட 'பீர்' தனது முரீதையும் அவ்வாறே ஆகச் செய்யலாம். ஒரு பஞ்சுப் பொதி பூதக் கண்ணுடியானது இரண்டு வஸ்துக்களுக்கிடையில் குறிக்கிட்டதும் பஞ்சு உடனே தீப்பற்றிக்கொள்கிறது சூரிய வெளிச்சத்திஞல் நெருப்புப் பற்ருமல் சதாதரிபட்டிருக்கிறது. 'மாஸிவல்லாஹ்' (அல்லாஹ்வின் 'வேறு') வைப் பார்க்காத வகையில் ஒரு சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞானி குருடாகத்தானிருக்கிருர். 'மாஸிவல்லாஹ்'வை மட்டும் பார்க்கும் ஒரு முரீதும் குருடனுகவேதானிருக்கிருன் 'ஹக்'கைப் பார்க்காத குருடாக 'பீர்' இருந்தால் அவர் குருடனுக்கு வழி காட்ட முடியாது. 'ஸைர்' இல்லாஹ் அல்லாஹ் அளவில் யாத்திரையை முடித்துக்கொண்டு 'பீர்' ஸைர் பில்லாஹ் (அல்லாஹ்வில் யாத்திரை)யினுள் நுழைகிருர். ஆனல் 'அவர் தனது ஆத்மீகப் பலத்திஞல் 'ஸைர் இல்லாஹ்வை' மறுபடியும் 'முரீதுடன்'டன் தொடங்கி முரீதை படிப்படியாக அதன் முடிவான எல்லைக்குக் கொண்டுபோய் சேர்க்கிருர்.